272

272
4.50

கலைக்கதிர்

விக்ருதி - மாத வெளியீடு - ஐப்ப



நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்துக்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணாக்கு சர்க்காரின் நிர்ணய விலைக்கு விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் தாராளமாகக் கொடுக்கிறோம்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

பாப்பநாய்க்கன்பாளையம்

தபால் பெட்டி நெ. 151 கோயமுத்தூர்

Estd. 1933. Telegram: VENKATESA, Udamalpet.

ஸ்ரீ

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்,

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்,
உடுமலைப்பேட்டை.

100நெ. வரை மெல்லிய ரக பருத்தி நூல்கள் நூற்பதில் பிரசித்தி பெற்றது.

எங்கள் புதிய தறிகளிலிருந்து வெளிவந்த தரத்தில் சிறந்த துணி ரகங்கள் புகழ்பெற்று விளங்குகின்றன.

சலவை மில்லும் தயாராகிறது.

1951-ம் ஆண்டில் உயர்ந்த சலவைத்துணிகளும் வெளிவரும்.

மானேஜிங் ஏஜண்டுகள்:

ஜி. வி. கோவிந்தசாமி நாயுடு அண்டு கம்பெனி.

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம் மானேஜ்மெண்டு தொழிலாளர்
ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்
சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே
நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்
இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அநுபவம் நிறைந்தவர்களால்
நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல
டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்.

Managing Agents :—
N. APPUSWAMY NAIDU & CO.,

Managing Director:—
G. V. MUTHUSWAMY, B. Sc.,



பின்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை:

★

மேட்டுப்பாளையம்		திருவண்ணாமலை
பாளையங்கோட்டை		காஞ்சீபுரம்
கோவில்பட்டி		மானாமதுரை
திருப்பத்தூர்		தஞ்சாவூர்
விழுப்புரம்	தென்காசி	திருவையாறு

★

கலைக்கதிர்

பீளமேடு :: கோவை

P. ராமசாமி அண்டு சன்ஸ்

மரம் & பர்னிச்சர் வியாபாரம் & கண்ட்ராக்டர்கள்

மேட்டுப்பாளையம் ரோடு. :: R. S. புரம், கோயமுத்தூர்.

○ ● ○

கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்த தற்கால நாகரிகத்திற்கேற்ற பர்னிச்சர்கள், பிரம்பு சேர் வகையருக்களும் எங்கள் ஷோரூமில் ஸ்டாக்கில் இருக்கின்றன.

மேலும்,

உங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பர்னிச்சர்களும் ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் கேரண்டியுடன் செய்து கொடுக்கிறோம்.

மற்றும்,

கட்டிடங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான சாமான்களும் சப்ளை செய்கிறோம்.

○ ● ○

தேவைக்கு விஜயம் செய்யுங்கள்!

Gram : "MILLSTORES"

THE COIMBATORE MILL STORES AND GENERAL SUPPLIES CO.,

★

Head Office :
4/35, RACE COURSE,
COIMBATORE.

Branch :
ELECTRICAL & HARDWARE DEPT.,
23/315, VYSIAL STREET,
COIMBATORE.

DEALERS IN :

COTTON
MILLSTORES
MACHINERY
HESSIAN & TWINE
PACKING PAPERS
ELECTRICAL GOODS
HARDWARE ETC.

Phone: 130 Grams: ENERGY

A. PERA NAIDU & SONS,

MILLSTORE FURNISHERS AND MACHINERY MERCHANTS,

5/329, AVANASHI ROAD : : COIMBATORE.

Dealers in the following
Millstore goods and stockists of:

English and Foreign make bobbins
of all types. Birchwood bobbins.

English and American Leather
Beltings from 1" to 4".

English Roller skins and American calf skins.
Machinery cloth, Roller cloth, Clearer
cloth and Endless flannels.

Weaving Accessories.

English and Indian spindle tapes $\frac{3}{8}$", $\frac{1}{2}$" and $\frac{5}{8}$".
Cotton Ropes and Cotton banding.
English and American V-Ropes
and
All other items for textile mill use.

WHEN YOU BUY 'V' BELTS,

MAKE SURE IT IS

"TEXROPE"

PRODUCT OF

ALLIS CHALMERS MFG., CO.,

ENGLAND.

DISTRIBUTED BY

PHONE: 432. TELEGRAMS: "KAMADHENU".

KESERISHIH VALLABHDAS,

TEXTILE ENGINEERS,

POST BOX NO. 702,

R. S. PURAM P.O.,

COIMBATORE.

வெற்றி!

கதைகளாக நிரப்பாமல்

வர்ணங்களை அள்ளிக்கொட்டாமல்

பயன் நிறைந்த

கட்டுரைகளை வெளியிடும்

ஒரே பத்திரிகை என்ற

புகழைப் பெற்றிருப்பது

★ ★

கலைக்கதிர்

ஆண்டுச் சந்தா 6 ரூ. பூளைமேடு, கோவை.



M. S. P. டைப் மோட்டார்

S. டைப் பம்பு

லேத்





A. C. மோட்டார்



B. S. டைப் பெல்ட் பம்பு



பேலிங் பிரஸ்

கரும்பாலை

PSG

எங்கள் உற்பத்திகள்

எலக்டிரிக் மோட்டார்கள்
சென்ட்ரிப்யூகல் பம்புகள்
விவசாயக் கருவிகள், இயந்திரங்கள்

டெக்ஸ்டைல் மெஷினரி
ஆயில் மில்லிங் மெஷினரி
மெஷின் டூல்ஸ்

பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்,
பூளைமேடு போஸ்டு, கோயமுத்தூர், (தென் இந்தியா).



— தயார் செய்பவை —
PSG
① மெஷின் டூல்ஸ்
② எலக்டிரிக் மோட்டார்கள்
③ சென்டிரிபியூகல் பம்புகள்
④ டெக்ஸ்டைல் மெஷினரி
⑤ ஆயில் மில்லிங் மெஷினரி
⑥ விவசாயக் கருவிகள்
①
லேத்து
ரேடியல் டிரில்லிங் மெஷின்
மெகானிக்ஸ் வைஸ்
②
ஏ.சி. மோட்டார்
எலக்டிரிக் சைரன்
எக்ஜாஸ்ட் பேன்
③
பி.எஸ். டைப் பம்பு
எஸ். டைப் பம்பு
எச். டைப் பெல்ட் பம்பு
④
காட்டன் ஜின்
பண்லிங் பிரஸ்
ரீலிங் மெஷின்
பேலிங் பிரஸ்
⑤
ஆயில் எக்ஸ்பெல்லர்
பில்டர் பிரஸ்
டிசின்டிகிரேடர்
⑥
கவலைஉருளை
கலப்பை
கரும்பு ஆலை
தூற்றும் இயந்திரம்
பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்
பூளைமேடு
கோயமுத்தூர்
(தென் இந்தியா)

கலைக்கதிர்

மலர் – உ   விக்ருதி : ஐப்பசி   இதழ் – கக

ஆசிரியர் :
திரு. ஜி. ஆர். தாமோதரன்,
B. Sc. Elec., B. Sc. Mech. (Durham), A. M. I. E. E. (London)

★

இந்த இதழில்

ஹூவர் (போல்டர்) அணை
பிற உறுப்புக்கள் (நாடகம்)
"அம்மா பெரிதென்று......"
தவிப்பு
அடுத்த வீட்டு ரேடியோ
சுழற்காற்று
உள்ளத்தின் உண்மை
பகற் கனவு
மனித தரிசனம்
நவீன சூரபன்மர்
வினாக்களும் விடைகளும்
ராயரால் வந்த வினை
மை இல்லா எழுத்து
38-வது அட்சாம்சம்
கி. பி. 2000

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

விலை அணா 8

ஹூவர் (போல்டர்) அணை

ஜி. ஆர். தாமோதரன்

கொலராடோ ஆற்றின் ஆற்றலையும், அதனுடைய அற்புதத் திருவிளையாடலையும் சென்ற கட்டுரைகளில் வரைந்தேன். இதன் நீளம் சுமார் 1700-மைல். இது உயர்ந்த கரடு முரடான மலைகளில் உற்பத்தியாகித் தெற்கில் அட்லாண்டிக் கடலில் கலிபோர்னியா வளைகுடாவில் கடலொடு கலக்கிறது.

நீளத்தில் பாதிக்குமேல், அதாவது சுமார் 1000 மைல்கள், நிலப்பாகத்தையும், மலைகளையும் குடைந்து ஓடுகிறது இந்த ஆறு. இதன் வழியில் பல ஆற்றுக்குடைவுகள் (Canyons) இருக்கின்றன. இவைகளுள் கிராண்ட் கேனியன்[1] மிகப் பெரியது. கிராண்ட் கேனியனை விட்டதும் கொலராடோ ஆறு தெற்கு நோக்கி ஓடி 270 மைல்கள் செல்வதற்குள் 3 ஆற்றுக் குடைவுகளை உண்டாக்கியிருக்கின்றது.

1. ஐஸ்பர்க் கேனியன் (Iceberg Canyon)
2. ட்ரேவெர்டைன் கேனியன் (Travertine Canyon)
3. போல்டர் கேனியன் (Boulder Canyon)

கிராண்ட் கேனியனின் இறுதிப் பாகத்திற்கும் போல்டர் கேனியனுக்கும் இடையே ஒரு பெரிய செயற்கை ஏரி மனிதனுடைய நுண்ணறிவினால் சமீப காலத்தில் தோன்றியிருக்கிறது. இது மீட் ஏரி (Lake Mead) எனப்படுகிறது. இதனுடைய நீர்ப்பரப்பு சுமார் 1½ லட்சம் ஏக்கர் ஆகும். இத்தனை நீர்ப்பரப்பு கொலராடோ ஆற்றின் தேக்கத்தினால் ஏற்பட்டிருக்கிறது.

பல்லாயிரம் ஆண்டுகளாக, தடுக்கப்படாமல் ஓடிக்கொண்டிருந்த ஆறு இன்று இங்கு முடக்கப்பட்டிருக்கிறது. ஒரு மைல் ஆழம் வரையில் மலைகளைக் கூடக் குடையும் ஆற்றலைப் படைத்த நீரின் ஓட்டம் அமைதியுடன் பதுங்கி விடும்படி செய்யப்பட்டிருக்கிறது. தன்னுடைய சக்தியை அடக்க யாவராலும் இயலாதென்று இதுகாறும் இறுமாப்புடன் ஓடிக்கொண்டிருந்த ஆறு, இன்று மனிதனுக்கு அடிமையாகிப் பல வகையான சேவைகளை ஆற்றிவருகிறது. மனிதன் தன்னுடைய அறிவுத் திறனால் இயற்கையின் சக்திகளைப் பயன்படுத்திக்கொள்ளுகிறான். இதற்கு எடுத்துக்காட்டாகச் சிறப்புடன் விளங்குவது இந்தக் கொலராடோ ஆற்றின் நீர்த்தேக்கமாகும். இது போல்டர் கேனியனில் அமைந்திருப்பதால் போல்டர் அணை (Boulder Dam) என அழைக்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஹூவர் காலத்தில் உருவாக்கப்பட்டதால் 'ஹூவர் அணை' எனக் கூறப்படுகிறது.

கல் மரங்களையும், டினோசார் அடிச்சுவடுகளையும் கண்டு வியப்புற்று, காலத்தின் எல்லையற்ற வரம்பினையும், அதனுடைய அரும்பெருஞ் செயல்களையும் சிந்தித்த வண்ணம், ஹூவர் அணையை அடைந்தேன்.

உலகத்தில் ஓடும் கொடிய ஆறுகளில் கொலராடோ ஆறும் ஒன்றாகும். கிராண்ட் கேனியனை இறுமாப்புடன் ஊடுருவிப் பாயும் காட்சியைக் கண்ட எனக்கு, இங்கே சாந்தமாகப் பெட்டியினுள் பதுங்கிக் கிடக்கும் பாம்பினைப் போலிருக்கும் கொலராடோ மிக்க வியப்பை ஊட்டியது. இவ்வாற்றினை முதன் முதலாக, அமெரிக்காவில் குடியேறிய ஸ்பெயின் தேசத்து மக்கள்

1 கிராண்ட் கேனியனின் அற்புதத்தைக் குறித்துத் தனிக்கட்டுரை கலைக்கதிர் விக்ருதி வைகாசி இதழில் வெளியாகியிருக்கிறது.

1540 ஆண்டில் கண்டுபிடித்ததி லிருந்து சுமார் நானூறு ஆண்டுகளாகச் சாகுபடிக்கு இதனை நம்பிப் பயன் படுத்த இயலாமற் போயிற்று. நிலப் பாகங்களும் நீர்ப்பாசன வசதியின்றி வளம் பெற வாய்ப்பில்லாம லிருந்தன. கொலராடோ கடலில் சங்கமமாவதற்கு முன் அரிஜோனு, கலிபோர்னியா எனப்படும் இரு மாகாணங்களுக்கு முறையே வடக்கு தெற்கு எல்லையாக அமைகிறது. அங்குள்ள குடிமக்கள் ஆற்றைத் தடுத்து ஆற்றின் தண்ணீரைப் பயன்படுத்த முயன்முர்கள். ஆறு அடக்கப்பட்டதால் வெள்ளக் காலங்களில் கரை புரண்டு பயிர்களை அழித்தது. கோடைக்காலங்களில் குடிகள் ஏமாறும் வண்ணம் ஆற்றில் தண்ணீர் மிகக் குறைவாக ஓடிற்று. நிரந்தரமாக என்றும் விவசாயத்திற்கு வேண்டிய அளவு தண்ணீரைப் பெறுமாறு ஏற்பாடுகள் செய்ய முனையலாயினர்.

கொலராடோவினைப் பயன்படுத்தி அதனல் பற்பல நலன்களைத் துய்க்க வேண்டுமென்ற அவா ஒருபுற மிருக்க வெள்ளக் காலங்களில் அதனுடைய நாசவேலைகளையும், அட்டகாசத்தையும் தடுக்கவேண்டு மென்பதை முதலில் கவனிக்கவேண்டிய தாய்விட்டது. இவ்வாற்றின் மூர்க்கத் தன்மையைக் கண்டு யாவரும் அஞ்சினர். பழங் காலத்தில், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் காலிபோர்னியா வளைகுடா இப்பொழுது கொலராடோ சங்கமமாகும் இடத்திலிருந்து இன்னும் வடமேற்கே அதிகமாக நீண்டிருந்ததாகக் கருதப்படுகிறது. இந்த ஆறு நாள்தோறும் ஆண்டு தோறும், மண்ணையும் மணலையும் வளைகுடாவிற்குக் கொணர்ந்து இறக்குமதி செய்தது. இவ்வாறு கொணரப்பட்ட மண்ணும் மணலும் ஒரு பெரியத் திட்டாகத் தோன்றிக் கலிபோர்னியா வளைகுடாவின் வட பாகத்தைத் தென்பாகத்திலிருந்து பிரித்தது. இவ்வாறு பிரிக்கப்பட்ட வடபாகம் ஒரு பெரிய ஏரியாக அமைந்துவிட்டது. இது 'சால்டன் கடல்' (Salton sea) எனப்படுகிறது. கொலராடோ, கடலில் சேர்வதற்கு வழி தேடிக்கொண்டது. 1900-ம் ஆண்டில் எஞ்சினீயர்கள் நீர்ப்பாசனத் திற்காக, கொலராடோ ஆற்றிலிருந்து வாய்க்கால்கள் வெட்டினர்கள். வெள்ளக் காலங்களில் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட வில்லை. சுமார் 5, 6 ஆண்டுகளில் உண்டான வெள்ளப் பிரவாகங்களால் கரைகளை உடைத்துப் புதிய வழியில் ஆறு ஓடலாயிற்று. சால்டன் கடலுக் குள் நுழைந்து அதனை நிரப்பிற்று. ஒவ்வொரு வெள்ளக் காலத்திலும் அந்த ஏரியின் நீர் பரப்பு அதிகரித்தது. கலிபோர்னியாவின் கீழ்ப்பாகம் 'இம்பீரியன் பள்ளத்தாக்கு (Imperial Valley) எனப்படும். ஒரு செழித்த பள்ளத்தாக்கு மெதுவான கரைகளை உடைத்துக்கொண்டு பள்ளத்தாக்கை அழித்தது. அப்பாகத்தில் ஓடிக் கொண்டிருந்த ரயில் போக்குவரத்தையும் துண்டித்துவிடுமென அஞ்சினர். நீர்ப்பாசனக் கம்பெனியாரும் ரயில்வே கம்பெனியாரும் சேர்ந்து, வெள்ளத்தின் நாசவேலைகளைத் தடுக்கவும், பிரதேசத்தைப் பாதுகாக்கவும் 20 லட்சம் டாலர்கள் செலவுசெய்து உடைப்புகளை அடைத்து வரிசையாக 150 மைல்களுக்குத் திட்டுகளைக்[2] கட்டினர்கள். ஆற்றின் நீரோட்டத்தைப் பழைய வழியில் திருப்ப 18 மாதங்கள் வேலைசெய்ய வேண்டியதாயிற்று. ஆற்றினல் கொண்டுவரப்பட்ட வண்டல் சேரச் சேர, ஆற்ரேட்டத்தின் மார்க்கமே மாறிவிடும் போலிருந்தது. எனவே, திட்டுகளையும் இன்னும் அதிகமாக உயர்த்தவேண்டியதாயிற்று. இதற்கு அதிகப் பணம் தேவை.

2 இத்திட்டுகள், சால்டன் கடலுக்கு ஆற்று நீர் பாய்வதைத் தடுத்தது. தண்ணீர் வரவு இல்லாமையால் சால்டன் கடல் நாள்தோறும் வற்றிக்கொண்டே இருக்கிறது.

ஆற்றின் நீரோட்டத்தைக் கட்டுப் படுத்தி, அதன் நீரை இயன்ற அளவு பயன்படுத்தவேண்டு மென்று மக்கள் விரும்பி அரசாங்கத்தை வேண்டினர். கொலராடோ தண்ணீருக்கு உரிமை யுடைய ஏழு மாகாணங்களும், மத்திய அரசாங்கமும் கூடி ஆலோசித்தார் கள். யுனைடெட் ஸ்டேட்ஸ் காங்கிரஸ் போல்டர் கேனியனில் அணையைக் கட்டச் சட்டமியற்றியது.

யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்கத்தின் உள் நாட்டு இலாகாவைச் சேர்ந்த (Bureau of Reclamation) நிலமீட்சிச் சங்கம் சர்வே செய்து, அணையைக் கட்டுவதற்குப் போல்டர் கேனியன் தகுந்த இடமென்று தீர்மானித்தது. உலகத்திலேயே பெரியதாகக் கருதப்படும் ஐந்து அணைகளை இச் சங்கம் கட்டிப் பூர்த்தி செய்திருக்கிறது. தண்ணீரின்றி வறண்ட (Arid Regions) நிலங்களுக்கு நீர்ப்பாசனத் திட்டங்களையும் அதற்குச் சம்பந்தப்பட்டவைகளையும் நிர்மாணிக்க இச் சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது. தீர ஆலோசித்துச் சிறந்த திட்டங்களை மேற்கொண்டு, முடிவுசெய்து வெற்றிகொண்டிருக்கிறது இச் சங்கம். இதன் சாதனைகளின் பயனாக லட்சக் கணக்கான ஏகர் நிலங்கள் தரிசாக இருந்தவை சாகுபடி செய்யப்படுகின்றன. பல விவசாயிகள் குடியேறி நலமுடன் வாழ்கிறார்கள். தேசிய வருமானத்திலும் 50 லட்சம் டாலர்கள்[3] அதிகரித்துவிட்டது. நிலமீட்சித் திட்டங்களின் செலவுகள் யாவும் மத்திய அரசாங்கம் (Federal Govt.) ஏற்றுக்கொண்டு அவைகளின் வருமான வாயிலாகச் செலவுகளை ஈடு செய்துகொண்டு வருகிறது.

போல்டர் கேனியன், பல காரணங்களாலும் அணை கட்டுவதற்குத் தகுதியாக அமைந்திருக்கிறது. இரு பக்கங்களிலும் தண்ணீர் தேங்குவதற்கேற்றவாறு இயற்கைச் சுவர்கள் இருத்தல் அவசியம். இங்குக் கருங்கல் மலைகள் இரு புறங்களிலும் கோபுரங்களைப் போல் உயர்ந்திருக்கின்றன. இவைகளின் இடையே ஆறு ஆழமாக ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது. 115 மைல் நீளம் நீர் தேங்குவதற்கு வசதியாக இயற்கைச் சுவர்கள் அமைந்திருக்கின்றன. அஸ்திவாரத்திற்கும் உறுதியான கல் (Bed Rock) வெகு அண்மையிலிருக்கிறது. சிறிய அணையைக் கொண்டு அதிக நீரைத் தேக்கமுடியும். ரயிலுடனும், முக்கியச் சாலைகளுடனும் இணைப்பதற்கு இலகுவான இடத்திலும் அமைந்திருக்கிறது.

போல்டர் அணை, 1931-ம் ஆண்டில் துவக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளில் (1936-ல்) துரிதமாகக் கட்டி முடிக்கப்பட்டது. இந்த மாபெரும் அணை கட்டப்பட்ட வரலாறு மிக்க வியப்பை ஊட்டுகிறது. அணைக் கட்டிடத்தில் ஈடுபடும் வேலையாட்களும் நிபுணர்களும் வசிப்பதற்கு ஒரு நகரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. அணையில் கோடைக் காலத்தில் வெப்பமும் கானலும் அதிகமாயிருக்குமாதலால், அணையிலிருந்து 7 மைல் தூரத்தில் ஒரு உயர்ந்த பீடபூமியில் நகரம் உண்டாக்கப்பட்டது. இது 'போல்டர் நகரம்' என வழங்கப்படுகிறது. இங்கு எல்லா வசதிகளும் உள்ளன.

அணையைக் கட்டிமுடிக்கும் வரையில் ஆற்றின் நீரை வேறு வழிகளில் திருப்பவேண்டியது அவசியம். ஆற்றின் இரு புறங்களிலும் கருங்கல் மலைகள் வெகு தூரம் உயர்ந்திருப்பதால் அவை குடையப்பட்டன. ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டாக நான்கு தூரப்புகள் (Tunnels) துளைக்கப்பட்டன. இக் குடைவு அணையைச் சுற்றிக்கொண்டு, அணையின் கீழ்ப்புறம் ஆற்றுடன் இணைக்கப்பட்டது. குடைவின் நீளம் சராசரி $\frac{3}{4}$ மைலுக்கு மேலிருக்கும். முதலில் 56 அடி விட்டத்தில் குடையப்பட்டு, 3 அடி கனமுள்ள சிமெண்டு கான்கிரீட் கலவை

3 ஒரு டாலர்=ரு. 4—12—0.

சுற்றிலும் பூசப்பட்டது. முடிவில் குடைவு 50 அடி விட்டம்தானிருந்தது. இந்த மலையைக் குடைவதற்கு ஒரு தனிப்பட்ட இயந்திரம் உபயோகிக்கப்பட்டது. அது 'ஜம் போஸ்' எனப்படும். அதில் ஒவ்வொன்றிலும் துளை செய்வதற்கு 30 துளைக் கருவிகள் (Drillers) இருந்தன. ஜம் போஸ் கடினமான கல்லில் 5, 10, 20 அடி தூரம் துளைசெய்யும்போது பெருத்த இரைச்சல் இருந்ததாக அந்த அணையிலிருந்த வழிகாட்டி (Guide) கூறினர். துவாரங்கள் துளைக்கப்பட்டதும், அவைகளினுள் வெடிமருந்து செலுத்திக் கல் உடைக்கப்பட்டதாம். அக்காலங்களில் கேனியன் சுவர்கள் அதிர்ந்தனவாம். உடைத்துத் தகர்ந்த கற்களை மின்சாரத்தால் இயங்கிய வண்டிகள் அப்புறப்படுத்தின. ஒவ்வொரு உடைப்பும் சுமார் 17 அடி நீளமுள்ள குடைவைச் செய்தது. நான்கு குடைவுகளும் ஒரு ஆண்டில் முடிக்கப்பட்டன. இந்தக் குடைவுகள், ஆற்றின் வெள்ளத்தால் அணைக் கட்டிடத்திற்குத் தீங்கு நேரா வண்ணம், தண்ணீரை வெளியேற்றின.

அணையை எழுப்புவதற்கு முன், கேனியனின் கருங்கல் சுவர்களில் வெகு உயரத்தில் முன்னால் புடைத்துள்ள கற்களையும், இளக்கமான கற்களையும் செதுக்கவேண்டியதாயிற்று. கேனியன் சுவர்களில், அணையைப் பதியவைப்பதற்கும் மின்சார உற்பத்தி நிலையங்களுக்கு அச் சுவர்களைப் பின் சுவர்களாக அமைத்துக் கொள்வதற்கும், சுவர்களில் உயரமான பாகங்களில் செதுக்க வேண்டியதாயிற்று. இந்த வேலை எல்லாவற்றைக் காட்டிலும் மிக்க பயங்கரமானது. மனோதிடம் படைத்த வீரர்களே இவ்வேலைக்கு வந்தார்களாம். இவர்கள் எவ்வாறு வேலைசெய்தார்களென்று வியப்புடன் வழிகாட்டியை வினவினேன். மயிர் சிலிர்க்கும் வகையில் அவர் வர்ணித்தார். கேனியனின் விளிம்புகளில் எஃகுத் தூண்கள் உறுதியாக நடப்பட்டன. இத் தூண்களுக்குக் கயிறுகள் இணைக்கப்பட்டுக் கேனியனின் சுவர்களை ஒட்டிக் கீழே தொங்கவிடப் பட்டன. வேலையாட்கள் கயிறுகளின் வழியாக இறங்கி, அக் கயிறுகளுடன் தங்களைப் பந்தோபஸ்தாக கெட்டியான முடிச்சுகளால் இணைத்துக்கொண்டு வேலை செய்தார்களாம். துளை செய்வதால் தோன்றும் புழுதியிலும், வெப்பத்திலும் சோர்வடையாமல் இவர்கள் உழைத்தார்கள். அவர்கள் அந்தரத்தில் தொங்கிக்கொண்டு வேலைசெய்த காட்சி பயத்தை உண்டுபண்ணியதாம். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் வேலை செய்ததில் ஏழு பேர்தான் உயிரிழந்தார்களாம். கேனியன் விளிம்பிலிருந்து கம்பிகளின் வழியாகத் தொட்டில்களில் வேலை ஆட்களுடன் சாமான்களும் வேலைசெய்யும் இடங்களுக்குச் செலுத்தப்பட்டன.

தேக்கப்படும் தண்ணீர், அணையை வில் வளைவாக மோதுமாறு அணைகட்டப்பட்டிருக்கிறது. 40 அடி ஆழத்திலேயே அஸ்திவாரத்திற்கு ஏற்ற கடினமான (Bed Rock) கல் கிடைத்தது. மண்ணும் மணலும் பெருங் கற்களும் நிரம்பி இருந்ததால் தோண்டுவது சுலபமாயிருந்தது. நடுவில் நீளமாக 80 அடி அகலத்தில் ஒரு பிளவு இருந்ததாம். அங்கு மாத்திரம் இன்னும் 100 அடி அஸ்திவாரத்திற்காகத் தோண்டவேண்டியிருந்ததாம். நிலநூலோர் சுமார் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பனிக் காலத்தில் (Ice age) இப்பிளவு அறுக்கப்பட்டிருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். இப் பிளவின் கரையில் 6"×2" அளவுள்ள ஒரு மரத்துண்டு காணப்பட்டதாம். அது இயந்திர வாளினால் அறுக்கப்பட்ட மரத்துண்டாதலால், வெகு சமீபத்தில், வெள்ளத்தில் அடித்துக்கொண்டு வந்திருக்க வேண்டும். ஆற்றடியில் 40 அடிக்குக் கீழ் மரத்துண்டு தென்பட்டதால், 50 ஆண்டுகளுக்குள்ளாக ஒரு பெருத்த

வெள்ளம் 40 அடி ஆழத்திற்குத் துளைத்துக் கொண்டுபோயிருக்க வேண்டுமென்று ஊகிக்கின்றனர்.

பலவகையான இயந்திர சாதனங்கள் அணை கட்டும்போது உபயோகிக்கப்பட்டன. பல மனிதர்கள் செய்யும் வேலையை விரைவில் ஒரு இயந்திரம் செய்ததால் அணை குறுகிய காலத்தில் கட்டப்பட்டது. கூழாங்கற்கள், கற்கள், மணல் இவைகளை அளவிற்கேற்றவாறு இயந்திரங்கள் பிரித்தன. சிமெண்டு, கற்கள், மணல் இவைகள் குறித்த அளவுகளில் கலந்த கான்கிரீட்டை 16 டன், 20 டன் கணக்கில் வெகு சீக்கிரத்தில் இயந்திரங்கள் தயார் செய்தன. இக் கலவையை அணையில் வேலை செய்யும் இடங்களுக்குச் சேர்க்கப் பொறிகள் அமைக்கப்பட்டன. கேனியனின் இரு விளிம்புகளிலும் உயர்ந்த இரும்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டு, அவை தண்டவாளங்களின் மீது நகர்ந்து சென்றன. 25 டன் எடையைத் தாங்கும் சக்தியையுடைய கம்பிகள் கேனியனுக்குக் குறுக்காகக் கோபுரங்களுடன் இணைக்கப்பட்டன. இக்கம்பிகளின் வழியாகச் சிமெண்டுக் கலவையும், மற்றப் பொருள்களும் செலுத்தப்பட்டன. கோபுரங்களை நகர்த்தியும் கம்பி வழிகளை ஏற்றவாறு திருப்பியும் வேண்டிய இடங்களுக்குப் பொருள்களை அனுப்ப வசதியிருந்தது. அதில் பெரிய கோபுரம் ஏழு அடுக்கு மாடி உயரம் இருந்தது. இந்தப் பொறிகள் மின்சாரத்தால் இயங்கின. வேண்டிய இடத்திற்கு வேண்டியதை வரவழைக்க ஆங்காங்கு டெலிபோன் அமைக்கப்பட்டிருந்தது.

அணை கட்டப்பட்ட வரலாற்றினை விளக்கும் பல படங்களை அங்கு நான் கண்டேன். வழிகாட்டி அப்படங்களின் துணையைக் கொண்டு அணையின் பெருமையைச் சித்தரித்தார்.

ஆற்றடியிலிருந்து கான்கிரீட் தூண்கள் செங்குத்தாக எழுப்பப்பட்டன. தூண்கள் ஒன்றுக்கொன்று நன்கு நெருக்கமாகக் கோக்கப்படுமாறு கட்டப்பட்டன. சிமெண்டுக் கலவையினால் கட்டப்பட்டதால் பல பிரசினைகள் தோன்றின. சிமெண்டு கான்கிரீட் குளிரினால் இறுகும்போது வெடிப்புகள் உண்டாகும். நிபுணர்கள் நன்கு ஆலோசித்து ஆராய்ச்சி செய்தார்களாம். யாவும் முடிந்த பிறகு, கான்கிரீட் படியும்போது அதனுடைய வெப்பம் 138 டிகிரி இருக்கும். அணை தானாகக் குளிர்வதற்கு 150 ஆண்டுகள் செல்லும். அதற்குள் ஒழுங்கற்று இறுகுவதால் வெடிப்புகள் தோன்றும். இதனைத் தவிர்க்க ஒரு வழி கண்டுபிடித்தார்கள். கான்கிரீட் தூண்கள் கட்டும்போதே சராசரி 5 அடி தூரத்தில் செங்குத்தாகவும், கிடையாகவும் (horizontal) ஒரு அங்குலக் குழாய்கள் இடை இடையே வைக்கப்பட்டன. குளிர் ஊட்டிப் பொறி (Retri—geration plant) களால் குளிர்ச்சி செய்யப்பட்ட தண்ணீர் இக் குழாய்கள் வழியாகச் செலுத்தப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட குழாய்கள் 500 மைல் நீளமிருந்தனவாம்.

கான்கிரீட்டின் சீதோஷ்ணம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்தது. இவ்வாறு 20 மாதங்கள் செய்யப்பட்டன. கான்கிரீட் குளிர்ந்ததும் இறுகிற்று. வெடிப்புகள் தோன்றின. வெடிப்புகளில் சிமெண்டுக் கலவை மீண்டும் ஊட்டி உறுதியாக்கப்பட்டது. உலகத்திலேயே அதிக உயரமான அணை ஹூவர் அணைதான். இதன் உயரம் 726 அடி. அணையின் அகலம் அடிப்பாகத்தில் 660 அடி; மேல் பாகத்தில் 45 அடி. அணையின் நீளம் 1280 அடி.

மின்சார உற்பத்திக்கும், வேண்டிய அளவு ஆற்றில் ஓடுவதற்கும், அணையில் தேக்கப்படும் தண்ணீரை வெளியேற்ற அணைக்கு அருகில் இரு பக்கங்களிலும் இரண்டு, இரண்டு கோபுரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இரண்டு கோபுரங்கள் மேல் கோபுரம் கீழ்க் கோபுரம் என 50 அடி தூரத்திலிருக்கின்றன. ஒவ்வொரு கோபுர

மும் 400 அடி உயரமிருக்கின்றது. சுமார் 34 மாடிகளைக் கொண்ட கட்டடம்போ லிருக்கிறது. உருளை வடிவமுடையது. கோபுர விட்டத்தின் உள் ளளவு 30 அடி; வெளி அளவு 75-அடி. கோபுரத்திற்கு 12 செதில்கள் இருக்கின்றன. இக்கோபுரங்கள் கேனியனின் கல் சுவர்களில் பொருத்திக் கட்டப்பட்டுள்ளன. ஆற்றடிக்கு 250 அடி உயரத்திலிருந்து கோபுரங்கள் எழுகின்றன. இவ்வளவு உயரத்திலிருந்தால்தான், மண்ணும் மணலும் அடியில் தங்கிவிட, தெளிந்த தண்ணீர் வெளியே போகும். தண்ணீரை வெளியேற்றுவதற்கு ஒவ்வொரு கோபுரத்திலும் ஒன்று அடியிலும் மற்றொன்று 150 அடி உயரத்திலும் ஆக, இரண்டு கதவுகள் இருக்கின்றன. இக் கதவுகளும் உருளை வடிவமுடையன. ஒவ்வொரு கதவும் 11 அடி உயரம் 32 அடி விட்டமுடையது. ஒரு கதவு 5 லட்சம் பவுண்டு எடையிருப்பதால், மின்சாரத்தினுல்தான் திறக்கப்படுகிறது; மூடப்படுகிறது. கோபுரத்தின் உச்சியில் இச்சாதனம் அமைக்கப்பட் டிருக்கிறது.

நான் அணைக்கு வரும்போது அணையிலிருந்து பிரிந்து ஒரு பெரிய கால்வாய் செல்வதைக் கண்டேன். அக் கால்வாயைப் பெரிய பாலத்தால் கடந்தேன். வழிகாட்டியைப் பார்த்து அக் கால்வாய் எதற்காக அமைக்கப்பட் டிருக்கிறதென்று வினவினேன். அதுதான் வடிகால் என்றும் (Spillway) அத்தகைய கால்வாய்கள் தேக்கத்திற்கு இருபக்கங்களிலும் இருக்கின்றனவென்றும், வெள்ளக் காலங்களில் அவைகளின் வாயிலாக மிதமிஞ்சி வரும் தண்ணீர் வழிந்தோடுமென்றும் அவர் பதிலளித்தார். அதன் அகலம் சராசரி 150 அடி; ஆழம் 170 அடி இருக்கும். இந்தக் கால்வாயில் ஒரு யுத்தக் கப்பலை மிதக்கவிடலாம். இந்த வடிகால்களின் கதவுகளைப் பார்ப்பதற்கு வழிகாட்டி என்னை அழைத்துச் சென்றார். கதவு எஃகுப் பீப்பாய் போன்று 100 அடி நீளம் 16 அடி உயரம் உடையனவாக ஒவ்வொரு கால்வாயிலும் 4 இருக்கின்றன. இவை தண்ணீரில் மிதக்கும் தன்மையுடையன. இவை படிந்திருக்கும் காடிக்குத் தண்ணீர் வரின், பீப்பாய்க் கதவுகள் மேலெழும்; மிதமிஞ்சிய தண்ணீர் வழிந்தோடும். தண்ணீரின் மட்டம் இதன் உயரத்திற்குக் குறைந்தவுடன் தண்ணீர் கால்வாய்க்குப் பாயாது; பாய்வது நின்றவுடன் பீப்பாய்க்கதவு கீழிறங்கி மூடிக்கொள்ளும். கால்வாய் ஓர் பர்லாங்கு தூரம் வெளியில் காணப்படுகிறது. பிறகு 500 அடி கீழ் நோக்கி இறங்கி, அணை கட்டுங்கால் நீரைத் திருப்புவதற்காக அமைக்கப்பட்ட, வெளிப்பக்கமிருக்கும் தூரப்பினைச் சேர்கிறது. இது அணையின்கீழ் ஆற்றுடன் கலந்துவிடுகிறது.

அணையின்மீது மோட்டார் வண்டிகள் செல்வதற்கு 30 அடி அகலமுள்ள சாலை இருக்கிறது. இச் சாலை வழியாகக் காரில் சென்றேன்; அணையின் மேற்பக்கம் பார்த்தேன். இரு பக்கங்களிலும் கருங்கல் மலைகள் உயர்ந்து அவைகளுக்கு இடையே நீலநிறக் 'கடல்' அமைதியுடன் அமைந்திருக்கும் காட்சியைக் கண்டேன். அணையின் கீழ்ப்பாகம் பார்த்தேன். அங்கு U வடிவத்தில் கட்டிடங்கள் இருந்தன. அக் கட்டிடங்கள் மின்சார உற்பத்தி நிலையங்கள். இவைகளைப் பார்க்க ஆவலுற்றேன். அணைக் கட்டிடத்திற்குள்ளே சென்றுபார்க்க வசதி இருக்கிறது. மின்சாரத் தூக்கிகள் இருக்கின்றன. தூக்கியில் கீழே இறங்கினேன். 200 அடி உயரமுள்ள பாகத்திற்கு வந்தேன். நாம் சுலபமாக நடந்து செல்வதற்குப் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அணையினுள் அமைக்கப்பட்ட பாதைகளின் நீளம் சுமார் 2 மைல் இருக்கும். இப் பாதையில் வழிகாட்டியின் துணையுடன் நடந்து சென்றேன். அவற்றிற்கப்பால் பரந்த கடல் இருக்கின்ற

எண்ணம் என்னை அச்சுறுத்தியது. திடீரென அணை உடைந்தால் நம் கதி என்ன ஆகும் என்று திகைத்தேன். ½ பர்லாங்கு தூரம் சென்றதும் மின்சார உற்பத்தி நிலையத்தைச் சேர்ந்தேன். அணைக்குக் கீழ் இரு பக்கங்களில் இரு மின்சார நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று அரிஜோனா (Arizona) மாகாணத்தைச் சேர்ந்தது; மற்றொன்று நெவாடா (Nevada) மாகாணத்துக்கு உரியது. அங்கு நான் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் 7 மின் ஆக்கிகளைப் (Generaters) பார்த்தேன். இங்கு எவ்வாறு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறதென்பதை வழிகாட்டி விளக்கினார். ஒவ்வொரு மின் ஆக்கிக்கும், 40 அடிக்குக் கீழ், தண்ணீர்ப் பாய்ச்சலினால் சுழலும் சக்கரங்கள் (Turbines டர்பைன்கள்) அமைக்கப்பட்டிருக்கின்றன. இச் சக்கரத்தையும் மின் ஆக்கியையும் 3½ அடி விட்டமுள்ள தண்டு இணைக்கிறது. இந்தத் தண்டு ஒரு நிமிஷத்திற்கு 180 முறை சுழல்கிறது. ஒவ்வொரு மின் ஆக்கியும் 1,115000 குதிரைத் திறனுடைய மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. எந்த எந்த மின் ஆக்கி வேலை செய்கிறது என்பதை அதன் நுனியில் உள்ள விளக்கினால் அறிந்துகொள்ளலாம். டர்பைன்கள் சுழல்வதற்குத் தண்ணீர் எவ்விதம் இங்குப் பாய்கிறது? அணைத்தேக்கத்திலிருந்து தண்ணீர் கோபுரங்களின் வழியாக வெளியேறச் சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று முன்னால் கூறினேன். நான்கு கோபுரங்களிலிருந்தும் 30 அடி விட்டமுள்ள நான்கு எஃகுக் குழாய்கள் கேனியன் சுவர்களைக் குடைந்து செல்கின்றன. உலகத்திலேயே இக் குழாய்கள் பெரியவை. இக் குழாய் செல்லும் பாகத்திற்கு வழிகாட்டி என்னை அழைத்துச் சென்றார். இக் குழாயினை நேரில் பார்த்ததும் பிரமித்துவிட்டேன். இரண்டு ரயில் போகலாம். நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு மேல் 180 அடி உயரத்தில் மற்றொரு குழாய் செல்வதாக வழிகாட்டி கூறினார். ஒவ்வொரு மின்சார உற்பத்தி நிலையத்திற்கும் பின்னால் இரண்டு குழாய்கள் வருகின்றன. ஒவ்வொரு குழாயிலிருந்தும் நான்கு கிளைக் குழாய்கள் பிரிகின்றன. ஒவ்வொன்றும் 13 அடி விட்டமிருக்கிறது. ஒவ்வொரு கிளைக் குழாயும் டர்பைனுக்கு இணைக்கப்பட்டிருக்கிறது. கிளைக் குழாயில் பாயும் தண்ணீர் டர்பைன் சுழல்வதற்கு ஏதுவாகிறது.

மின்சார உற்பத்தி நிலையங்களைக் கடந்ததும், சிறிது தூரத்திற் கப்பால் சிறு சிறு குழாய்கள் வழியாகத் தண்ணீர் ஆற்றில் விழுகின்றது. இக் குழாய்கள் ஊசிக் கதவுகள் (Needle Valves) எனப்படுகின்றன. இவைகளிலிருந்து தண்ணீர் ஆற்றில் விழும் காட்சி இனிமையாக இருந்தது.

ஹூவர் மின்சார உற்பத்தி நிலையம் உலகத்திலேயே பெரியது. குறைந்த விலையில் மின்சாரம் விநியோகிக்கப்படுவதால் பல தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன.

ஹூவர் அணை யாவரும் வியப்புறும் பெரிய சாதனையாகும். மின்சார உற்பத்திக்கும், நீர்ப்பாசனத்திற்கும், வெள்ளத்தினால் விளையும் நாசவேலைகளைத் தடுக்கவும் புகழ் பெற்றிருக்கிறது. சுமார் ஐந்து லட்சம் எக்கர் நிலம் சாகுபடி செய்யப்பட்டு விளைவுகள் வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இன்னும் அதிகமான நிலப்பரப்பைச் சாகுபடி செய்யத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. 14 முக்கிய நகரங்கள் குடிப்பதற்காக இந்தத் தண்ணீரைப் பயன் படுத்துகின்றன.

ஹூவர் அணைத்திட்டத்திற்காகச் சுமார் 60 கோடி ரூபாய் செலவாயிற்றாம். இத்தகைய திட்டங்கள் நம் நாட்டில் பல தோன்றவேண்டும்.

பிற உறுப்புக்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தம், M. A.

நாடக அமைப்பைப்பற்றி முன்னர்ப் பேசப்பட்டது. அவ் வமைப்பில் ஒரு பகுதியாகும் உபதலைவன் (Parallelism) அமைப்பு. இது பற்றிக் கூறவந்த அறிஞர் சூரியநாராயண சாஸ்திரியார்

'உபநாயகன்தான் உதவித் தலைவன்;
இலக்குவன் உற்ற இலக்கிய மாகும்'

என்று தமது நாடக வியலில் கூறிப் போந்தார். இதனை யல்லாத மற்றொரு வகை உபதலைவனையும் அந்நூல் குறிப்பிடுகிறது. அவனைப் பீடமர்த்த நாயகன் என்று குறிப்பிட்டு அதுபற்றி,

இராமற் குற்ற சுக்கிரீ வன்போல்
தலைவனிற் சிறிது தாழ்ந்ததன் மையனைத்
தலைவனைச் சார்ந்த வினைபல வற்றினும்
வருவோன் பீட மர்த்தன் என்ப'

என்று இலக்கணமும் வரைகிறது நாடகவியல். இவ்விரு வகைகளிலும் உபதலைவர்கள் அமைக்கப்பெற்ற நாடகங்கள் தமிழில் உண்டு. ஆனால், நாடகவியல் கூறும் உபதலைவன் மேலைநாட்டுத் திறனாய்வாளர் கண்ட உபதலைவன் அல்லன். அவர்கள் கருத்துப்படி உபதலைவன் இரு காரணங்களால் நாடகத்தில் புகுத்தப்படுகிறான். நாடகத்தலைவன் உபதலைவன் என்ற இருவரும் ஒருவரால் ஒருவர் சிறப்படைகின்றனர். ஒவ்வொருவருடைய் பண்பாட்டை விளக்க மற்றொருவர் அடித்தளமாக அமைகின்றனர். சுருங்கக் கூறின் இரு தலைவர்களும் சேர்ந்தே ஒரு முழுத் தன்மை பெற்ற பண்பாட்டைத் தருவர். பல சமயங்களில் இரண்டு கதைகள் ஒன்றாகப் பின்னப்படும்பொழுது ஒரு கதையின் தலைவன் நாடகத் தலைவனாகவும், மற்றொரு கதையின் தலைவன் உபதலைவனாகவும் அமைதல் உண்டு.

இதனினும் சிறந்த ஒரு பகுதியாகும் வேறுபாடு (coutrast) அமைப்பது. வேறுபாடு என்று கூறினவுடனேயே 'முரண்' நினைவிற்கு வருகிறது. வேறுபாடு என்றால் கொள்கை, பண்பு முதலியவற்றான் வேறுபாடு உடைய இருவர் காட்சி அளித்தலே இங்குப் பேசப் பெறுவது. வேறுபாடு அமைப்பது என்பது ஒரு முறையில் நோக்குமிடத்து எளிதானதே. எவ்வகைக் கதையாயினும் இருவகைப் பண்புகள் காட்சி யளிக்கும். அந்த அளவில் வேறுபாடு அமைந்துவிடத்தான் செய்கிறது. நன்மைக்கும் தீமைக்கும் இடையே வேறுபாடு காண்கிறோம். கருணை—கருணையின்மை அல்லது கொடுமை என்ற இவற்றிடையேயும் வேறுபாடு இருக்கிறது. இவ்வகை வேறுபாட்டை எந்த ஆசிரியனும் கையாள்வது எளிது. துயரத்தில் ஆரம்பித்து மகிழ்ச்சியில் முடிகிற நாடகமும் உண்டு அல்லவா? இத்தகைய நாடகங்களில் வேறுபாடு என்பது நிறையக் காணப்பெறும். அவல நாடகங்களில் நாடகத் தலைவன் வீழ்ச்சிக்கு முன்னர் அவனுடைய சிறப்புக்களை மிகுதிப்படுத்திக் காட்டுவதும் இம் முறை பற்றியதே. அவன் வீழ்ச்சி யடையும்பொழுது சற்று முன்னர்க் கண்ட அவனுடைய சிறப்புக்கள் வீழ்ச்சியை மிகைப்படுத்திக்

காட்டும். இதுவே வேறுபாடு என்பது. இராவணன் வீழ்ச்சிக்கு முன்னர் அவன் சிறப்புக்களைப் பெரிதாக்கிக் கம்பன் கூறுவதும் இம் முறையேயாம். இராமனுக்குக் கூருத அவ்வளவு சிறப்புக்களை இராவணனுக்கு ஏற்றுவதால் இராவணன் வீழ்ச்சி மிகப் பெரிதாகக் காட்சி யளிக்கிறது. ஒருவேளை காப்பியம் என்ற காரணத்தால் நாம் இந்த அழகைக் கவனியாது இருந்துவிடுவோம் என்று கம்பன் நினைத்தான்போலும்! இல்லாவிட்டால் தலைவன் இறந்த பிறகு

> 'மும்மடங்கு பொலிந்தன அம்முறை துறந்தான்
> உயிர் துறந்த முகங்கள் அம்மா!'

என்று கூறுவானு? இறந்த பிறகும் இவ்வளவு பொலிவுடைய முகமாக விளங்கிற்று என்ருல் இருந்தபொழுது எவ்வாறு இருந்திருக்கும் என்பதை நம்மை நினையுமாறு தூண்டுகிருன். சிலப்பதிகாரம் என்ற காப்பியமும் இவ் வமைதியை மேற்கொள்கிறது. மேலும் அது நாடகக் காப்பியம் என்றும் கூறப்பெற்ற காரணத்தால் இது முற்றும் பொருந்தும். அவ்வழகிய நூல் எவ்வளவு அமைதியுடன்

> 'திங்களைப் போற்றுதும்; திங்களைப் போற்றுதும்
> கொங்கலர்தார்ச் சென்னிக் குளிர்
> வெண்குடைபோன்றிவ்
> வங்கண் உலகு அளித்தலான்'

என்று தொடங்குகிறது? ஆனல் இறுதியில் ஓர் அரசன் இறக்க, அவன் ஊர் தீப்பட, தலைவி வீடுபேற்றை அடைய இவ்வளவு களேபரத்துடன் அல்லவா முடிகிறது? திங்களைப் போற்றிய அமைதி எங்கே? ஊர் சுட்ட அமளி எங்கே? இதுவே வேறுபாடு. இவ்வாறு வேறுபட்ட நிகழ்ச்சிகள் தோற்றுவிப்பது ஒரு வகை 'வேறுபாடு'; பாத்திரங்களிலும் 'வேறுபாடு' அமைத்து நாடகம் தோன்றும். நன்மை வடிவான நாடகத் தலைவனுக்கும் தீமை வடிவான எதிர்ப் பாத்திரத்திற்கும் உள்ள வேறுபாட்டை இங்குக் குறிப்பிடவில்லை. இவ்வாறின்றித் தனிப் பாத்திரங்களும் வேறுபாடு காட்டும் முறையில் அமைக்கப் பெறுகின்றன. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்களுடைய மனோன்மணியத்தில் 'நடராசனும்' 'பலதேவனும்' வேறுபாடு காட்டும் நோக்கத்துடன் அமைக்கப்பெற்ற பாத்திரங்களாவர். அமைதியே வடிவானவன் நடராசன்; ஆனல் செயல் செய்வதில் தீரன். வாய்வீரம் பேசும் மடையன் பலதேவன்; ஆனல் ஒன்றும் உருப்படியாகச் செய்து முடிக்க இயலாதவன். துன்பமும் இன்பமும் கலந்து செய்யப் பெறும் நாடகங்களில் இவை ஒன்றுக்கொன்று வேறுபாட்டை விளக்கி நிற்கும். இதனல் ஏற்படும் பயன் பெரிதெனக் கண்ட ஆசிரியர்கள் எல்லை மீறி இதனைப் பயன்படுத்தலைக் காண்கிருேம். அச் சந்தருப்பங்களில் இவை வலிந்து கொள்ளப்பட்டவை என்ற எண்ணம் நம் மனத்தில் தோன்றுகிறது. இது ஒரு குறைபாடே. பல சமயங்களில் சாதாரண மக்களை மகிழ்விக்கும் பொருட்டும் இம் முறை எல்லை மீறி ஆளப்படுவ துண்டு.

நாடக அமைப்பில் காணவேண்டிய மற்றுமோர் சிறந்த பகுதி 'நாடகக் குறிப்பு' (Dramatic Irony) என்பதாகும். இதனை இக்காலத்து, 'நாடக அங்கதம்' என்னுஞ் சொல்லால் வழங்குகின்றனர். ஆனல் 'அங்கதம்' என்னுஞ் சொல்லுக்குக் 'குறிப்பு' (irony) என்னும் பொருளின்மையின் அது பொருந்தாது. பொதுவாகக் 'குறிப்பு' என்பதனை நாம் அறிவோம். இருவர் சண்டை செய்துகொண்டிருக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். பின்னே குழி ஒன்று இருப்பதாகவும் கொள்ளுவோம். குழி இருப்பது தெரியாமல் ஒருவன் அதன் முன்னர் நின்றுகொண்டு தன் எதிர் இருப்பவனை நோக்கி 'உன்னைக் குழிவெட்டிப் புதைக்கிறேன் பார்!' என்று கூறிக்கொண்டே பின்னல் வருகிருன். இவை அனைத்தும் ஒரு நாடகத்தில் நடந்தால்

தக்கதொரு 'நாடகக் குறிப்பு' என்று இதைக் கூறலாம். யாரை நோக்கி இவன் கூறுகிறானோ அவனும், நாடகம் பார்க்கிறவர்களும் பின்னர்க் குழி இருப்பதை அறிவர். ஆனால், அதன் இருப்பை அறியாதான் ஒருவன் பேசிக்கொண்டே பின்னால் நகர்ந்து அதில் வீழச் செல்கிறான். இந்நிலையில் அவன் கூறும் மொழிகள் குறிப்பிடத் தக்கன. தான் குழியில் வீழப் போவதை அறியாத அவன் தான் எதிரில் நிற்பவனைக் 'குழியிற் புதைப்பேன்' என்று கூறுகிறான். இத்தகைய ஒரு நிலையை 'நாடகக் குறிப்பு' என்கிறோம். செயல் அளவில் வேடிக்கை இருப்பதால் இதனை 'நாடகச் செயற் குறிப்பு' (Irony of Incident) என்று கூறுகிறோம். இஃதன்றியும் சில சந்தருப்பங்களில் நாடகத் தலைவனும் தலைவியும் பேசிக் கொண்டிருக்கிற ஒரு நிலை வருகிறது. களவில் இருவருஞ் சந்தித்துப் பேசுகின்றனர். தம்மை ஒருவரும் பார்க்கவில்லை என்று நினைத்துத் தலைவி, "எனது தந்தை இந்நிலையைக் கண்டால் என்ன சொல்லுவார்?" என்று கூறுகிறாள். அவள் அவ்வாறு கூறிக் கொண்டிருக்கும்பொழுதே அவள் தந்தை அவர்களை மறைவில் நின்று கண்டும், அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டும் இருக்கிறார். அவர் நிற்பதைப் பாத்திரங்கள் அறியாராயினும் நாடகம் பார்ப்பவர் காணமுடியும். இந் நிலை 'நாடகச் சொற் குறிப்பு' (Verbal Irony) எனப் பெறும். சுருங்கக் கூறுமிடத்து ஒரு பாத்திரம் செய்யுஞ் செயலிலும், பேசும் பேச்சிலும்தான் ஒரு பொருளை அல்லது கருத்தை உட்கொண்டு செய்தலோ அன்றிப் பேசுதலோ செய்கிறது. ஆனால், நாடகம் பார்ப்பவர்கட்கு அது வேறு கருத்தை அல்லது பொருளை அறிவிக்கிறது. பார்ப்பவர்களுக்குப் பின் விளைவு தெரியுமாகலின் பாத்திரம் பேசும் பேச்சில் உள்ள தவறு தெரிகிறது. இந் நிலையே நாடகக் குறிப்பு எனப் பெறும். இவ்விரண்டனுள் 'நாடகச் சொற் குறிப்பு' மிகவும் சிறப்புடையது. பல சந்தருப்பங்களில் ஆசிரியன் 'இரட்டுற மொழிதல்' என்னும் வழியைக் கையாண்டு பேசும் பாத்திரங்கட்கு ஒரு பொருளையும், பார்க்கும் மக்களுக்கு, ஒரு பொருளையும் வழங்குகிறான். இவ்வகை அழகு நாடகங்களில் மட்டும் அல்லாமல் காப்பியங்களிலும் இடம் பெறுகிறது. காப்பியங்களிலும் நாடகப் பகுதிகள் அமைந்திருத்தல் கண்கூடு. அப்பகுதிகளில் இவ்வகை அழகு இடம் பெறுகிறது. சூர்ப்பநகை இராவணனிடம் சீதையின் அழகைப் பலபடியாக வருணிக்கிறாள். அவன் மனம் பேதித்து விட்டான் என்பதை நன்கு அறிந்து உடனே தன் சொற்களை முடிக்க நல்லதோர் வழியை மேற்கொள்கிறாள்.

'இந்திரன் சசியைப் பெற்றான் இருமூன்று வதனத்தோன் தன்
தந்தையும் உமையைப் பெற்றான் தாமரைச் செங்கணானும்
செந்திரு மகளைப் பெற்றான் சீதையைப் பெற்றாய் நீயும்
அந்தரம் பார்க்கில் நன்மை அவர்க்(கு)இலை உனக்கே ஐயா!'

என்ற கருத்துடன் சூர்ப்பநகை கூறுகிறாள். இவர்கள் அனைவரும் முறையே சசியையும், உமையையும், திருமகளையும் பெற்றார்கள். 'நீயோ சீதையைப் பெற்றாய்' என்று இறந்த காலத்தாற் கூறி 'உங்கள் அனைவரையும் ஒப்பு நோக்கின் அவர்கட்கு நன்மை இல்லை உனக்குத்தான்' என்றும் கூறுகிறாள் மூக்கிழந்த அத் தங்கை தமையனை நோக்கி. ஆனால், முன்னர்க்கூறிய இரட்டுற மொழிதல் என்னும் அழகால் ஆசிரியன் நமக்கு வேறு பொருள் விளங்குமாறு கூறுகிறான். அவன் கூறிய சொற்களைப் பிரித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

'அந்தரம் பார்க்கில் நன்மை அவர்க்கு—
இலை உனக்கு'

உனக்கு இதனால் நன்மை இல்லை;

அறிவுதான்' என்ற பொருளும் இதில் விளங்குதல் காண்க.

நாடகக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலும் இத்தகைய சந்தருப்பம் ஒன்று வருகிறது. கண்ணகியோடு மதுரை சென்ற கோவலன் அவள் சமைத்த உணவை உண்டு, அவள் கையால் தந்த அடைக்காயையும் மென்று அவட்கு ஆறுதல் மொழி கூறிவிட்டுப் புறப்படுகிறான். அவள்பால் எஞ்சியிருந்த சிலம்பைக் கொண்டுசென்று விற்றுவிடுவதற்காகவே புறப்படுகிறான். புறப்படும் நேரத்தில் தான் இது வரைச் செய்த செயல்கட்குப் பச்சாதாபம் மேலிட்டவனாகி அவளுக்கு ஆறுதல் மொழி கூறிச் செல்கிறான். அவன் விரைவில் சிலம்பை விற்று மீள்வன் எனப் பேதைக் கண்ணகி நினைக்கிறாள். அவனும் அவ்வாறே தான் நினைந்து புறப்படுகிறான். ஆனால் நாம் அறிவோம் அவன் வாரா வழியில் புறப்பட்டுவிட்டான் என்று. இந்நிலையைக் கூறுகிறார் இளங்கோ அடிகள்.

> கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
> சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்(டு) யான்போய்
> மாறிவருவன் மயங்காது ஒழிகென.

'சிலம்பை மாறிவருவன்' என்றால் விற்று வருகிறேன் என்பதுதான் பொருள். கோவலன் கருதிய பொருளும், கண்ணகி அறிந்துகொண்ட பொருளும் அதுவே. ஆனால் நாடகம் காணும் (அல்லது கேட்கும்) நாம் அறியும் பொருள் அதுவன்று. 'மாறி' என்றால் 'உயிருடன் செல்லும் நான், பிணமாகி வருவேன்' என்ற பொருள் பட அவன் கூறியதை நாம் அறிகிறோம். இப்பொருளும் தரும் ஒரு சொல்லை ஆசிரியர் அங்குப் பெய்யாவிடினும் மீளா ஒருவன் 'மீண்டும் வருகிறேன்; கவலை கொள்ளற்க' என்று கூறுவதே 'நாடகக் குறிப்பு'தான். மேலும் இத்தகைய ஒரு சொல்லையும் ஆசிரியர் பெய்துவிட்டமையின் அவ் விலக்கிய அழகு இன்னும் மிகுதிப் படுகிறது.

இதே காப்பியத்தின் முற்பகுதியிலும் இத்தகைய நாடகக் குறிப்பு இருக்கிறது. கோவலனுக்கு மணம் ஆன அன்று இரவு தோழிகள் கண்ணகியைப் பள்ளி அறையில் அமளியில் ஏற்றுகிறார்கள். என்ன வாழ்த்துக் கூறுகிறார்கள்? 'காதலர்ப் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக' என வாழ்த்துகிறார்கள். இப்பகுதி ஒப்பற்ற நாடகக் குறிப்பாகும். முதல் நாள் இரவிலேயே இம்முறையில் வாழ்த்துவது விந்தையே! ஆனாலும் கண்ணகியும், தோழிகளும் இதில் தவறு ஒன்றுங் காணவில்லை. நாடகம் காண்கிற நாம் இதில் உள்ள குறிப்பை அறிய முடிகிறது. இந்நிகழ்ச்சி நடந்த சில காலத்தில் 'காதலன் பிரிந்து விடுகிறான்; கௌவிய கை நெகிழ்ந்து விடுகிறது; இறுதியில் தீதும் நிகழ்ந்துவிடுகிறது.

மிகப் பழங்காலத்தில் தோன்றிய நாடகங்களுள் ஒன்றும் இன்று இல்லையாகலின் அவை பற்றி நாம் ஒன்றுங் கூறுதற்கில்லை. ஆனால் இடைக் காலத்துத் தோன்றிய நாடகங்கள் அனைத்தும் அரசர் முதலிய தலைவர்களையே கொண்டிருந்தன. நாடகத் தலைவனுக்கு இலக்கணங் கூறும் ஒன்றிரண்டு பகுதிகள் அகப்பட்டவற்றைக் கொண்டு பார்ப்பினும் இக் கருத்தே வலியுறுத்தப் படுகிறது. இற்றைக்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு முன்னர்த் தோன்றிய இராம நாடகக் கீர்த்தனைகளும் அவ்வாறே. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை அவ்வாறின்றிச் சாதாரண மனிதனைத் தலைவனாகக் கொண்டு தோன்றிற்று. ஆனால், நந்தனாரைவிட வேதியர் அங்குப் பெருமைப் படுத்தப்படுவதின் நோக்கம் நாடகத் தலைவர் உயர்ந்த வருணத்தவராக இருத்தல்வேண்டும் என்பது கருதிப் போலும். இப்பொழுது அதிகம் காணப்பெறாத ஒரு வகை நாடகம் பல்கி இருந்த காலமும் உண்டு. அதன் பெயர் 'நொண்டி

நாடகம்'. 'குறவஞ்சி நாடகம்' இதன் பின்னர்ப் புகழ் பெற்றது. தற்காலத்தில் இவை ஒன்றிலும் சேராத 'சமுதாய நாடகம்' ஒன்றே சிறப்படைந்துளது.

தமிழ் நாடகங்களுள் சற்றும் போற்றப்படாவிடினும், மேலைநாட்டார் சொல் அளவில் போற்றும் 'பொருத்தம்' (Unity) என்பதும் கவனிக்கற்பாலது. நாடகவியல் ஆசிரியர் இதன் தன்மையையும் இந்நாட்டு நாடக அமைதியையும் நன்கு உணர்ந்தவராகலின்

'பொருத்தம் என்பது ஒற்றுமை உடைமை
அஃது இடனும் காலமும் செயலும் எனமு
விதப்படுமென்பர் மேற்றிசை வாணர்'

என்ற முறையில் கூறிச் செல்கிறார். மேற்றிசைவாணர் 'என்ப' என்றாராகலின் கீழ்த் திசையாளர் இது பற்றி அதிகம் கவலுவதில்லை என்பதையும் குறிப்பித்தார். இவ் வைப்பு முறை அவற்றின் சிறப்பு நோக்கி அமைந்துளது. முதலாவதாக வுள்ள இடப் பொருத்தம் (Unity of Place) என்பது நாடகம் முழுவதும் ஒரு இடத்தில் நிகழ்ந்திருக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது. ஆனல், இச் சட்டத்தை மேலைநாட்டாரே கைவிட்டு விட்டனர். இதனை அடுத்துச் சிறப்படைவது காலப் பொருத்தம் (Unity of Time) இது ஓரளவுதான் கைக் கொள்ளப் படுகிறது. அவல நாடகத்தின் (Tragedy) இலக்கணம் வரைந்த 'அரிஸ்டாட்டில்' அவல நாடகத்தின் நிகழ்ச்சி முழுவதும் ஒரு நாளின் எல்லைக்குள் முடியவேண்டுமென்றார். இச் சட்டத்தையும் இன்றைய நாடகாசிரியர்கள் உதறி விட்டார்கள். ஆனல், மூன்றாவதாக வுள்ள செயல் பொருத்தம் (Unity of Action) என்பது நன்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். அதுவும் தற்காலம் தோன்றும் நாடகங்கள் தற்கால மக்கள் மனநிலை போலவே பல்வேறு பட்ட பண்புகளைக்கொண்டு விளங்குகின்றன. இதனிடையே செயல் பொருத்தம் இல்லாது போயின் நாடகம் முழுத் தன்மை பெற்று விளங்க இயலாது. சிறு செயல்கள் அனைத்தும் நாடகத்தின் நடுவாகிய பெரு நிகழ்ச்சியில் சென்று கலந்துவிட வேண்டும். இன்றேல் சிக்கல் விழுந்த நூல் போல முழுத்தன்மை யற்றுவிடும். சிறு நிகழ்ச்சிகள் பல சேர்ந்தால் ஒரு முழு நாடகம் தானே அமைந்துவிடும் என்ற கருத்தில் இன்று பலரும் நாடகம் அமைக்கிறார்கள். ஆனல் மணி, பவழம், முத்து முதலிய பலவற்றை ஒன்றாக இணைத்து ஒரு நூல் இருப்பது போல், இச் சிறு நிகழ்ச்சிகள் பலவற்றையும் இயைவித்து நிற்பதே 'செயல் ஒற்றுமை' எனப்படும்.

நாடகம் பற்றி இதுகாறுங் கூறியவற்றுள் பெரும்பாலன மேலைநாட்டுத் திறனாய்வாளர் கருத்துக்களே யாம். இக் கலை நம் நாட்டில் இன்னும் நன்கு வளராத ஒன்று. எனவே இங்குக் கூறிய பல நியாயமா என்று கூடக் கேட்கத் தோன்றலாம். ஆனல் மேலைநாட்டார் கண்ட திறனாய்வுப் பகுதியில் பொதுத் தன்மையை யுடையன மட்டுமே இங்குத் தரப்பட்டுள்ளன. நம் நாட்டில் இனி வளரவிருக்கும் இக்கலை இந்த முறையில் வளர்ந்தால் நன்றாக விருக்கும் என்ற கருத்துப் பற்றியே இவை எழுதப்பட்டன.

இறுதியாக இப்பொழுது மிகுதியும் பயிலப்படும் 'ரேடியோ நாடகம்' பற்றி ஒரு வார்த்தை கூறல் வேண்டும். வானெலி வளர்ந்த இற்றை நாளில் நாடகங்கள் நூற்றுக் கணக்கில் வெளி வருகின்றன. இங்குக் கூறப்பெற்ற அனைத்தும் வானெலி நாடகங்கட்கும் பொருந்தும்.

இவற்றை அல்லாமலும் ஒன்று கவனித்தற் குரியது. ஏனைய நாடகங்களில் அரங்கம், திரை, மக்கள், உடை முதலிய புறச் சாதனங்கள்

இருந்து நாடகத்தின் கருத்தை நம் மனத்தில் செலுத்த உதவுகின்றன. உரையாடல் செய்யும் வேலை மிகுதியும் குறைக்கப்படுகிறது மேற்கூறிய கருவிகளால். ஆனால், வானொலி நாடகத்தில் இவ்வகை உதவி ஒன்றும் இல்லை. ஒலி ஒன்றினாலேயே கேட்பவர்கட்கு முன்னர்க் கூறிய அனைத்து உணர்ச்சியையும் ஊட்டல் வேண்டும். செவி கண் என்ற இரண்டு பொறிகட்கு வேலைதந்தது போகச் செவி ஒன்றையே நம்பி 'வானொலி நாடகம்' நடைபெறுகிறது. எனவே நாடகாசிரியர்கள் மிகவும் விழிப்புடன் இருத்தல் வேண்டும். தாங்கள் இயற்றும் உரையாடல் நினைத்த பயனைச் செய்கிறதா என்பதை நன்கு அறிந்து உரையாடல் அமைக்கவேண்டும். அரங்கில் நடைபெறும் நாடகத்தில் பார்ப்பவர் சற்றுக் கவனக் குறைவால் உரையாடலைக் கேளாதிருப்பினும் பார்த்துக்கொண்டிருத்தலின் தொடர்பை விட்டுவிட மாட்டார். ஆனால், வானொலி நாடகத்தில் இவ்வசதி இல்லை. அதிலும் ஒரு மணிநேரம் நடைபெறும் நாடகத்தில் இன்னும் கவனஞ் செலுத்தவேண்டும். உரையாடல் அலுப்புத் தட்டாத வகையில் அமைதல் வேண்டும். கதை விறுவிறுப்புக் குறையாமலும் நீண்ட பேச்சுக்கள் அதிகம் இல்லாமலும், ஒலி அலையுந் தன்மைக்கு (Modulation) இடம் தரும் பேச்சுக்கள் நிறைந்தும் இருந்தால் வானொலி நாடகஞ் சிறக்கும்.

இத்துணைத் துன்பங்களையும் பொறுத்துக்கொண்டு, இவ்வளவு கட்டுப்பாடுகளுடன் வளரும் இக்கலை என்ன பயனை அளிக்கிறது? 'கலை வாழ்க்கையினைச் செம்மைப்படுத்தும் ஒப்பற்ற சாதனம்' என்பது அறிஞர் கொள்கை. அதிலும் நாடகக் கலை மக்கட் சமுதாய முன்னேற்றத்திற்கு மிகவும் வேண்டப்படும் ஒன்று. எனவே, நாடகாசிரியன் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இல்லாதவனாக இருப்பின் அவன் நாடகம் பயனற்றதாகும். அவன் காலமும், நமது காலமும் வீண்போகவே அது வழி செய்வதாகும். இதனால் நல்லொழுக்கம் கற்பிக்கவே நாடகம் தோன்றுகிறது போலும் என்று எண்ணிவிட வேண்டாம். ஒரு ஆசிரியன் பொறுக்கும் கதையும், அவன் படைக்கும் பாத்திரங்களும், அப்பாத்திரங்களினுடைய பண்புகளும் ஆசிரியனுடைய கற்பனையின் உதவியால் தோன்றுபவை யாகலின் அவனுடைய வாழ்க்கைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே அவை தோன்றும். அவன் தத்துவம் பழுது பட்டதாகவும் சமுதாயத்திற்குத் தீங்கு இழைப்பதாகவும் இருப்பின் நாடகமும் அங்ஙனமே ஆகும். நாடகம் ஏனைய கலைகளைவிட எளிதில் மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கும். ஆகலின் இதன்கண் கவனத்துடன் ஆசிரியன் இருத்தல் வேண்டும். முத்தமிழ் வளர்த்த நாட்டில் இனியாவது நாடகம் நன்கு வளர்வதாக.

முட்டை ஓடு

முட்டை யிடுவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்னால்தான் முட்டையின் ஓடு உருவாகிறதாம்! கோழியின் கரு மட்டுமே முதலில் பக்குவமடைந்து கடைசியாக சுண்ணாம்புச் சத்தாலாகிய ஓடு அமைகின்றது என்ற உண்மையை டாக்டர்-C. L. கோமார், பேராசிரியர் கிளாட்டிரிக்கர்ஸ் இருவரும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

● உலகத்தில் அமைதி இல்லை. காரணம் பேராசை. நம்மைவிடப் பொருளும் பதவியும் மிக உடையவர்களைப் பார்த்து ஏங்குவதே போர்சையின் பிறப்புக்குக் காரணம்.

● ஆசையை ஒழித்து அமைதியை நிலை நாட்ட வழி என்ன ?

"அம்மா பெரிதென்று........"

திரு. கு. விசுவநாதன்

✶

விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களுக்குள் ஒரு சிறு சண்டை தோன்றிவிட்டது.

இதுதான் 'உஸத்தியோ? எங்கிட்டே இருக்கே ஒரு ரயில்வண்டி; சாவி கொடுத்துத் தரையிலே விட்டால் சிகு சிகு வென்று ஓடுமே. அதை விடவா?' என்றான் அலட்சியமாக ஒரு சிறுவன்.

'உங்கிட்டே இருக்கிறது ரயில் வண்டிதானேடா? எங்கிட்டே ஒரு கப்பல்லே இருக்கு சாவி கொடுத்துத் தண்ணியிலே விட்டா 'குபு குபு' என்று போகுமே, சொல்லு' என்றான் செறுக்கோடு மற்றொரு சிறுவன்.

'ரயில்வண்டியும், கப்பலும் என்னத்துக்காகும்? எங்க வீட்டிலே டப்பி நிறைய சாக்கலேட் இருக்கே! யார் வீட்டிலேடா சாக்கலேட்டு இருக்கு?' என்றான் தன் நண்பர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்கச் சகிக்காத மூன்றாவது சிறுவன்.

ரயில் பெரிது; ரயிலைவிடக் கப்பல் பெரிது; கப்பலைவிடச் சாக்கலேட் பெரிது—எப்படி? யார் சொல்லிக் கொடுத்தது?

இன்னொருவனிடத்திலே இல்லாத பொருள் தன்னிடத்திலே இருக்கிறது. மற்றவன் பொருளைக் காட்டிலும் தான் வைத்திருப்பது உயர்ந்தது; எப்படியோ உயர்ந்தது; இரண்டு வகையில் மகிழ்ச்சியடைகிறார்கள் சிறுவர்கள்.

சிறுவர்கள் சண்டையைப் பார்க்கிறான் ஒருவன். பார்த்துச் சிரித்துவிட்டுச் 'சிறு பிள்ளைத்தனம்' என்று எண்ணிக்கொண்டு போய் விடுகிறான். இந்தக் குணம் சிறுவர்களோடு மறைந்துவிடுவதில்லை; அவர்களுடனேயே அதுவும் வளர்ந்து வருகிறது என்பதை அவன் உணர்வதில்லை; எண்ணிப் பார்த்தால்தானே?

* * *

'எத்தனை பேர்களின் உயிர் என் கையிலிருக்கு தெரியுமா?' 'ரயில் வேயில் வேலை செய்யும் ஒரு பாயிண்ட்ஸ்மென் பியூன் வேலை செய்யும் தன் நண்பனிடம் பெருமையடித்துக் கொள்ளுகிறான். வண்டி வரும்பொழுது இப்படிப் போடவேண்டிய பாயிண்ட்டை அப்படிப் போட்டுவிட்டால், வரும் வேகத்தில் அதன் கதி என்ன?

* * *

'இந்தப் பவுண்டன் பேனாவின் மகிமை தெரியுமா, உனக்கு?'—எழுதிக்கொண் டிருக்கும் ஒரு ஆபீசர் தம் மனைவியிடம்.

'ஓ. ஏன் தெரியாது; நன்றாகத் தெரியும். கம்பனோ காளமேகமோ இல்லையே என்றுதான் வருத்தப் படுகிறேன்.'

'ஏன்? கம்பனும், காளமேகமும் எதற்கு?'

'ஆக்கல் வேலையைப் பிரம்மா செய்கிறார். அழித்தல் வேலையைச் சிவன் செய்கிறார். காத்தல் தொழிலை விஷ்ணு செய்கிறார். இந்த மும்மூர்த்திகளின் வேலையைத் தங்கள் பேனா ஒன்றே செய்து விடுகிறது. இந்த மும்மூர்த்திகளாலும் முடியாத வேலையொன்றையும் செய்யும் ஆற்றல் வேறு உண்டு. அடடா.....'

'அப்படியா? அது என்ன?'

'செம்பைப் பொன்னாகவும், பொன்னைச் செம்பாகவும் காட்டும் சித்து.'

'கம்பன் இருந்தால் இது ஒரு காவியமாக விளங்காதா?'

'ஓ. கே.'

* * *

'அவன் என்ன படிச்சிருக்கான்—அவனோட சரிக்குச் சரியாய்ப் பேச? சொல்லுவதைப் புரிந்துகொள்ள முடியுமா அவனாலே?' — தான் சொன்னதை இன்னொருவன் ஒத்துக்கொள்ளாதபோது ஒரு பி. ஏ. இன்னொரு பி. ஏ. யிடம்.

'என்ன சார் படிப்பு—என்ன படிப்பு வேண்டியிருக்கிறது—இந்த எம். ஏ., பி. ஏ. எல்லாம் எதற்கு—ரெம்பப் படித்தால் ஒரு 300, 400 ரூ. வேலை—வெறும் மதிப்புத் தான் மிச்சம்; எதற்கெடுத்தாலும் நம்ம தயவுதான்; ஏதோ ஒரு அவசரத்திற்குக் கார் வேணும்—நம்ம கிட்டே; ஒரு கல்யாணம், காட்சி, அரிசி பருப்பு முதற்கொண்டு சகல சாமான்களுக்கும் நம்மகிட்டே தான்; குடியிருக்க வீட்டுக்குப் படாத பாடு; அதற்கும் நம்ம தயவு தான்' — இதைச் சொல்லும் பொழுது, படிக்காமற் போனோமே என்று ஒரு காலத்தில் கவலைப் பட்ட அந்தக் கள்ளமார்க்கட் வியாபாரிக்குத்தான் என்ன பூரிப்பு!

* * *

பணம் ஒருவனுடைய உடைமை; கல்வியும் தொழிலுங் கூட உடைமைதான். எந்தத் துறையிலிருப்பவனும் சரி, அவனவன் தன் உடைமையிலே பெருமை கொள்கிறான். அதுதான் அவன் தன் வாழ்வில் பெறும் இன்பம். இது இயல்பு. மனைவி தரும சுகம், மக்களால் பெறும் இன்பம் இவற்றைத் தவிர்த்து நாம் உணரும் இன்ப உணர்ச்சிகள் வேறு பல வுண்டு. நம் உடைமையிலே நாம் கொள்ளும் பெருமை யுணர்ச்சியும் அவற்றுள் ஒன்று. இன்பமும் துன்பமும் கலந்துள்ள வாழ்க்கையில் இன்பத்தையே நாடிச் செல்லும் நம்மைத் துன்பத்தை மறக்கச் செய்து, சுறு சுறுப்பாக வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளச் செய்கின்றவை இந்த உணர்ச்சிகள்தாம்.

குடுகுடுப்பைக்காரன் தெருவிலே நின்று "ஐயாவுக்கு ஐயம் பொறக்குது, ஐயம் பொறக்குது" என்று சொல்லும்பொழுது நம் உள்ளத்திலே ஒரு களிப்பு உண்டாகத் தான் செய்கிறது. 'கொஞ்சம் அரிசிபோடு' என்று உத்திரவிடுகிறோம். அரிசியைப் போட்ட மனைவி திரும்பி வருவதற்குள் மீண்டும் குடுகுடுப்பைக்காரன் சத்தம் கேட்கிறது. 'ஐயாவுக்கு

ஐயம் பொறக்குது' என்ருனே அதையேதான் மீண்டும் சொல்லிக் கொண் டிருக்கிருன். இப்பொழுது அடுத்த வீட்டிற்கு முன் நின்று கொண் டிருக்கிருன். நமக்குத் தெரியும் எல்லாருக்கும் இப்படியே தான் சொல்லிக் கொண்டு போவா னென்று. இருந்தாலும் நம் உள் ளம் களிக்கத்தான் செய்கிறது.

நமக்குக் கீழ் வேலை செய்கிற வன் நமக்குக் 'கும்பிடு' போடும் பொழுது நம் தலை கொஞ்சம் நிமிர்ந்து கொள்ளுகிறது. நம் உள்ளம் பெருமை கொள்ளுகிறது; உலகமே நமக்குக் கீழ் என்றது போல எண்ணி, அவனுக்கும் நமக் கும் உள்ள உறவு நீங்கிய பிறகு அவன் போடும் கும்பிடுக்கு அர்த் தமே வேறு. தெரியாமலா இருக் கிறது?

'அணுவுக்குக் கூறு நான்கு. உங்களுக்காக ஆறு தருகிறேன்.' என்று சொல்லி நம்மை மகிழ்விக் கிருள் காய்கறிக் கடைக்காரி. இந்த 'உங்களுக்காக' எல்லோருக்கும் பொது என்பது தெரிந்துதான் இருக்கிறது.

விபரம் தெரிந்த வயது முதற் கொண்டு இறக்கும்வரைக்கும் நாம் உடையுடுத்தித்தான் வாழ்கிருேம். ஆனுல், புது உடை உடுத்தும்போ தெல்லாம் புது உணர்ச்சி தோன் றத்தான் செய்கிறது. மேலைநாட்டு உடை அணிந்தவுடனே நம்மை யறியாமலே நமக்கு மேலைநாட் டாரைப் போல் பேசவும் நடக்கவும் தோன்றுகிறது. நாம் உட்காரும் போது, உட்கார்ந்திருந்து எழுந் திருக்கும் பொழுது, நடக்கும் பொழுது, பேசும் பொழுது, திரும்பும் பொழுது மேலைநாட்டு 'ஸ்டைல்கள்' சிதறிய வண்ண மிருப்பதைக் கண்டு களிக்காதார் யார்? மேலைநாட்டு உடையிலிருப் பவர்கள் சிகரெட் பிடிக்கும் பொழுது அவர்கள் அடையும் இன்ப உணர்ச்சியைக் கண்ட நமக்கும் அந்த ஆடை அணிந்து சிகரெட்டுக் குடித்து மூக்கு வழியா கவும் வாய் வழியாகவும் திரித்தும் பரப்பியும் புகையை விட்டுக் கொஞ்சம் 'ஸ்டைலாக' சிகரெட் சாம்பலைத் தட்டிவிட்டுக் களிக்க வேண்டுமென்று தோன்றத்தான் செய்கிறது.

இப்படிச் சில்லறைக் களிப் புணர்ச்சிகள் பல.

நினைத்துப் பார்க்கும் பொழுது இவையெல்லாம் அர்த்தமற்றவை களாகவும் அற்பமாகவும் தோன்று கின்றன. எனினும் இவ்வுணர்ச்சி கள் நம்மை அறியாமல் நம் வாழ்க் கையில் கலந்து ஊக்கத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கும் 'டானிக்கு'கள் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

உணவு உடலை வளர்க்கிறது. ஆனுல் அளவிற்கு மிஞ்சிய உணவு உடலை அழிக்கிறது. களிப்பைத் தரும் இவ்வுணர்ச்சிகள் அவற்றிற் குரிய எல்லையைத் தாண்டும் பொழுது அவற்ருல் விளையும் கேடும் அப்படிப்பட்டதுதான். அதிக உணவினுல், உண்பவன் மட் டும் கெடுகிருன். இவ்வுணர்ச்சி கள் சரியான வழியில் செல்லா விடில் பிறருக்கும் கெடுதல் ஏற்படு கிறது.

தனது உடைமையிலே பற்று மிகுந்து விடும்பொழுது ஆசையும் வளர்ந்து வருகிறது. ஆசை வளர வளர நமது செய்கையும் வேறு பட்டுக்கொண்டே போகும். முடி வில் எந்த வகையிலேனும் எப்படி யேனும் தாம் விரும்பியதைப் பெற முயல்கிருேம். நம் எண்ணமும் சொல்லும் செயலும் நம்மைத் தகுதியற்ற வழிக்கு

இழுத்துச் செல்கின்றன. பிறரை வஞ்சித்துப் பொருள் சேர்ப்பது, பிறரைக் கெடுத்தும் வஞ்சித்தும் உத்தியோகம் முதலியன பெறுவது — இவைகளை நாம் தினமும் கண்டு வருகிறோம்.

அதனால்தான்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க.........

என்றார். உடைமையைப் பற்றி நினைக்கும்பொழுது நம்மினும் எளியவரை நோக்குங்கள் என்றார். அப்பொழுது நமது மனம் கொஞ்சம் அமைதியடையும். பேராசை வழிச் செல்லாது. அடுத்தபடியாகத்

தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தமிக
கற்றவெல்லாம் எற்றே இவர்க்கு நாமென்று

என்றார்.

மக்களுக்குள் ஒருவர் மற்றொருவரையும், ஒரு இனம் மற்றொரு இனத்தையும், ஒரு நாடு மற்றொரு நாட்டையும் ஏதோ ஒருவகையில் ஏமாற்றிவருகின்றன, வஞ்சிக்கின்றன என்றால் அது மிகையன்று. மக்களுக்குள் அமைதி இல்லாமலிருப்பதற்கு முதற் காரணமும் இதுவேதான். விஞ்ஞான வளர்ச்சியில் மக்களை இக்கொடிய துன்பத்தினின்றும் விடுவிக்க வழி காண முடியாது. மக்கள் பண்பில்தான் அதற்குரிய வழி இருக்கிறது.

உடலிலேயே பிறந்து உடலை அழிக்கிறது நோய். அதே போல நம்மிடையே பிறந்து நமக்கும் நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் கேடு செய்கிறது. அகங்காரம், ஆணவம், பொறாமை, பேராசை முதலிய தீக்குணங்கள் ஆகிய இந்நோய்களினின்றும் நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; இந்நோய்களைப் பரவவொட்டாமல் தடுப்பதுதான் அமைதியை நிலைநாட்ட நாம் செய்யும் வழிகளில் முதல்படி. இவற்றை வளர ஒட்டாமல் தடுக்கவல்லது அறிவு. அறிவை வளர்ப்பது கல்வி; கல்வி ஒரு நிலையிலே முடிவடைவதில்லை. 'சாந்துணையும்' கற்க வேண்டுவது. நம்மிலும் கற்றவரைக் காணக் காண நாமும் கற்கவேண்டும் என்ற எண்ணம் எழுவதும் இயல்பு. ஆகவேதான்

'தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தமிக
கற்றவெல்லாம் எற்றே இவர்க்குநாம் என்று'

என்றார்.

'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க...........'

'கலைக்கதிர்'

ஆண்டுச் சந்தா ரூ. 6

கலையின் களஞ்சியம் சிந்தனைச் செல்வம்

● தன் துறிக்கோளை நோக்கி ஆன்மா பிரயாணம் செய்கிறது; அந்தப் பயணம் முடிவற்றது.

தவிப்பு

"செந்தாமரை"

●

என்றன் வீட்டைச் சென்றடைய—நிதம்
ஏங்கித் தவிக்கு தென்னுள்ளம்
என்றென் வீட்டைச் சென்றடைவேன் ?—நான்
என்றென் வீட்டைச் சென்றடைவேன் ?

நாட்கள் பலவும் கழிந்தாச்சு—நான்
நடவாப் பெருந்தொலை நடந்தாச்சு
வேட்கை தணியவில் லையின்னும்—இங்கென்
வேட்கை தணியவில் லையம்மா !

தேடித் தேடி யலைந்தாச்சு—கால்
தேய்ந்தோ ரிடத்தில் இருந்தாச்சு
வீடு காண வேண்டுமென்ற—மன
வேட்கை மட்டும் தணியவில்லை.

திரும்பிப் பார்க்கவும் நேரமில்லை—சற்றே
தங்கிச் செல்லவும் நேரமில்லை
இருட்டு முன்னென் வீடேக—கணமும்
ஏங்கித் தவிக்கு தென்னுள்ளம்.

நடக்க நடக்க எந்நாளும்—மிக
நீண்டு நீண்டு முன்விரியும்
கடக்க முடியாப் பாதையினை—நான்
கடந்தென் வீடு காண்பதெப்போ ?

புக்ககம் விட்டேன் பிறந்தகத்தை—நான்
போய்ச்சேர்ந் துள்ளம் மகிழ்வதெப்போ ?
எக்கணம் சென்றங் கேகுவனுன்—என்றே
ஏங்கித் தவிக்கு தென்னுள்ளம்.

● பிறங்களின் ஆராய்ச்சி தொழிற் பெருக்கத்திலும் ஏனைய வகைகளிலும் என்னென்ன மாறுதல்களைத் தந்துள்ளது என்பதை ஆவணி ஸ்ரீ இதழில் கண்டோம். இங்கே ஒலி ஆராய்ச்சியின் விளைவுகளைக் கட்டுரை ஆசிரியர் விவரிக்கிறார்.

அடுத்த வீட்டு ரேடியோ

திரு. நா. கி. நாகராசன் M. A.

★

சில நாட்களுக்கு முன் பழுது பார்ப்பதற்காகச் சென்ற அடுத்த வீட்டு ரேடியோ திரும்பி வந்து விட்டது. இனி அதற்கு ஒரு விநாடியும் ஓய்வில்லை. எங்களுக்கு நிம்மதி இல்லை. அடுத்த வீட்டுக்காரர் முதன் முதலில் ரேடியோ வாங்கியபோது என் மனைவி எவ்வளவோ மகிழ்ச்சி அடைந்தாள். இலவசமாக ரேடியோ கேட்கலாம் என்ற ஆசை அவளை மகிழ்வித்தது. ஆனால், அடுத்த வீட்டுக்காரர் அகராதியில் இசை என்பது சினிமா இசைத் தட்டுகளின் ஓசை என்று நாங்கள் விரைவில் உணர்ந்தோம். அதனால் ரேடியோ கெட்டுப்போனபோது நாங்கள் மட்டற்ற மகிழ்வு கொண்டோம்.

பாவம், அடுத்த வீட்டுக்காரரைச் சொல்வானேன்? நகரவாசிகளான எங்களுக்குத் தொல்லை விளைக்கும் ஓசைகளுக்குக் காரணமானவற்றுள் அடுத்த வீட்டு ரேடியோ ஒன்றுதான். காலை நான்கு மணிக்கு வீட்டெதிரிலுள்ள பால் பண்ணைக்கு வரும் எருமைகள் கத்துவதிலிருந்து இரண்டாம் ஆட்டத்திற்குச் சினிமாவுக்குப் போய்த் திரும்பும் இளைஞர்களின் 'டடடாடடடாடடாடடா' என்ற பாட்டுவரை அன்றாடம் பலவித ஓசைகள் எங்கள் அமைதியைக் குலைக்கின்றன. பக்கத்துத் தெருவில் செல்லும் டிராம் வண்டியின் ஓசை எங்கள் கட்டிடத்தை அதிர வைக்கிறது. கூடக் குடியிருக்கும் நண்பருடைய மனைவி அவருக்குச் சிக்கனத்தைப் பற்றிச் செய்யும் உபதேசம் எங்களுக்கு ஒலி பெருக்கி வைத்தாற்போற் கேட்கிறது.

நகர வாழ்க்கையே இதுதான். நகர நாகரிகத்தின் முதற் சின்னம் ஓசை என்றேகூடக் கூறிவிடலாம். நாகரிகம் முதிர்ந்த மேலைநாடுகளில் ஓசைத் தொல்லை இன்னும் அதிகமான அவதி தருகிறது. இதனால் "ஓசை ஒழிப்புச் சங்கங்கள்" (Noise Suppression Leagues) பல அங்கே நிறுவப்பட்டுள்ளன. நகர ஓசைகளைத் தடுக்கவும் குறைக்கவும், இவை முயலுகின்றன. அரசாங்கமும், நகராண்மைக் கழகங்களும் ஓசையைக் குறைப்பதற்கான சட்டப்பாட்டு விதிகளை வகுக்கின்றன.

எவ்வளவு ஓசை இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது காலங்

கழிக்கும் ஆட்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். ஓசையைப் பற்றிப் பிறர் குறை கூறுவதெல்லாம் வீண் வீம்பு என அவர்கள் நினைக்கலாம். ஆகையால் ஓசை என்பது பெரிதும் நம் உணர்ச்சிக்கு உட்பட்ட ஒன்று என்பது புலனாகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு நாம் ஒலிகளை ஓசையென்றும், இசை யென்றும் இருவகையாகப் பிரிக்கலாம். இசை என்பது நமது உள்ளத்திற்கு உகந்த ஓர் ஒலி. ஓசையோ நமது செவி விரும்பாத ஒலிவகை. எவ்வித ஒலியும் பொருள்களின் துடிப்பினால் தோன்றுவது. இசை யொலி ஒரு பொருளின் சீரான துடிப்பினால் நிகழ்வது. தண்டவாளத்தின் மேல் ஓடும் ரயில் வண்டியின் ஒலி ஓரளவு சீராகவே இருக்கும். இவ்வொலியினால் சிலருக்கு உடனே தூக்கம் வந்துவிடுகிறது. அவர்களுக்கு இவ்வொலி ஒருவகை இசையே ஆகும். ஆனால், ஹார்மோனியப் பெட்டியி லிருந்து வரும் ஒலி இசை யெனவே பொதுவாகக் கருதப்பட்டாலும் சிலருக்கு மட்டும் வெறுப்பைத் தருகிறதல்லவா? ஆகையால் அவர்களைப் பொறுத்த மட்டில் இது வெறும் ஓசைதான். ஆகையால் ஓசைக்கும் இசைக்கும் உள்ள வேற்றுமை பெரிதும் நமது அக உணர்ச்சியையே பொறுத்ததாகும்.

ஆயினும் பௌதிகத்தில் இவ்விரண்டும் வேறொரு வகையில் வரையறுக்கப்படுகின்றன. ஒரு பொருளின் ஒழுங்கற்ற துடிப்பினால் தோன்றி, சீரற்று இடைவிட்டு ஒலிக்கும் எவ்வித ஒலியும் ஓசை எனப்படும். சீராகவும், தொடர்ந்தும் துடிக்கும் பொருள் இசையைத் தோற்றுகிறது எனலாம்.

பௌதிக வரையறை ஒருபுறமிருக்க, ஓசையும் இசையும் ஒவ்வொருவரது தனி உணர்ச்சி எனில் அதைப்பற்றி விஞ்ஞான பூர்வமாக ஆராய்வானேன் எனக் கேட்கலாம். விரும்பத் தகாத ஒலியால் நமது உள்ளமும், உடலும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்னும் ஆராய்ச்சி தற்போது மிக முக்கியமானதாய்விட்டது. ஏனெனில் தொழிற்சாலைகளிலும், காரியாலயங்களிலும் நடைபெறும் வேலையை ஓசை பாதிப்பதாயின் அதைக் குறைப்பதால் உடனடியான பயன் கிட்டுமல்லவா?

சிறந்த கற்பனையில் ஈடுபட்டிருக்கும் எழுத்தாளருக்கும் தேர்வு வினாக்களுடன் போராடும் மாணவனுக்கும், பெருந் திட்டங்களை வகுப்பதில் முனைந்திருக்கும் காரியாலய அதிகாரிக்கும் ஓசை எத்துணைப் பெரிய தொல்லையாக இருக்க முடியும் என்பது நாம் அறிந்ததே. "ஒருவன் தன் மூளையை எவ்வளவு வரை குறிப்பிட்டதொரு வேலையில் ஈடுபடுத்தி இருக்கிறான் என்பதை அவன் வேண்டாத ஓசையின் மேற்கொள்ளும் ஆத்திரத்தி லிருந்தே மதிப்பிடலாம்" என்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) என்ற அறிஞர் கூறினார். உள்ள ஈடுபாட்டுக்கும், ஓசைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை இது விளக்குகிறது. பள்ளிச் சிறுவருக்குக் கணக்குகள் கொடுத்து அவற்றிற்கு விடை காணுவதில் அவர்கள் காட்டும் திருத்தமும் விரைவும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என அளவிடப்பட்டுள்ளது. ஓசைக்கு நடுவே கல்வி கற்கும் சிறுவரது உள்ளம் விரைவில் சோர்வடைகிறது என்பது தெளிவாகியுள்ளது. அவர்கள் ஒரு புதுப் பாடத்தைக் கற்கும் திறன் ஓசையினால் சுமார் கால்பங்கு குறைகிறது.

மூளை வேலையை மட்டுந்தான் ஓசை பாதிக்கிறது என்பதில்லை.

லங்காஷயர் நெசவாலைகள் ஓசைக்குப் பேர்போனவை. இங்கே இங்கிலாந்தின் தேசிய சுகாதாரக் கழகம் சில சோதனைகளை நடத்தியது. இச் சோதனைகளில் தொழிலாளிகளின் காதுகளைப் பொத்தி அவர்களுக்கு ஓசை கேட்காமற் செய்தால் அவர்களது வேலைத்திறன் சுமார் பத்திலொரு பங்கு அதிகமாவது தெளிவாயிற்று. அதிலும் எட்டு மணிநேர வேலையின் இறுதியில் அவர்கள் சோர்வுற்ற நிலையில் உள்ளபோதுதான் ஓசை அவர்களைப் பெரிதும் பாதிக்கிறது என அறியப்பட்டது. ஆகையால் தொழிற்சாலையின் ஓசையைக் குறைப்பதும் உற்பத்திப் பெருக்க முறைகளில் ஒன்று. காரியாலய ஓசைகளால் அங்கு வேலை செய்யும் குமாஸ்தாக்களின் திறன் குறைவதையும் சோதனைகள் காட்டியுள்ளன.

இவை யாவும் ஓசையின் தற்காலிக விளைவுகள். இவற்றைத் தவிரக் காது செவிடுபடும் நிரந்தர ஓசையாலும் சில தீங்குகள் நேரும். ரயில் வண்டி ஓட்டுவோரும், விமானிகளும் சில ஆண்டுகளுக்குப் பின் காது மந்தமானவர்களாய் விடுகின்றனர். இடையறாத ஓசையினால் இவர்களது காதுநரம்புகள் கெட்டுவிடுகின்றன. இதுவே அவர்களது செவிட்டிற்குக் காரணம். அதிர்வேட்டுப் போன்ற பெருஞ் சத்தத்தால் காதின் உட்புறமுள்ள சவ்வு கிழிந்து காது செவிடாகிவிடலாம். சென்ற போரின்போது போர்முனையின் ஓசைகளாலும், விமானத் தாக்குதல்களாலும் ஆயிரக்கணக்கானவர் செவிடர் ஆயினர்.

ஓசை அவ்வளவு தூரம் நமது வாழ்க்கையைப் பாதிக்கும்போது அதை அறியவும், அதைக் குறைக்கவும் வழிதேடுவது அவசியமாகிறது. இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் இங்கிலாந்தில் தேசிய பௌதிக ஆய்வுச்சாலையில் நடைபெற்றுவருகின்றன. பல தொழில் முதலாளிகளும் இதில் தனிப்பட்ட சிரத்தை காட்டி இதற்கு ஆதரவு அளிக்கின்றனர்.

ஓர் ஓசையின் தன்மையை அறிவதில் அது வரும் இடத்தைக் கண்டுபிடிப்பது முதலாவதாகச் செய்யவேண்டியதாகும். உயிரினங்களுக்கு இரு காதுகள் இருப்பதனால்தான் நாம் ஓசை வரும் திசையை எளிதில் மதிப்பிட முடிகிறது. இருகாதுகளையும் அடையும் ஓசைகள் சில வேறுபாடுகள் கொண்டிருக்கும். இவற்றை நம் மூளை பகுத்தறிந்து ஓசையின் திசையை மதிப்பிட்டு விடுகிறது. விலங்குகளின் காதுகள் எத்திசையில் வேண்டுமானாலும் திரும்பத்தக்கவாறு அமைந்திருப்பது அவை ஓசை வரும் திசையை அறிய உதவுகிறது. பரிணாம மாறுதல்களால் நாம் இவ்வாற்றலை இழந்துவிட்டோம். போரின்போது நிலத்தில் எதிரியின் பீரங்கிகள் உள்ள இடத்தையும், நீரில் நீர்மூழ்கி மறைந்துள்ள இடத்தையும், வானில் விமானங்கள் வரும் திசையையும் அறிய இதே தத்துவம் கையாளப்பெற்றது. உள்ளே துளையான நான்கு கூம்புகளை மெதுவாகச் சுழற்றி அவற்றின் வழியே கருவிகளை அடையும் ஒலியின் வலிமையை அறியலாம். ஒலியானது உச்சநிலை அடையும் திசையை மதிப்பிட்டு ஓசையை வெளிவிடும் பொருளின் இருப்பிடத்தை அறியலாம்.

மருத்துவர்கள் பயனுக்கும் "மார்பொலிகாட்டி" (Stethoscope) என்ற கருவியை அனைவரும் பார்த்திருக்கலாம். நீண்ட இரு குழல்களின் வழியே மார்புப் பகுதியில்

வரும் ஒலிகளைக் காதில் வாங்கி அவற்றின் தன்மையிலிருந்து இருதயத்தின் நிலையையும், நுரையீரலின் நிலையையும் மருத்துவர் அறிகிறார். இவ் வுறுப்புகளில் புதிய ஒலி ஒன்று கேட்டால் அதுவரும் இடத்தையும் இதைக் கொண்டு திருத்தமாய் மதிப்பிட முடிகிறது. இக் கருவி மருத்துவரின் தனியுரிமையாக இருந்த காலம் போய்விட்டது. இனிமேல் மார்பொலிகாட்டி பொறிநூல் அறிஞரிடம் (Engineer) காணப்பட்டாலும் நாம் வியப்புறுவதற்கில்லை. சுழலும் எந்திரங்களில் சில குறைகள் ஏற்பட்டு அது அசாதாரணமான சில ஓசைகளை வெளியிடத் துவங்கலாம். அப்போது எந்திரத்தின் பல பகுதிகளிலும் இதை வைத்துப் பார்த்து இத்தகைய ஓசை எங்கிருந்து வருகிறது என அறிந்து அதன் காரணத்தையும் ஊகிக்கலாம். மோட்டார் வண்டி எஞ்ஜின் ஒன்றில் தொடங்கிய புது ஓசையின் இருப்பிடத்தை அறிந்து அதிலுள்ள குறையைக் கண்டு பிடிக்க முடிந்தது. ஓய்வின்றி ஓடும் எந்திரங்கள் பலவற்றிற்கு இம்முறை மிகவும் ஏற்றது.

ஓர் எந்திரத்தின் ஓசை அதிலுள்ள குறைகளால்தான் தோன்றுகிறது என்பதில்லை. அதன் அமைப்பே ஓசையைத் தோற்றுவிக்கக் காரணமாக இருக்கலாம். அதிலுள்ள சக்கரங்களின் பற்கள் ஒன்றோடொன்று முட்டுவதால் ஓசை தோன்றுவதுண்டு. இதைத் தவிர்ப்பது மிகக் கடினம். ஆனால் பல்சக்கரங்களைச் சாய்வான விளிம்புகளுடன் அமைப்பதாலும், அதில் தோல் போன்ற ஓசையை உறிஞ்சும் பொருளைச் சுற்றிவைப்பதாலும் இவ்வோசையைக் குறைக்கலாம். சக்கரங்களின் இருசு மையத்திலிருந்து சிறிதே விலகி இருப்பதால் சீரான அதிர்ச்சி தோன்றி எந்திரத்தின் அடிவழியே கட்டிடத்தையே அதிர வைக்கலாம். இது நாளாவட்டத்தில் பெருந் தொல்லையாய்ப் போகும். இதைத் தடுக்கச் சக்கரத்தைச் சரிப்படுத்த இயலாமல் இருக்கலாம். இக்குறை எந்திரத்தை அமைத்து அது வேலை செய்யத் தொடங்கிய பின்னரே தெரியும். ஆகையால் இதற்கு முன்னதாகவே எச்சரிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். எந்திரத்தை உறுதியாகத் தரையின்மேல் பொருத்தி வைக்காது அதன் பீடத்தை வலிவான வில்சுருள்களின் மீதோ, தக்கை அல்லது ரப்பர் அடுக்குகளின் மீதோ அமைத்துவிட்டால், தோன்றும் அதிர்ச்சி அதிலிருந்து வெளியே பரவாது தடுக்கப்படுகிறது.

வண்டிகளின் ஓசையைக் குறைக்கும் முறைகளும் ஆராயப்பட்டுள்ளன. மண்ணெண்ணெயை எரிக்கும் வண்டிகளில் முக்கியமான ஓசை ஒன்றுண்டு. எண்ணெய் எரிந்தபின் வெளிவரும் கழிவு வாயுக்கள் வெளிக்காற்றை விட்டு விட்டுச் சீராக வருவதால் ஒருவித ஓசை உண்டாவதை அனைவரும் கவனித்திருக்கலாம். இது எரிக்கும் கலங்களில் கழிவு வாயுக்களை வெளிவிடும் ஒருவழிக்கதவு, அவை வெளியேறும் குழல் இவற்றின் அமைப்பைப் பொறுத்துள்ளது. இவற்றைச் சரியாக அமைப்பதாலும், கழிவுவாயுக்கள் வெளிக்காற்றைத் திடீரெனத் தாக்கி ஓசை விளைக்காவண்ணம் 'ஓசை தவிர்ப்பான்கள்' (Silencers) என்ற அமைப்புகளைப் பொருத்தியும் தற்கால வண்டிகளின் ஓசை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும், மோட்டார் சைகிளின் ஓசைத்தொல்லை மட்டும்

இன்னும் குறைந்தபாடில்லை. அதுவும் வேகமாகச் செல்லும் போது இது அளிக்கும் வேதனை மற்ற எவ்வகை ஓசைக்கும் ஈடாகாது. "சென்னை நகர ஓசைகளில் எனக்குப் பெருந் துன்பம் விளைவிப்பது கல்லூரி மாணவர்களின் மோட்டார் சைகிளின் ஓசைதான்" என்று ஒரு பெரியவர் சில நாட்களுக்கு முன் கூறக் கேட்டேன்.

வெளி ஓசை வீடுகளுக்குள் நுழையாமல் தடுக்கப் பல முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அமைதி இன்றியமையாத படுக்கை அறை முதலிய பகுதிகளை வீட்டின் பின்புறம் அமைத்துக் கட்டினால் ஓசை அதிகமான பகுதிகளிலும் ஓரளவு நிம்மதியுடன் வாழலாம். சுவர்களை இரண்டாகப் பிரித்துக் கட்டி இவ்விருபகுதிகளுக்கிடையே ஒலியை உறிஞ்சும் பொருள்களான ரப்பர், தக்கை, நாரால் ஆன பலகைகள் முதலியவற்றை அமைப்பதால் சுவரின் வழியே ஓசை உள்ளே வருவது குறையும். தரைகளைச் சுவருடன் வைத்துக் கட்டாமல் அவை தனியே உள்ளவாறு செய்வதாலும் வெளியோசை உள்ளே வருவது குறையும். ஒலியை உறிஞ்சும் பொருள்களால் செய்யப்பட்ட பலகைகளும், ஓடுகளும் தற்காலத்தில் விற்கப்படுகின்றன. இவற்றை வீடுமுழுதும் பயனுக்குவதால் ஓசைத் தொல்லை பெரிதும் குறைகிறது.

ஓசைத் தொல்லையைக் குறைக்க விஞ்ஞானம் எவ்வளவோ முறைகளில் பாடுபடுகிறது. ஆயினும் ஓசைகளிற் பெரும்பான்மையானவற்றைத் தடுக்க விஞ்ஞான உதவி தேவையில்லை. இரவு நேரங்களில் பெருத்த ஓசையுடன் கனவேகமாகச் செல்லும் மோட்டார் சொந்தக்காரரும், இடைவிடாது குழல் (Horn) ஊதும் வாடகை மோட்டார் (Taxi) ஓட்டியும் சமூகத்தின் விரோதிகள் என்ற மனப்பான்மை இன்னும் நம் நாட்டில் இதுவரை வரவில்லை. ஓயாது அலறிய ஒட்டல் ரேடியோவை ஒழித்துக் கட்ட நீதிமன்றம் வரையில் சென்ற கும்பகோணம் வாசிகள் நம் நாட்டில் இவ்வுணர்ச்சி தோன்றியுள்ளது எனக் காட்டினர். இவ்வளவையும் கூறிவிட்டு நகர ஓசைகளிலிருந்து தப்ப எனக்குத் தோன்றும் சிறந்த முறையையும் கூறிவிடுகிறேன். அம்முறை என்ன என்பீர்களோ? நகரத்தை விட்டொழித்துக் கிராமத்திற்கு ஓடிப்போவதுதான்!

எழுத்தாளர்

எனக்கு எழுதும் ஆற்றல் இல்லை என்பதை நான் உணர 15 வருடங்கள் ஆயின. ஆனால் நான் எழுதுவதை விட்டுவிட முடியவில்லை. ஏனென்றால் அதற்குள் நான் ஒரு தலைசிறந்த எழுத்தாளன் என்ற புகழ் எங்கும் பரவிவிட்டது.

— ராபேர்ட் பென்ச்சிலி

தொடர் கதை

சுழற் காற்று

திரு. தா. ஏ. ஞானமூர்த்தி, B.O.L.

12

[முன் கதைக் குறிப்பு: முருகனும் கண்ணனும் உயிரனைய நண்பர்கள். சந்திரா என்னும் நங்கை கண்ணனைக் காதலித்தாள். அவள் காதலிப்பது கண்ணனுக்குத் தெரியாது. ஆனால் சந்திராவின் தந்தை பொருளாசையால் அவளை நரசிம்மன் என்ற முரடனுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டார். ஒரு நாள் இரவு நரசிம்மன் சந்திராவை அடித்துத் துன்புறுத்தினான். துன்பத்தைப்பொறுக்க முடியாமல் சந்திரா மாளிகையிலிருந்து வெளியே ஓடினாள். அவளை நரசிம்மன் பின்தொடர்ந்து ஓடிப்பிடித்தான். அவன் பிடியிலிருந்து விலகிக்கொண்டு சந்திரா அவனைத் தள்ளினாள். அப்போது விரைவாக வந்துகொண்டிருந்த மோட்டார் வண்டி மீது நரசிம்மன் மோதுண்டு இறந்தான். சந்திரா கைது செய்யப்பட்டாள்.

முருகன் தபால் பெட்டியின்கண் விமலா என்ற கல்லூரி மாணவியைக் கண்டு காதலித்தான். விமலாவும் முருகன்பால் அளவிலாக் காதல் கொண்டாள். காதல் வளர்ந்து இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ள உறுதி கொண்டனர். ஒரு நாள் முருகன் தன் நண்பனாகிய கண்ணனுக்கு விமலாவை அறிமுகம் செய்துவைத்தான். கண்ணனுக்கு விமலாபால் அவனை அறியாமலே காதல் வளர்ந்தது. நாளடைவில் கண்ணன் காதல் நோய் மிகுந்து, அவனுடைய உடல்நிலை கவலைக்கிடமாகிவிட்டது. தன் நண்பன் நோய்க் காரணத்தை முருகன் அறிந்து அவனுக்காகத் தன் காதலைத் தியாகம் செய்து பம்பாய் நகரம் அடைந்தான். அங்குப் பல நாள் அவன் அலைந்து வாடினான். இறுதியில் அவனுக்கு முகுந்தலால் என்னும் செல்வர் வீட்டில் தங்க வாய்ப்பு ஏற்பட்டது.

முகுந்தலால் ஆலையில் பொருளாளர் பதவி முருகனுக்குக் கிடைத்தது. மேலும், முகுந்தலாலின் செல்வக் குமாரியான ஜயகுமாரிக்குப் பாடம் கற்பிக்கும் பொறுப்பையும் அவன் ஏற்றான். அவனிடம் பாடம் கேட்கும் சாக்கிலே, காதலை வளர்க்க முற்பட்டாள் ஜயா. முருகனோ அவளைத் தன் உடன் பிறந்தாளாகக் கொண்டு நெருங்கிப் பழகினான். ஒரு நாள் அவர்கள் மிக நெருங்கி அமர்ந்து பேசிக்கொண் டிருந்ததை மோதிலால் என்பவன் கண்டு மனம் புழுங்குகினான். அவன் ஜயாவின் மாமன்; அவளைத் திருமணம் செய்துகொள்ள மனக் கோட்டை கட்டுபவன். முருகனுக்குக் கேடு சூழ்வதற்கு ஏற்ற சூழ்ச்சியை அவன் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்தான்.

கண்ணனுடைய பெற்றோர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி விமலாவைக் கண்ணனுக்குத் திருமணம் செய்து கொடுக்க அவள் தந்தை பெரியசாமிப் பிள்ளை உடன்பட்டார். இதைக் கேட்டதும் விமலா திடுக்கிட்டாள். தன் அருமைக் காதலன் முருகனைத் தேடிக் கண்டுபிடித்து அவனை அடைவது என்று உறுதி செய்து பெற்றோர்களுக்குத் தெரியாமல் வீட்டை விட்டகன்றாள். முருகன் பம்பாயில் முகந்தலால் வீட்டில் இருப்பதாகச் சென்னை மருத்துவவிடுதி மிருந்து அறிந்து பம்பாயுக்குச் சென்றாள்; முகந்தலாள் வீட்டுப் பூங்காவில் முருகனும் ஜயகுமாரியும் இருப்பதைத் தூரத்தி லிருந்தே கண்டாள். முருகன் ஜயகுமாரியைக் காதலிப்பதாக அவள் தவறாக நினைத்தாள்; பின்பு நெஞ்சம் நொந்து, வீடு திரும்பி, கண்ணனை மணக்க இசைந்தாள்.]

கண்ணன் வீட்டு முன்னிடத்தில் ஒரு வேப்ப மரம் உண்டு. அது உயர்ந்தும் அடர்ந்தும் இருந்தது. கண்ணனின் தாய் தந்தையர் பெரிய சாமிப் பிள்ளையிட மிருந்து விடை பெற்றுக்கொண்டு தம் வீட்டுக்குத் திரும்பிய தினத்தன்று மாலை நேரத்தில் அவ்வேப்பமரத் தடியில் அமர்ந்து பேசிக்கொண் டிருந்தனர். அந்நேரத்தில் இனிய இளங்காற்று மிக மென்மையாக வீசிக்கொண் டிருந்தது. வேப்பமரக் காற்று உடம்புக்கு மிகவும் நல்லது என்பர். அன்று கண்ணனின் பெற்றோர்கள் காற்றின்பம் நுகர்தற்கு மட்டும் அவ்வேப்ப மரத்தடியில் அமர்ந்து இருந்தார்கள் என்று சொல்வதற் கில்லை, ஒரு நல்ல செயலைக் குறித்து நினைக்கவோ, பேசவோ,

ஆலோசனை புரியவோ கண்ணனின் தந்தை விரும்புவாராயின் அவற்றை அவ்வேப்ப மரத்தடியின்கண் அமர்ந்து தான் செய்வார். ஏனென்றால் அங்கு அச் செயலைக் குறித்து நினைத்தால்—பேசினால்—ஆலோசனை புரிந்தால் அச் செயல் இனிதே நிறைவேறும் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு.

பெற்றோர்கள் இருவரும் தமக்குள் சிறிது நேரம் பேசிய பிறகு, தந்தை கண்ணனை அழைத்தார். கண்ணன் வந்து அங்கிருந்த மற்றொரு நாற்காலியில் அமர்ந்தான். அவன் மிகவும் மெலிந்து தோன்றினான். உள்ளத்தில் நோய் இருந்தால் உடல் எப்படி உரம் பெறும்?

"கண்ணா, ஒரு மகிழ்ச்சிக் குரிய செய்தி. உன் திருமணத்திற்கு நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்றார் அவன் தந்தை.

"திருமணமா? எனக்கு வேண்டாம், அப்பா. திருமணத்தில் இப்போது எனக்கு விருப்பம் இல்லை" என்று வருத்தத்தோடு கண்ணன் கூறினான்.

தன்னுடைய பெற்றோர்கள் விமலா வீட்டிற்குச் சென்றுவந்தது அவனுக்குத் தெரியாது. அவர்கள் தம்முடைய கிராமத்திற்குச் சென்று அங்கு ஒரு நங்கையை மணம் பேசி வந்திருப்பதாக அவன் கருதினான். தன் உள்ளம் முழுமையும் விமலாபால் பறிகொடுத்துப் பெரிதும் வாடும் கண்ணன் எங்ஙனம் வேறொருத்தியை மணம் செய்து கொள்ள இசைவான்? ஆகையால் தன் பெற்றோர்கள் தனக்குத் திருமணம் செய்யப்போவதாகச் சொன்னதும் கண்ணன் வேண்டாம் என மறுத்துரைத்தான்.

"என் கண்ணா திருமணம் வேண்டாம் என்கிறாய்? நாங்கள் இருவரும் விமலா வீட்டிற்குச் சென்றிருந்தோம். விமலாவின் பெற்றோர்கள் நாங்கள் விரும்பியபடி அவளை உனக்கு வாழ்க்கைத் துணைவியாக்க மிக்க மகிழ்ச்சியோடு இசைந்திருக்கிறார்கள். இனிய குணம் வாய்ந்த விமலா உன் அருமை மனைவியாக அமைவதை உன்னுடைய பெரும் பேறாக அல்லவோ நீ கருத வேண்டும்' என்று அவனுடைய தாய் பரிவுடன் கூறினாள்.

அதைக் கேட்டதும் கண்ணன் பெரு வியப்பு அடைந்தான். அவ்வியப்பில் மகிழ்ச்சியும் நிறைந்து விளங்கியது. விமலாவை மனைவியாகத் தான் பெறவே முடியாது என்றே அவன் எண்ணியிருந்தான். எனவே அவன் எதிர்ப்பாராத வகையில் இந்த இன்பச் செய்தியைக் கேட்டதும் மகிழ்ச்சி கலந்த வியப்பு எய்தினான். ஆனால் மறுகணத்தில் தன் உயிர்த் தோழனின் காதலியைத் தான் மணப்பது தகாது என்ற எண்ணம் அவன் நெஞ்சை உறுத்திற்று. ஆகையால் அவன், 'வேண்டாம், வேண்டாம். என் அருமை முருகனின் காதலியை நான் மணப்பதா? ஐயையோ! இத்துரோகம் கூடாது. பெரும் பாவம்!' என்றான்.

'கண்ணா, நீ அஞ்சவேண்டாம். நீ விமலாவை மணக்கவேண்டுமென்பது முருகனுடைய விருப்பமே' என்றார் அவன் தந்தை.

இதைக் கேட்டதும் இன்னும் கண்ணனுடைய வியப்பு மிகுந்தது. 'தன்னுடைய அருமைக் காதலியை நான் மணக்கவேண்டுமென முருகன் விரும்புகிறானா? இது என்ன விந்தையாக இருக்கிறது! தாங்கள் சொல்வது எனக்குப் புரியவே இல்லை, அப்பா' என்றான் கண்ணன்.

'கண்ணா, நீ நோய்வாய்ப்பட்டு உயிர் சோர்ந்து படுக்கையில் கிடந்தபோது முருகன் உன் நோய்க் காரணத்தை அறிந்து உனக்கு விமலாவை மனைவியாக்கினாலன்றி உயிர் பிழைக்க மாட்டாய் என்பதை உணர்ந்தான். உணர்ந்து அவளை உனக்குத் துணைவியாக்க உறுதி கொண்டான். தான்

இங்கிருந்தால் நீ விமலாவை ஏற்க மறுக்கக் கூடும் என்று எண்ணியே அவன் வெளியூர் சென்று விட்டான். நீ விமலாவைத் திருமணம் செய்து கொண்டாலன்றித் தான் இங்குத் திரும்புவதில்லை என்று அவன் சபதமும் இட்டுச் சென்றிருக்கிறான். ஆகையால் நீ விமலாவை மணந்துகொண்டால்தான் முருகன் உள்ளம் அமைதி பெறும்' என்று அவன் தகப்பனார் விளக்கிக் கூறினர்.

"ஆ, ஆ! எனக்காகத் தன் காதலைத் தியாகம் செய்தானா, முருகன்! நட்புக் காகக் காதல் தியாகமா?' செயற்கரிய செயல்! அரிய தியாகம்! முருகன் ஓர் உத்தமன்! அருமாமணி! என் உயிர் கொடுத்த தெய்வம் அவன்!'' என்று இங்ஙனம் கண்ணன் முருகனைப் பலவாறு புகழ்ந்தான்.

கண்ணன் அன்பு புகழ்ச்சியோடு நின்றுவிட்டது. காதலை மீற அதனால் முடியவில்லை. தனக்காக முருகன் காதலைத் தியாகம் செய்தான் என்று அறிந்ததும் கண்ணன் தன் காதலை உள்ளத்தினின்றும் அறவே ஒழித்து விமலாவை முருகன் ஏற்கும் படியாகச் செய்திருக்கவேண்டும். அதுவன்றோ உண்மை நட்பின் திறம்? ஆனால், பாவம், அவன் என்ன செய்வான்! அவனுக்கு விமலாவிடம் இருந்த காதல் அளவு கடந்து பெருகியது. அக் காதலுக்கு முன் நட்பு சக்தியற்று நின்றது.

பெற்றோர்கள் குறித்த நன்னாளில் கண்ணனும் விமலாவும் கணவனும் மனைவியும் ஆயினர். முதல்நாள் இரவு முழுமதி தண்ணிய வெண்ணிலவு எங்கும் வீசி விளங்கியது. கண்ணன் வீட்டு மேல் மாடியின் அறை அழகு பெற அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்வறைக்குள் மணமகள் விமலா நுழைந்தாள். அவள் உள்ளே சென்றதும் அவ்வறையைச் சுற்றிப் பார்வையிட்டாள். வீணை! கணவனும் மனைவியுமாகக் காட்சிதரும் கண்கவர் ஓவியம்! பளபளப்பான மேசைமீது பல்வகையான இனிய பழங்கள்! மணங் கமழும் மலர் பரப்பிய மெல்லிய பஞ்சணை! இவைகளை விமலா அவ்வறையின்கண் கண்டதும் அவள் உள்ளம் முருகனை நாடிற்று; தன்னையே மறந்தாள். அவள் முருகனோடு இருப்பது போலவே எண்ணினாள். ஆ, ஆ! எவ்வளவு பெரிய இன்பம்! அடுத்த கணத்தில் தன்னுணர்வு அடைந்தாள். ஐயையோ! முருகன் அவளுக்குக் கணவன் அன்று! கண்ணனே அவளுடைய கணவன்; வாழ்க்கைத் துணைவன்! அவளுடைய இன்பம் பறந்தது. அவள் பெருமூச் செறிந்தாள். கண்ணனைத் தான் கணவனாக ஏற்கவேண்டுமென்று அவர்களுடைய பெற்றோர்கள் விரும்பினர்! அதற்கு அவள் இணங்கினள்! கண்ணனைக் கணவனாகக் கொண்டபின் அவன் கருத்துப்படி நடக்கவேண்டியது தன்னுடைய கடமை என்பதை விமலா உணர்ந்தாள். கண்ணனை நினைக்கும்போதெல்லாம் அவள் உள்ளத்தில் கடமை உணர்வே எழுந்தது. அங்கு எள்ளளவும் காதல் இல்லை.

பிறகு மெள்ள அவள் அவ்வறையின் ஜன்னலை அணுகி, அதன் கதவுகளைத் திறந்து வெளிப் புறத்தே நோக்கிய வண்ணம் அசையாமல் நின்றாள். சிறிது நேரத்திற்குள் கண்ணன் அவ்வறைக்குள் நுழைந்தான். ஜன்னலின் அருகே தன் அருமை மனைவி அசையாமல் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான்; சிறிது நேரம் அவளை உற்று நோக்கினன். அவன் உள்ளத்தில் காதற் களிப்புப் பொங்கி வழிந்தது. அக் களிப்பால் அவன் மதி மயங்கினன். உடனே அவன் விமலாவை அணுகி, அவள் பின்புறத்தில் நின்றுகொண்டு அன்பு நிறைந்த குரலில் 'விமலா' என்றான். அக்குரலால் தன் கணவன் வரவை உணர்ந்தாள் விமலா. ஆனால் அவள் ஒன்றும் பேசவில்லை. முன் போலவே வெளியிடத்தையே அவள் நோக்கி நின்றாள்.

'என்ன விமலா, இந்தப் பக்கம் திரும்பமாட்டாயா? ஆழ்ந்த யோசனைபோலும்! எதைக் குறித்து இவ்வளவு யோசனை? நான் அறியக்கூடாதா?' என்று சொல்லிக்கொண்டே கண்ணன் அவளுக்கு முன்னே போய் நின்றான். விமலா முகத்தில் மலர்ச்சி இல்லை; ஆனால் ஆன்ற அமைதி குடிகொண்டிருந்தது. கணவன் தன் முன்னே வந்து நின்றதும் விமலா முகத்தில் புன் முறுவல் தோன்றியது. அது இயற்கையான புன் முறுவல் அன்று. அவள் வலிந்து வரவழைத்ததே அது. ஒருவனைக் கணவனாகக்கொண்டபின் அவன் கருத்துப்படி நடந்து அவனை மகிழ்விப்பதே கற்புடைய நங்கையின் கடமையல்லவா? எனவே, விமலா புன்முறுவல் பூத்து 'யோசனை ஒன்றுமில்லை' என்றாள்.

'பின்..............நாணமோ?' என்று சொல்லிக்கொண்டே கண்ணன் விமலாவின் மெல்லிய கரங்களைப் பிடித்து அழைத்துக்கொண்டு சென்று மலர்ப் படுக்கையில் அமர்ந்தான். பிறகு அவன் விமலாவின் எழில் வாய்ந்த முகத்தை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டே 'என் அருமை விமலா, நான் உன்னை என்ன சொல்லிப் பாராட்டுவேன்! என் கண்ணின் மணியே என்று சொன்னால் போதாது. நீ என் உயிர்! நான் உன்னைப் பெற்றதனால் அல்லவா என் உயிர் இருக்கிறது. இல்லையேல் அது எப்பொழுதோ என் உடலை விட்டுப் பிரிந்திருக்குமே! ஆ, ஆ! என் ஆருயிர் மருந்தே, இன்பக் கனியே, உன் அன்பே அன்பு!' என்று இங்ஙனம் பலவாறுகப் பாராட்டி அவள்பால் அன்பு

மொழிகளை அள்ளிப் பொழிந்தான். அவனுக்கு மேலும் காதல் பெருகியது. இம்மண்ணுலகம் பெறுதற்கரிய பொன்னுலகமாக அவனுக்கு விளங்கியது. இம்மண்ணுலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்பார் பலர். அவர்கள் அறிவிலிகள்! இன்பங் காண வழிதெரியாத குருடர்கள்! இவ்வாழ்க்கையா துன்பம்? இல்லை, இல்லை. இன்பம்! இன்பம்! எங்கும் இன்பம்! பெருகிய இன்பம்! கண்ணனுக்குக் காட்சிதரும் பொருள்களின் ஒவ்வொரு அணுவிலும் அளவிலா இன்பவெள்ளப் பெருக்கு!

விமலா மனைவிக்குரிய கடமைகளில் ஒரு சிறிதும் தவறாது ஒழுகி வந்தாள். கண்ணன் வீட்டில் சமையல் முதலியவற்றைச் செய்வதற்கு வேலையாட்கள் இருந்தனர். எனினும் தன் கணவனுக்குச் செய்யவேண்டிய எல்லா வேலைகளையும் விமலாவே கவனித்து வந்தாள். கணவனுடைய விருப்பு வெறுப்புக்கள் வேலையாட்களுக்கு எப்படித் தெரியும்? கணவனோடு மிக நெருங்கிப் பழகுகின்ற மனைவிதான் அவற்றை அறிய வல்லவள் அல்லவா? ஆகையால் கண்ணன் விருப்பத்திற்கேற்ப எல்லா வேலைகளையும் விமலாவே செய்து அவனை மகிழ்வித்தாள். காலை மாலைகளில் விமலாவே தவறாமல் தேநீர் செய்து தன் கணவனுக்கு எடுத்துச் சென்று கொடுப்பாள். தேநீர்க் கலத்தைக் கண்ணன் அவளுடைய மெல்லிய கரங்களிலிருந்து வாங்கித் தேநீரைப் பருகும் போதெல்லாம் அவனடைந்த இன்பம் அளவிட முடியாது.

அவனுடைய நாசுவை அறிந்து நாள்தோறும் விமலா இனிய உணவுகளை ஆக்கித் தன்கையினாலேயே தன் கணவனுக்குப் படைப்பாள். உணவிலே உப்பு இல்லாமற் போனாலும் கண்ணன் 'மிக நன்றாக இருக்கிறது, மிக நன்றாக இருக்கிறது' என்று நாவினைத் தட்டித் தட்டிச் சுவைத்து உண்பான். அப்போதெல்லாம் கண்ணன் சுவைப்பது உண்மையில் உணவன்று; காதல்! சிலசமயங்களில் கண்ணன் நாற்காலியில் சாய்ந்த வண்ணம் 'விமலா, பசியாய் இருக்கிறது' என்பான். அப்போது சமையல் முழுதும் முடிந்திராது. எனினும் விமலா 'சமையல் முடியவில்லை' என்று கூறமாட்டாள். உடனே அவள் அதுவரை ஆக்கி முடிந்த உணவில் ஒரு சிறிது தட்டிலே இட்டுப் பிசைந்து கொண்டே வந்து கண்ணனுக்குத் தன்கையினால் ஊட்டுவாள். இத்தகைய மனைவியைக் கண்ணன் அடைதற்கு உண்மையாக எத்தனையோ அரிய தவம் செய்திருக்க வேண்டும்! இத்தனையும் விமலா கடமைக்காகச் செய்தாள்; காதலினால் அன்று. அவள் காதல் முழுதும்தான் முன்பே முருகனிடம் சென்று அவனுக்கு அடைக்கலமாகி விட்டதே! அக்கடமை யுணர்வோடு காதலும் கலந்திருந்தால் கண்ணன் இவ்வுலகிலே இதுவரை யாரும் பெறாத பேறு பெற்றவனாய் இருந்திருப்பான்.

தன்னுடைய மாமனார் மாமியார்களிடத்தில் விமலா நடந்து கொண்டது பெரிதும் போற்றற்குரியது. அவர்களிடத்தில் மிக மரியாதையாகவும் அவர்கள் குறிப்பறிந்தும் ஒழுகி வந்தாள். எதையும் அவர்கள் சொல்வதற்கு முன்னே அவள் செய்துவிடுவாள். 'எங்கள் விமலாவைப் போல மருமகள் இவ்வுலகிலேயே வேறுயாரும் இருக்க முடியாது' என்று அவளுடைய மாமியாரே அடிக்கடி சொல்லிப் புகழ்வாள் என்றால், விமலா அவர்களிடத்தில் நடந்து கொண்ட திறத்தினை விளக்கவும் வேண்டுமோ?

விருந்தினரை உபசரிப்பதிலும் விமலாவுக்கு ஒப்பு எங்கும் காண முடியாது. எளியோர்க்கு இரங்கும் பண்பு அவளிடத்தில் அளவு கடந்து

காணப்பட்டது. எந்த உயிராக இருந்தாலும், அது துன்பப்படுவதைப் பொறுக்க மாட்டாள். அதனுடைய துன்பத்தைப் போக்கினாலன்றி அவளுடைய மனம் அமைதி பெறாது.

ஒரு நாள் விமலாவின் வீட்டுக்கெதிரே ஒரு பூனைக்குட்டி கால் உடைந்து துன்பம் பொறுக்க முடியாது தவித்துக் கொண்டிருந்தது. இத்துன்பக் காட்சி விமலாவின் கண்ணில் பட்டது. உடனே அவள் ஓடிச் சென்று அக்குட்டியைப் பரிவோடு தூக்கி வந்து தன்னுடைய தூய்மையான படுக்கை மீது அதைக் கிடத்தி அதற்குரிய சிகிச்சை அனைத்தும் தானே செய்தாள். ஆனால் பாவம், பூனைக்குட்டி சில மணிநேரங்கழித்து இறந்து விட்டது! விமலாவின் துன்பம் இவ்வளவு என்று கூறமுடியாது. அவள் பல நாள் கண்ணீர்விட்டு அழுதாள். கண்ணன் எவ்வளவு முயன்றும் அவளைத் தேற்ற முடியவில்லை! இது அவள் கருணைத் திறத்தை விளக்கும் பல சான்றுகளில் ஒன்று.

கண்ணன் தனக்குத் திருமணமாகி இரண்டு மாதங்களுக்குப் பிறகு நீதிமன்றத்தில் வழக்கறிஞனாக அமர்ந்தான். சட்டங்களின் நுட்பங்களைத் தெளிய உணரும் திறம் அவனுக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. எனவே அவன் வழக்காடுவதில் தலைசிறந்து விளங்கினான். விரைவில் அவனுடைய புகழ் எங்கும் பரவியது. எவ்வளவு சிக்கலுடைய வழக்கையும் கண்ணன் எடுத்து விவாதிப்பானானால், அவனுக்கு வெற்றிதான். 'பானை பிடித்தவள் பாக்கியம்' போலும்! கண்ணனுக்கு வழக்குகள் வந்து குவிந்தன; எனவே பொருளும் குவிந்தது.

வாழ்க்கை இன்பத்தை மனமார நுகர்தற்கு இன்றியமையாத செல்வமும் பொருளும் விமலாவுக்கு அளவு கடந்து இருந்தன. எனினும் அவள் தன் வாழ்க்கையில் ஓர் இம்மி அளவும் இன்பங் காணவில்லை. அவள் ஏதோ குற்றம் செய்து விட்டதாக அவள் நெஞ்சு உறுத்திக்கொண்டே இருந்தது. இதனால் அவள் உடல் நாளடைவில் மெலிந்தது.

(தொடரும்)

வெறும் புகழ்ச்சியின் வேலை!

ஒரு காரியாலயத்தில் இரு அழகான குமரிகள் வேலைபார்த்து வந்தனர். ஆனால் இவ்விருவரும் நெருங்கிப் பழகுவதில்லை. ஒருத்திக்கு மற்றொருத்தியைக் கண்டால் ஓரே வெறுப்பு. ஆனால் ஒரு நாள் திடீரென்று இந்த இரண்டு நங்கைமார்களும் மிகவும் அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தனர். இது மற்றவர்களுக் கெல்லாம் பெரு வியப்பாக இருந்தது. காரியாலயத் தலைவரோ சிரித்துக்கொண்டே தன் பக்கத்தில் இருந்தவரை நோக்கி, 'நேற்று இந்த இரண்டு பெண்களையும் தனித்தனியாக அழைத்து "உன்னுடைய அழகையும், குணத்தையும், அறிவையும் பற்றி மற்றொருத்தி என்னிடம் எவ்வளவு புகழ்ந்து பேசினாள் தெரியுமா?" என்று ஒவ்வொருத்திக்கும் கூறினேன். அதனுடைய விளைவுதான் இந்தத் திடீர் மாறுதல்' என்றார்.

உள்ளத்தின் உண்மை

குறிப்பு:— மனிதனின் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனுகும். உள்ளத்தைப் பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப் பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெரு. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும் முழு முகவரியையும் குறித்து "ஆசிரியர், 'கலைக்கதிர்' பூளைமேடு, கோயமுத்தூர்" என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

●

ஏதாவது ஒரு தவருன காரியத்தைச் செய்யத் துணிந்தால் மனத்திலிருந்து ஏதோ ஒன்று 'அதைச் செய்யாதே' என்று கூறுவதுபோ லிருக்கிறது. ஏன்?

சமூகத்திற்கு ஒவ்வாத காரியங்களைச் செய்யக்கூடாது என்று ஒவ்வொருவனும் குழவிப் பருவம் முதற் கொண்டு அறிவுறுத்தப் படுகிருன். 'ஓதாமல் ஒரு நாளும் இருக்கவேண்டாம்' என்று அறிவுறுத்தப்பட்ட ஒரு குழந்தை படிக்காமல் ஒருநாள் பள்ளி செல்லும் போது பயந்து பயந்தே செல்லுகிறது. அதனுள்ளத்திலும் தான் செய்தது தவறு என்று உணருகிறது. குழந்தை வளர வளர, சமூகத்தில் பழகப் பழக நன்மை தீமைகளையும், செய்யக் கூடாதவைகளையும் அறிகிறது. இவை நிரந்தரமாக உள்ளத்தின் ஒரு பகுதியில் அமைந்து வேலை செய்ய ஆரம்பிக்கின்றன. இந்த உள்ளத்தின் ஒருபகுதி, செய்யக் கூடியவைகளைச் செய்யக்கூடாதவைகளிடமிருந்து பிரித்து நமக்கு அறிவு உறுத்துகிறது. பொதுவாக மக்கள் இதை 'மனச்சாட்சி' என்று கூறுவார்கள். இந்த மனச்சாட்சியின் துணை கொண்டே தான் காவலர்கள் முதல் கள்ளர்கள் வரை தங்களது தினசரித் தொழிலை நடத்துகிருர்கள். மனச்சாட்சி என்று கூறப்படும் இந்த உள்ளத்தின் ஒரு பகுதிக்கு உளநூலறிஞர்கள் 'சூபர் இகோ' (Super Ego) என்ற பெயரை அளித்திருக்கிருர்கள். இந்த 'சூபர் இகோ' பிறப்பால் அமைவது அன்று; அது அவனவன் சமூகச் சூழ்நிலைக்குத் தக அமைகிறது. தென்னிந்திய சமூகச் சூழ்நிலையில் வாழ்ந்து அதற்குத் தக அமைந்த ஒருவனது 'சூபர் இகோ'வின் இயங்கு முறை மேல்நாட்டில் வாழ்ந்து அதற்குத்தக அமைந்த 'சூபர் இகோ'வுக்கு மாறுபட்டதாகவே இருக்கும்.

பொது இடத்தில் 'ஒருவன் தன் மனைவியை முத்தமிடுதல் தவருக மேலை நாடுகளில் கருதப் படுவதில்லை. அவர்கள் மனதிலும் தவருகத் தோன்றுவதில்லை. நமது நாட்டில் ஒரு பொது இடத்தில் இதுபோன்ற நடத்தையைக் கண

வன் மனைவியர்கள் தம்மையும் அறியாது மேற்கொள்வார்களானால் பிறகு அவர்கள் தாம் அறியாது செய்த நடத்தையை உணர்ந்து திருடனைத் தேள் கொட்டியது போன்ற முக பாவனையை அடைகிறார்கள் அல்லவா?

('சூபர் இகோ'வைப் பற்றிய விளக்கமான கட்டுரை அடுத்த 'கலைக்கதிர்' இதழில் வெளி வரும்.)

மனத்திற்கும் இருதயத்திற்கும் சம்பந்தம் உண்டா? மனத்திற்கும் மூளைக்கும் சம்பந்தம் உண்டா?

மனத்திற்கும், பொதுவாக உடலுக்கும் சிறப்பாக மூளைக்கும் தொடர்பு உண்டு. ஒருவனுக்குக் காயம் பட்டால் அவனுக்கு உடலுக்கு ஊறு ஏற்படுகிறது. அதோடுகூட அவன் உள்ளத்தில் 'வலி' உணர்ச்சியும் அருவருப்பான (Un-pleasant Feeling) உணர்ச்சியும் ஏற்படுகின்றன. அதே போன்று பயம் உள்ள நிலையைக் குறிக்கிறது. அதிக பயம் ஏற்பட்டால் கை கால் நடுக்கம், வியர்வை கொட்டல், இருதயத் துடிப்பு, அதிக இரத்த ஓட்டம் முதலியவைகள் ஏற்படுகின்றன. இவை காரணமாக மனத்திற்கும் உடலுக்கும் தொடர்பு இருக்கிறது என்றே கூறலாம்.

பல் வேறு மிருகங்களின் மூளையின் அளவை நோக்கினால், மீனினது மூளையின் அளவு நாயினது மூளையின் அளவைவிடச் சிறியதாயிருக்கிறது என்றும், நாயினது மூளை அளவு குரங்கை விடச் சிறியதாயிருக்கிறது என்றும், குரங்கினது மூளை அளவு மனிதனை விடச் சிறியதாயிருக்கிறது என்றும் நன்றாக அறியலாம். மீனை விட அறிவு வாய்ந்தது நாய்; குரங்கு நாயை விட அறிவு வாய்ந்தது; மனிதன் குரங்கை விட அறிவு வாய்ந்தவன். இவ்வுண்மையை யாவரும் அறிவர். இதை ஆராய்ச்சி வாயிலாகவும் நிரூபித்திருக்கிறார்கள். எனவே, மனத்திற்கும் மூளைக்கும் அதிகத் தொடர்பு இருக்கிறது என்று கூறலாம்.

மீன்கள் நீர் குடிப்பதில்லை

மீன்கள் நீரிலேயே வாழ்கின்றன. ஆகையால் அவைகள் வேண்டிய அளவு நீரைக் குடிக்கும் அல்லவா? அதுதான் இல்லை. அவைகள் நீரைத் தம் வாயினுள் எடுப்பது உண்மை. ஆனால் அதைக் குடிப்பதில்லை. நீரை அவைகள் சுவாசிக்கின்றன என்று கூறலாம். நாம் நம் சுவாசப் பைக்குள் காற்றை இழுப்பதுபோல மீன்கள் நீரைத் தம் செவுள்களுக்குள் செலுத்துகின்றன. செவுள்களிலுள்ள இரத்தம் நீரிலுள்ள பிராணவாயுவை இழுத்துக் கொள்கிறது. ஆனால் நீர் ஒரு சிறிதும் வயிற்றுக்குள் செல்வதில்லை.

'ஓரளவு பகற்கனவில் ஈடுபடுவது யாவருக்கும் இயற்கை. ஆனால், அளவுக்கு மீறிப் பகற்கனவில் ஈடுபடுவது பிறழ்வான மனநிலையையே குறிக்கும்.' என்பது போன்ற உண்மைகளை எடுத்து விளக்குகின்றது இக்கட்டுரை.

பகற் கனவு

திரு. தா. ஏ. சண்முகம், M.A., M.Litt.

★

பொதுவாக மக்கள் யாவரும் பகற்கனவில் (day dreaming) ஈடுபடுவது இயற்கையே. கான்கலின் (Conklin E. S) என்பவர் மாணவர்களிடையே நடத்திய ஆராய்ச்சியில் நூற்றுக்கு 69 பேர் அடிக்கடி பகற்கனவில் ஈடுபடுவதாகவும், மீதி 31 பேர் எப்போதாவது ஈடுபடுவ்தாகவும் கண்டறிந்தார். எனினும் பகற்கனவு காண்பதில் மக்களிடையே வேறுபாடு இருக்கிறது. சிலர் அதிக நேரம் பகற்கனவில் ஈடுபடலாம்; மற்றவர்கள் சிறிது நேரமே ஈடுபடலாம். ஒருசிலர் நடக்க முடியாதவைகளைப் பற்றி எண்ணி 'ஆகாயக் கோட்டைகள்' கட்டலாம்; மற்றும் சிலர் எதிர்கால வாழ்க்கைக்குத் தன் திறமைக்குத் தகத் திட்டங்களை வரையறுக்கலாம். பெரும்பாலும் தினசரி வாழ்க்கையில் அயர்ந்து ஓய்ந்து இருக்கும் சமயங்களில் பகற்கனவு உள்ளத்தில் எழுவது இயற்கை. மேலும் ஒருவன் கும்பலில் இருக்கும் போது பகற்கனவில் அதிகம் ஈடுபடுவதில்லை. தனிமையே பகற்கனவு எழுவதற்கு வசதியாக அமைகிறது. பகற்கனவு பகல் நேரங்களைவிடப் பொழுது சாய்ந்த நேரத்திலும், இரவில் நிலா வெளிச்சத்திலும் அதிகம் எழுகிறது. ஓடும் நீரின் மெல்லிய ஓசை, மெதுவாக எழும் சங்கீதம், வெகுதூரத்திலே தெரியும் மலையுச்சி முதலியவைகளும் பகற்கனவைத் தூண்டுகின்றன என்று அறிஞர்கள் கண்டிருக்கிறார்கள். யுங் (Jung G. C.) என்ற உளப்பாகுபாடு அறிஞர் [1] 'இன்ட்ரோவர்ட்' (introvert) மக்களிடத்துத் தான் பகற்கனவில் ஈடுபடும் இயல்பு அதிகம் உண்டு என்றும், 'எக்ஸ்ட்ரோவர்ட்' (Extrovert) மக்களிடத்து இந்த இயல்பு அதிகம் கிடையாது என்றும் மக்களை வகைப்படுத்திக் கூறும் போது விவரிக்கிறார். பொதுவாக உளநூலறிஞர்கள் யாவரும் குழந்தைகளிடத்தும் அநாகரிக மக்களிடத்தும் (Savages) பகற்கனவு காணும் இயல்பு அதிகம் உண்டு என்று கண்டறிந்திருக்கிறார்கள். குழந்தைகளும் அநாகரிக மக்களும் பகற்கனவில் ஈடுபடும்போது சாதாரண மக்களைப் போலல்லாமல், அவைகளை உண்மையான நிகழ்ச்சிகளாகவே எண்ணி அதன்படி நடத்தையை மேற்கொள்ளுகிறார்கள். இதற்குக் காரணம் பகற்கனவில் ஏற்படும் நிகழ்ச்சிகளைத் தினசரி வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளினின்றும் பிரித்தறிய முடியாத உள்ள நிலையில் இருப்பதேயாகும். இதை நாமே நமது குழந்தைகளைக் கூர்ந்து கவனித்தால் அறி

1 இன்ட்ரோ—எக்ஸ்ட்ரோவர்ட் மக்களது தன்மைகளைக் கலைக்கதிர் மலர் 2, இதழ் 3 பார்க்கவும்.

யலாம். அவைகள் தனியாக இருக்கும் போது எதோ பேசிக்கொண்டிருப்பதையும், பொம்மை போன்ற உயிரற்ற பொருள்களோடு பேசிக் கொண்டிருப்பதையும் யாவரும் அறிவர். மக்டூகல் (Mc Dougal. W) என்ற உளநூலறிஞர் ஒரு சமயத்தில் அநாகரிக மக்களோடு (Savages) தங்கி இருக்க நேர்ந்தது. அந்தச் சமயம் ஒரு இளைஞன் இவருக்குப் பல சௌகரியங்களைச் செய்து கொடுத்து இவருக்குப் பாதுகாவலனாக இவரோடேயே தங்கி இருந்தான். அப்போது அவன் தான் செய்த திறமைமிக்க காரியங்களை எடுத்துரைத்தான். அவைகள் பல நடந்திருக்க முடியாதவைகளாகும். அவன் கூறியவைகள் பல்வேறு காட்டு மிருகங்களோடு உரையாடுதல், பலரைக் கொண்ட ஒரு பெருங் கூட்டத்தைக் கொன்று அழித்தல் முதலியனவாகும். முதலில் இவைகளையெல்லாம் மக்டூகல் பொய்கள் எனக்கருதினர். எனினும் பிறகு அவர், இந்த இளைஞன் 'மனக்கோட்டை' கட்டி அதிலே வாழ்ந்திருக்கிறான் என்றும் தனது பகற்கனவில் தான் நடத்திய வீரச் செயல்களை உண்மையாக நிகழ்ந்த செயல்களாகவே கருதி வெளியிடுகிறான் என்றும் அறிந்தார். இந்த நிலைமை குழந்தைகள் கனவுகள் கண்டு விழித்து எழுந்து, அவைகள் உண்மையாகவே நடந்தவைகள் என நினைத்துக் கொள்வதற்கு ஒப்பாகும். இந்த வகையைச் சேர்ந்ததே நாம் சிறிய வகுப்புகளில் படித்த 'அல்னஷர்' கதை. அல்னஷர் ஒரு சிறிய கண்ணாடி வியாபாரி. அவன் ஒருநாள் தனது சாமான்களை எதிரிலே ஒரு கூடையில் பரப்பி வைத்து, பகற்கனவில் ஆழ்ந்தான். அவன், மக்கள் திரள் திரளாக வந்து வாங்குவதாகவும், அதனால் அவன் பெரிய பணக்காரனாகி நூற்றுக் கணக்கான வேலையாட்கள் தன் கட்டளைகளை எதிர் நோக்கிக் காத்திருக்க ஒரு பெரிய அரண்மனையில் வாழ்வது போன்றும், தனது கட்டளைகளை எற்று அடிபணியும் வேலையாளை எப்படித் தனது காலால் உதைத்துத் தள்ளுவது என்றும் 'மனக்கோட்டை' கட்டி அதன்கண் ஆழ்ந்து உதைத்துத் தள்ள எதிரில் கூடையிலிருந்த கண்ணாடிச் சாமான்களெல்லாம் உருண்டு விழுந்து உடைந்து தூளாயின. இந்தக் கதை யாவரும் அறிந்ததே.

எல்டன் மேயோ (Elton Mayo) போன்ற அறிஞர்கள் பெண்களிடத்து ஆண்களைவிடப் பகற் கனவு காணும் தன்மை அதிகம் இருக்கிறது என்று வெளியிட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் ஆண்களைவிடப் பெண்கள் அதிகம் மன முழுதும் ஆழ்த்தும் வேலைகளில் பொதுவாக ஈடுபடுவதில்லை என்பதாகும். வீட்டு வேலைகளில் ஈடுபடும்போது கைகள் தங்கள் வேலைகளைச் செய்ய, மனமானது யதேச்சையாகத் திரிகிறது. அவர்கள் சமையல் செய்தல், தையல் வேலையில் ஈடுபடல் போன்ற நன்கு பழகிய வேலைகளில் ஈடுபடுவதே இதற்குக் காரணமாகும். மேலும் பெண்களின் பகற் கனவுகள் நடக்கமுடியாத பொருள்களைப் பற்றியதாக இருக்குமென்றும், ஆண்களது பகற் கனவுகள் சாதாரணமாக வாழ்க்கையில் நடக்கக் கூடியனவாக இருக்கும் என்றும் பால்களிடையே வேறுபாடுகளை விவரிக்கும்போது கூறுவர். ஆனால், தற்காலத்து இயந்திரங்களைக் கொண்டு இயங்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஆண்கள் பலரும் இதுபோன்ற வேலைகளில் (Mechanical Works) ஈடுபட்டிருப்பது காரணமாக அவர்களிடத்தும் பகற் கனவு காணும் தன்மை அதிகம் வளர்ந்துகொண்டே வருகிறது. இந்த 'இயந்திர நாகரிகத்தினால்' மக்களிடையே பிறழ்வான உள்ள நிலையும் அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறுவாரும் உளர்.

பகற் கனவில் முக்கிய பாகத்தைத் தாங்குபவன் (Hero) பகற் கனவு காண்பவனேயாகும். பகற் கனவு

காணும் மக்களை இரு வகையாகப் பிரிப்பதும் உண்டு. அதாவது எந்தக் காரியத்தை எடுத்தாலும் சாதித்து வெற்றி யடைவதுபோன்று காண்பது ஒரு வகையினர் (Conquering Hero). எப்போதும் துன்பத்தில் ஆழ்ந்து அவதியுறுவது போன்று காண்பது மற்றொரு வகையினர் (Suffering Hero).

பகற்கனவுக்கு அடிப்படையானவை காமம், கோபம், அச்சம் போன்ற இயல்பூக்கங்களும், கலக்க (Anxiety) மனநிலையும், மற்றும் பல் வேறு இச்சைகளும் (Desire) ஆகும். குழந்தைகளிடத்துப் பெரும்பாலும் தம் பெற்றோர்களைப் போன்று இருக்கவேண்டும் என்ற அடிப்படையான இச்சை காரணமாகத் தாங்கள் பெற்றோர்களைப் போல நடக்கப் பகற்கனவு காண்கிறார்கள். தங்களிடம் உள்ள விளையாட்டுப் பொம்மைகளைக் குழந்தைகளாகப் பாவித்து, அவைகளோடு பேசிக் கொஞ்சுவதும், அன்பினால் கடிந்து கொள்வதும், பாலூட்டித் தாலாட்டி உறங்க வைப்பதும் யாவரும் அறிந்ததே. பெற்றோர்களைப் போன்று நடத்தையை மேற்கொள்ள மனக் கோட்டை கட்டும் இயல்புடைய குழந்தைகள், பெற்றோர்களது நடத்தை விபரீதமாகவும், மது பானம் அருந்துதல், எப்போதும் சண்டை போடுதல், விபசாரிகளாக இருத்தல் முதலிய நடத்தை யுடையவர்களாகவும் இருந்தால் குழந்தைகள் பிற் காலத்தில் அவற்றை மேற் சொள்ளுகின்றன. குழந்தைகள் பல மணிநேரம் பகற் கனவில் ஈடுபடும் இயல்பு உடையவர்கள். சில குழந்தைகள் தொடர்ந்து சில நாட்கள் பகற் கனவில் ஆழ்ந்திருப்பதையும் அறிஞர்கள் கண்டிருக்கிறார்கள். குழந்தைகளிடம் பூர்த்தியாகாத இச்சைகளும் பகற் கனவு வழியாகப் பூர்த்தி யடையும். செல்வருடைய குழந்தைகள் தங்களிடம் காசு அதிகம் இருப்பதனால் பல விதத் திண்பண்டங்களை வாங்கி வயிறு புடைக்கத் தின்று ஆனந்திக்கிறார்கள். இதைக் கண்ணுறும் ஏழைக் குழந்தை ஒன்று ஒரு மூலையில் சென்று பகற் கனவில் ஆழ்கிறது. தன்னிடம் அதிகம் காசு இருப்பது போலவும், பல விதத் தின்பண்டங்கள் வாங்குவது போலவும், மற்றக் குழந்தைகள் தன்னிடம் வந்து 'பிச்சை' எடுப்பது போலவும், தான் வயிறு ஆரத் தின்பண்டங்களை உண்டு ஆனந்திப்பது போலவும் பகற் கனவு கண்டு தனது இச்சையைப் பூர்த்திசெய்து கொள்கிறது.

குமரப்பருவத்திலிருப்பவரது பகற் கனவானது பொதுவாகத் திருடர்கள் வீட்டில் நுழைவது, தாம் வெளியே செல்லும்போது பலர் தம்மைத் துரத்துவது போன்ற பயத்தைத் தரும் நிகழ்ச்சிகளும், ஆபத்தினின்று காப்பாற்றிப் பணம், பெண் முதலியவைகளை அடைவது போன்ற நிகழ்ச்சிகளும் உடையதாயிருக்கும். சாதாரணமாக, ஓர் ஆடவன் செல்வர் குடும்பத்தில் தோன்றியவனாகவும் 'இரம்பை' போன்று அழகுடைய ஒருத்தியை அடைவதாகவும் பகற் கனவு காண்கிறான். அதே போன்று ஏழைச் சிறுமி ஒருத்தி தன்னுடைய அழகில் மயங்கி உயர்ந்த குணமும் அறிவு ஆற்றல் முதலியவைகள் உருவாய மைந்த ஓர் அரசிளங் குமரனை அடைவதாகவே பகற் கனவு காண்கிறாள். பகற் கனவின் வழியாக மேற்கூறியவை போன்ற 'மனக் கோட்டைக்' கதைகள் எழுந்திருக்கின்றன. குமரப் பருவத்திற்குப் பிறகு, அதாவது முதிர்ச்சிப் பருவத்தில் பகற் கனவு காணும் தன்மை அதிகம் குறைய ஆரம்பிக்கிறது. குழந்தை குமரப் பருவங்களில் கட்டிய 'மனக் கோட்டை'கள் பல வாழ்க்கையில் சிதற அடிக்கப் படுகின்றன. ஒருவன் முதிர்ச்சிப் பருவத்தில் வாழ்க்கையின் பல துறைகளில் பெரிதும் ஆழ்ந்திருப்பதனால் தனது மனத்தை அவற்றினின்றும் விடுவித்துப் பகற்கனவில் ஈடுபடுத்தப் போதிய வாய்

ப்பும் நேரமும் கிடைப்ப தில்லை. ஓய்வு நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் பகற் கனவு காணும் இயல்பு நாளடைவில் குறைய ஆரம்பிக்கிறது. படுக்கையில் தூக்கம் வராது புரண்டு கொண்டிருக்கும் போதே பகற் கனவில் ஈடுபட வாய்ப்புக் கிடைக்கிறது. அந்தச் சமயத்திலும் அவனது பகற் கனவு தன் தொழிலிலோ மற்றத் துறையிலோ முன்னேறுவதைக் குறிக்கும். பொதுவாகப் பகற் கனவு தினசரி நிகழ்ச்சிகளை ஒட்டியே இருக்கும்.

பகற்கனவு ஓரளவு வாழ்க்கையில் பூர்த்தி செய்ய முடியாத இச்சைகளுக்கு ஒரு வழியாக அமைகிறது. ஓரளவு பகற்கனவில் ஈடுபடுவது யாவருக்கும் இயற்கை. ஆனால் அளவுக்கு மீறிப் பகற்கனவில் ஈடுபடுவது பிறழ்வான மன நிலையையே குறிக்கும். மக்கள் வாழ்க்கையில் எதிர்த்து நிற்கும் 'முட்டுக் கட்டை'களை ஒழித்துத் தம் காரியங்களைச் சாதிப்பதே முறை. மேலும், வாழ்க்கையில் ஏற்படப் போகும் நிகழ்ச்சிகளுக்கு அஞ்சிப் பின் வாங்கி, பகற்கனவில் ஈடுபடுவது திடமான உள்ள நிலையைக் குறிக்காது. மக்கள் அதிகநேரம் பகற்கனவில் ஈடுபடுவதால் அவர்கள் உண்மை வாழ்க்கையில் (Real life) வாழாது கற்பனை உலகில் வாழ ஆரம்பிக்கிறார்கள். அதன் விளைவாக அவர்கள் கற்பனை உலகில் வெற்றியடைந்தாலும், தாம் உயிர் வாழ்வதற்கு முக்கியமான உண்மை வாழ்க்கையில் தோல்வியுற்று மேலும் மேலும் பகற்கனவில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து பழகாமலும் உலகத்தோடு ஒத்துப் போகாமலும் தமது இல்லத்திலே ஒரு மூலையிலே தனித்திருந்து பகற்கனவில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் பிறரோடு பழகாமல் இருப்பதற்குக் காரணம், தம் உறவினர்களும், நண்பர்களும், மற்றவர்களும் உதவாக்கரைகள் என்றும், அவர்கள் தமக்குத் தீங்கிழைக்கவே எண்ணுகிறார்கள் என்றும் தாம் அறிவிலும் திறமையிலும் அந்தஸ்திலும் உயர்ந்தவர்கள் என்றும் கருதுவதேயாகும். இதனால் அவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து பழகாமல் தனித்து வாழ்ந்து பகற்கனவு காணும் இயல்பை மேலும் மேலும் வளர்க்கிறார்கள். பகற்கனவு காணும் தன்மை வளர வளர, வெளியுலகத்துத் தொடர்பு நீங்குகிறது. அந்த உள்ள நிலையில் இருப்பவர்கள், 'ஸ்கிஸோபிரானியா' (Scizophrenia) போன்ற உள்ள வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள் ஆவர். இந்த வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பவர் மாதக்கணக்கில் பகற்கனவில் ஆழ்ந்திருப்பார்கள். எதிரிலே ஒரு பீரங்கியே வெடித்தாலும் அல்லது 'கொரியா' யுத்தமே நடந்தாலும் அவர்களுக்குத் தெரியாது. இவ்வாறு உடல்-உள்ளம் யாவற்றையும் பகற்கனவுக்கு இரையாக்கி வாழும் மக்களை 'மருத்துவச் சாலையில்' தான் காண முடியும். அவர்களைக் கூர்ந்து நோக்கினால் 'சமாதி' நிலையிலிருப்பது போல் தோன்றும். அவர்கள் ஒரு மூலையில் காலை வளைத்து ஒடித்து ஓரே நிலையில் பல மணிநேரம் ஆழ்ந்து இருப்பதைக் காணலாம். முகத்தில் சிரிப்பு, கோபம், கவலை முதலிய உணர்ச்சிகள் இலேசாக மாறி மாறி வருவதையும் காணலாம். அவர்கள் பல நாட்கள், பல வாரங்கள் நீர் அருந்தாமலும், உணவு உண்ணாமலும் மேற்கூறிய நிலையில் இருப்பதும் உண்டு. மருத்துவச் சாலைகளில் அவர்களுக்குப் பலாத்காரமாக வாயைத்திறந்து உணவை ஊட்டுவார்கள். இது போன்ற நிலையில் மருத்துவச்சாலைக்கு வெளியே இருந்தால் மக்கள் பலர் 'சாமியார்' என்றும் அவர் 'சமாதி' நிலையில் இருக்கிறார் என்றும், அவருக்குப் பாலும், பழமும் அளிப்பதும் உண்டு. ஆம், நோய்வாய்ப் பட்டவனுக்கு உணவு அளிப்பதில் தவறு இல்லைதான்.

நா

கண்

செவி

இவற்றை

அடக்கி

ஆள்பவனே

காந்தியத்தை

உணர்ந்தவன்

ஆவான்

திரு. சந்தாழியான்

"பட்டப் பகலிலே பாவலர்க்கு......................

வானப் பெருவெளிக்கு
    வனப்பூட்டி மண்ணுக்குத்
தானமாய் வளமூட்ட
    வருமேகப் பெருந்திரளே !



திரு. சந்தாழியான்

..................வாய்க்குமொரு நெட்டைக் கனவு"

சிந்தனையால் செகம்விழுங்கிச்
    செயல்மறந்து வீற்றிருக்க.

உன்றன் எழிற்கரையே
    உறுதுணையாய் வாய்ப்பதுகாண்



'யூசிஸ்'

மை இல்லா எழுத்து

(60-ம் பக்கம் பார்க்க)

மனித தரிசனம்

திரு. பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, M. A., B. L.

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டிலே தயோஜெனீஸ் என்னும் பெயருடைய ஒரு பெரிய ஞானி இருந்தார். 'அலெக்ஸாண்டர் சக்கரவர்த்தியாயிருப்பதைவிடத் தயோஜெனீஸ் ஞானியாக இருப்பது ஆயிரம் மடங்கு மேன்மை உடையது' என்று உலகப் புகழ் பெற்ற மகாவீரனான அலெக்ஸாண்டர் மன்னன் ஒரு சமயம் கூறியதாகச் சொல்வதுண்டு. அத்தனைப் புகழ்வாய்ந்த அந்தச் சான்றோர் ஒரு நாள்—பங்குனி மாதம் பதினைந்தாம் தேதி—பகல் பன்னிரண்டு மணிக்கு லாந்தர் ஒன்றை ஏற்றிக் கையில் எடுத்துக்கொண்டு, அந்த நாட்டுத் தலைநகராகிய ஆதென்ஸ் பட்டணத்தின் வீதிகள் வழியாகப் போய்க்கொண் டிருந்தார். அதைக் கண்ட அந்நகரத்து மாந்தர், "இதென்ன பட்டப் பகலில் இவர் விளக்கேற்றிக் கொண்டு, தெரு வழியே செல்கிறாரே, என்ன காரணமோ தெரியவில்லை. இவரோ மகாஞானி. இவரிடம் எப்படிப் போய்க் கேட்பது" என்று அச்சமும் வியப்பும் அடைந்தவர்களாய் ஒருவர்க் கொருவர் சொல்லிக் கொண்டார்கள். அவர்களுள் சிறிது தைரியமுடைய ஒருவர் மெதுவாக அப்பெரியாரை அணுகி வணங்கி மிகுந்த வினயத்தோடு "அடிகளே, அடியேனுக்கு ஒரு ஐயப்பாடு" என்று தெரிவித்துக்கொண்டார்.

அதற்குத் தயோஜெனீஸ் "அப்பா, உனக்கு என்ன ஐயப்பாடு? சொல்லு கேட்போம்" என்று தமக்கு வழக்கமான கருணை நிறைந்த முறையில் கூறினார்.

"ஐயனே, வேறொன்றும் இல்லை. வெய்யில் கடுமையாக இருந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் தாங்கள் விளக்கை ஏற்றிக்கொண்டு வீதி வழியே செல்வதன் காரணம் எங்களுக்கு விளங்கவில்லை. அது தான் என் ஐயப்பாடு" என்று அந்த மனிதர் விண்ணப்பித்துக் கொண்டார். அதைக் கேட்டதும் பெரியாருடைய முகத்தில் துயர் சுமந்த புன்னகை ஒன்று அரும்பிற்று.

"அப்பா, நீ இந்தக் கேள்வியைக் கேட்பாய் என்று அறிவேன். நான் வெகு நாட்களாக இந்த நாடு முழுவதும் மனிதனைத் தரிசிக்கவேண்டுமென்று தேடி அலைந்துகொண் டிருக்கிறேன்" என்று பெரியார் சொன்ன அளவில், சந்தேக நிவர்த்திக்காகச் சான்றோரிடம் வந்தவர் "எந்த மனிதனைத் தேடுகிறீர்கள்? பெயரைச் சொல்லுங்கள். நான் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று கூறினார்.

"அப்பா, எந்த மனிதனையும் நான் தேடவில்லை, மனிதனையேதான் தேடுகின்றேன். இதுவரை அவன் என் கண்ணுக்குப் புலனாகவில்லை. அதனால்தான் விளக்கேற்றிக் கொண்டு போனால் ஒருவேளை காணக் கிடைப்பானோ என்று எண்ணி இந்தப் பட்டணத்தின் தெருக்களில் அலைந்து

கொண்டிருக்கிறேன்" என்று தயோஜெனீஸ் கூறினர்.

அதைக் கேட்ட ஆதென்ஸ் நகரவாசி 'பெரியாருடைய சொல் பெரும் புதிராக இருக்கின்றது' என்று எண்ணிக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்று சென்றர்.

சாதாரணமாக எல்லா தேசத்துச் சான்றோர்களும் எந்நேரமும் பரம்பொருளையே தேடிக்கொண்டிருப்பதாகச் சொல்லுவர். பிரம்மாவும் விஷ்ணுவும்கூட முறையே இறைவனுடைய முடியையும் அடியையும் தேடுவதாகப் புராணங்கள் கூறும். அயனும், அரியும் தேடியும் தேடொணுத் தேவனைத் தேடிக் கண்டுகொண்டதாகத் திருநாவுக்கரசர் கூறுவதை எல்லோரும் அறிவர். இவ்விதம் நல்லோர்கள் கடவுளை நாடுவதாகச் சொல்லும்பொழுது தயோஜெனீஸ் என்னும் ஞானிமட்டும் கடவுளைத் தேடுவதை விட்டுவிட்டு, மனிதனைத் தேடியதின் காரணம் யாது? கடவுளைத் தேடுவது எளிது, மனிதனைத் தேடுவதுதான் சிரமம் என்று எண்ணினரா? அல்லது கடவுளைவிட மனிதனே பெரியவனென்று எண்ணினரா? அல்லது மனிதனை ஆராய்வதே மனிதன் கடமை என்று, ஆங்கிலக் கவிஞர் அலெக்ஸாண்டர் போப் என்பவர் கருதுவது போலவே, இவரும் கருதினரா? அல்லது—

"நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பரமர்க்கு அது ஆமே"

அதாவது நடமாடும் கோயிலாகிய மனிதனை வணங்குவதே படமாடும் கோயிலிலுள்ள பரமனை வணங்குவதாகும் என்று—திருமூலர் கூறியபடியே இவரும் எண்ணினரா?

இவர் மனிதனைத் தேடிப் பட்டப் பகலில் விளக்கேற்றிக் கொண்டு போனதைப் பார்த்தால் மனிதனைக் காண்பது எளிதான காரியமன்று என்றும் அவன் அத்துணை அருமையான பொருள் என்றும் தோன்றுகிறது. அப்படி மனிதன் எளிதில் தரிசனம் தராத அளவு அவ்வளவு அருமையான பொருளாயிருந்தது அந்தக் காலத்தில் மட்டுந்தானா? அது இந்தக் காலத்துக்கும் பொருந்துமா? உலகத்தில் 2 கோடி மக்கள் இருந்த அக்காலத்தில் அருமையாயிருந்தது. இருநூறு கோடி மக்கள் உள்ள இந்தக் காலத்திலும் அருமைதான் என்று அறிஞர்கள் பலர் கூறுகின்றனர். ஆனல், அறிஞர்கள் மனிதனைக் காண்பது அருமையென்று கூறுகிறர்களேயன்றி முடியாத காரியம் என்று கூறவில்லை. மனிதன் அந்தக் காலத்திலும் இருந்தான், இந்தக் காலத்திலும் இருக்கிறன்.

தயோஜெனீஸ் என்ற ஞானி யவன தேசத்தில் வாழ்ந்த அதே காலத்தில், "இளம் பெருவழுதி" என்ற பெயருடைய பாண்டிய மன்னர் ஒருவர் தமிழ் நாட்டில் இருந்தார். அவரிடம் அவருடைய நண்பர்கள் "இந்த உலகம்-அதாவது மனித இனம்-அழியாமல் நிலைத்திருப்பதன் காரணம் என்ன" என்று ஒரு நாள் கேட்டனர். அதற்கு அவ்வரசர் பெருமான்

"உண்டால் அம்ம இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனில்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்-தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே."

என்று விடை கூறினர். அதாவது 'உலகம் நிலைத்திருப்பதற்குக் காரணம் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர் உலகத்தில் இருந்துகொண்டிருப்பதுதான்' என்று கூறினர்.

இவர் அரசராயிருந்தும் மக்கள் இனத்தைக் காப்பவர் அறிவுடையோர் என்றே, ஆற்றலுடையோர் என்றே,

செல்வமுடையவரென்றே கூறினாரில்லை.

"அறிவினுன் ஆகுவது உண்டோ, பிறிதின் நோய்
தன்நோய்போல் போற்ருக் கடை"

அதாவது பிறர் நலம் பேணுபவரே அறிவுடையோர், பிறர் நலம் பேணுதவர் மக்கட் பண்பு இல்லாதவர். அவர்கள்

அரம் போலும் கூர்மையினரேனும், மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்

என்பதை இளம்பெருவழுதி அறிவார். இளமையிலேயே பெருவழுதியாயிருந்த இவருக்கு

"வேலன்று வென்றிதருவது"

என்பதும் நன்ருகத் தெரியும். அது போலவே

"பொருட் செல்வம்
பூரியார் கண்ணுமுள"

என்பதும் அவர் நன்ருக அறிந்த உண்மையாகும். அதனுல்தான் அறிவையோ ஆற்றலையோ செல்வத்தையோ மனிதனுடைய சிறப்புக்குக் காரணமாகக் கூருமல், மற்றவர்களுக்காக உழைப்பதையே மக்கட் பண்பாகக் கூறினர்.

மனித இனத்தை மனிதர்கள்தான் மடியாமல் காக்க முடியும். அப்படியிருக்க மற்றவர்கட்காக உழைப்பவரே மனித இனத்தைக் காப்பவர் என்று இம்மன்னர் கூறுவதால் மற்றவர்க்காக உழைப்பவரே மனிதர் என்பது புலனுகின்றது. இதையே உலகத்தில் அவதரித்த உத்தமர்கள் எல்லோரும் உரைக்கின்றனர்.

ஆனுல், அறிஞர்கள் கூறுகிருர்களே என்பதற்காக அதை நம்புவோம் என்று நாம் எண்ணவேண்டியதில்லை. நம்முடைய அனுபவத்தின் மூலமாகவும் அவர்களின் கூற்று உண்மைதான் என்று நாம் அறிந்துகொள்ள முடியும். இரண்டு நாள் பட்டினியாக உள்ள ஒரு தாயையும் அவள் குழந்தையும் ஒரு பக்கம் நிறுத்துவோம்; இரண்டு நாள் பட்டினியாக உள்ள ஒரு பசுவையும் அதன் கன்றையும் மறுபக்கம் நிறுத்துவோம். ஒரு பிடி அன்னத்தைத் தாயின் முன்பும், ஒரு கற்றைப் புல்லைப் பசுவின் முன்பும் வைப்போம். அப்பொழுது என்ன நடக்கிறது என்று பார்ப்போம். பசுவானது தன் கன்றே ஆனுலும் கன்றை முட்டித் துரத்திவிட்டுப் புல்லைத் தானே தின்றுவிடும். ஆனுல், தாயோ தன் வயிற்றை இறுகப் பிடித்துக்கொண்டு அன்னத்தைக் குழந்தைக்கே ஊட்டி மகிழ்வாள். இதிலிருந்து மற்றவர் நலத்தை நாடுவதே மக்கட் பண்பு என்பது தெளிவாகும். புல்லைத் தின்ன வொட்டாமல் கன்றைப் பசு துரத்தினுலும், கன்று வேறு இடம் போகவும், புல்லைத் தேடிக்கொள்ளவும் முடியும். ஆனுல் தாய் குழந்தைக்கு அன்னத்தை ஊட்டாமல் இருந்துவிட்டால், குழந்தை வேறு இடம் போகவும் முடியாது; உணவைத் தேடிக்கொள்ளவும் முடியாது. இந்த உண்மையை மனத்தில் வைத்தேதான் இளம்பெருவழுதி என்ற மன்னர் மற்றவர்க் குழைப்பவர் இருப்பதால்தான் மனித ஜாதி அழியாமல் இருக்கின்றது என்று கூறினர் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

இத்தகைய மனிதப் பண்புடைய மக்கள் உலகத்தில் இருப்பதாகவே இளம்பெருவழுதி கூறுகிருர். அப்படி அவர் கூறும்பொழுது, அவருடைய காலத்தில் கிரேக்க நாட்டில் வாழ்ந்திருந்த டயோஜெனிஸ் மனிதனைத் தேடப் புறப்படக் காரணம் என்ன? பிறர் நலம் பேணும் பெரியோராகிய மனிதர்கள் இந்த நாட்டில் ஏராளமாக இருந்தனர், அந்த நாட்டில் அருமையாக இருந்தனர் என்று கூறமுடியாது. எந்த நாட்டில் எந்தக் காலத்திலும் ஒன்று போலவேதான் காணப்படுவார்கள். ஆனுல், அவர்கள் தேடுவார்க்கே தரிசனமும் கொடுப்பவர்கள். அநேக சமயங்களில் அவர்களாகக் காட்சி

யளிக்க வந்தாலும் நாம் கண்டு கொள்ளாமல் இருந்துவிடுவோம். அந்த கையோரைக் காணவேண்டுமென்ற அளவு கடந்த ஆவலுடையவர்க்கே அவர்களுடைய மாண்பமைந்த தரிசனம் கிடைக்கும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் திருவாரூரில் மாற நாயனுர் என்ற பெயருடைய மறையவர் ஒருவர் இருந்தார். அவர் சோம வேள்வி செய்தார். சிவபெருமானே நேரில் வந்து அவி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினுர். சுந்தர மூர்த்தி சுவாமிகளுடைய வேண்டுகோளுக்கிணங்கி நேரில் வந்து அவி ஏற்றுக்கொள்வதாகச் சிவபெருமான் வாக்களித்தார். வேள்வி முடிந்து அவி பகிரும் சமயத்தில் மாறநாயனுர் வேள்விச் சாலேயில் சிவபெருமானுக்காகக் காத்துக்கொண்டு நின்ருர். பிராமணர்களும் புரோகிதர்களும் சிவபெருமானேத் தரிசிப்பதற்காக மாற நாயனுரைச் சுற்றிச் சூழ்ந்து நின்றனர். அப்பொழுது திடீரென்று ஒரு வேடனும் வேடுவத்தியும் தங்கள் நாய்களுடனும் பன்றிகளுடனும் யாக சாலேக்குள் நுழைந்தனர். அதைக் கண்டதும் அங்கிருந்த மறையவர்கள் எல்லோரும் அவர்களே அடித்துத் துரத்த முயன்றனர். ஆனுல், மாற நாயனுரோ தாம் நின்ற இடத்தை விட்டு நகராமல் சிவபெருமான் வருவார் என்ற திட சித்தத்துடன் நின்று கொண்டிருந்தார். வேடுவன் அவர் எதிரே சென்றதும் அவர் வேடுவன் கையில் அவியினேப் பெய்தார். வேடுவனுக வந்தவர் சிவபெருமானே. இது போல் உறுதியான ஆசை உடையவர்க்கே மனித தரிசனமும் கிடைப்பதாகும்.

இந்த உண்மையையே ரவீந்திரநாத தாகூரும் கீழ்க்கண்டவாறு பொருள்படும் தமது பாடல் ஒன்றில் கூறுகின்ருர்:

"இருட்டி விட்டது, ஆனுல் இன்னும் விளக்கு
ஏற்ற வில்லே;
எதையோ எண்ணிக்கொண்டு தலேயைப்
பின்னிக்கொண் டிருந்தேன்;
அஸ்தமன சூரியன் அழகாக ஒளிவீசிக்
கொண்டிருந்தான்;
இளேஞரான பிரயாணி தேரைவிட்டு இறங்கி
வந்தார்;
அவள் எங்கே என்று கேட்டார்,
ஐயா, களேப்புற்ற பிரயாணியே,
அவள் நான் தான் என்று கூறக்கூடாதா?
கூருமலிருந்து விட்டேன்.
இப்பொழுதோ சாளரத்தினருகில் உட்கார்ந்து
ஐயோ ஏக்கத்துடன் திரும்பிய இளம்பிரயாணியே
அவள் நான்தான் அவள் நான்தான் என்று
இரவு முழுவதும் புலம்புகின்றேன்"

ஆகவே மனிதன் எப்பொழுதும் நமக்குத் தரிசனம் கொடுக்கக் காத்துக் கொண்டுதான் இருக்கிருன்; ஆனுல் நாம்தான் அவனேக் கண்டுகொள்ளாமல் இருந்துவருகிருேம். அதனுல் தான் தம்மைத் தேடி அலேயும் சந்நியாசியைக் குறித்துக் கடவுள் "என்னே விட்டுவிட்டு என்னேத் தேடி அலேகிருனே என்னுடைய அடியான்" என்று வருந்துவதாகத் தாகூர் கூறுகின்ருர்.

"பெரியோர்களேக் காண விரும்பினேன். அவர்களே நூல்களிலேயே காண முடியுமென்று எண்ணினேன். அவர்கள் என்னேச் சூழ்ந்து ஏழைகளிடையே நிற்பதை அறியாமல் போனேனே! பண்பாடு பண்பாடு என்று சொல்லும் நூற்கல்வியே இவ்வாறு என்னேக் காணமுடியாமல் குருடாக்கி விட்டது" என்று அமெரிக்க உளநூற்புலவர் சிகாமணி வில்லியம் ஜேம்ஸ் என்பவரும் இதையே வற்புறுத்துகின்ருர்.

என்ன புண்ணியம் செய்திருந்தேனே, இந்த மனித தரிசனம் எனக்கு இந்த மாதத்தில் இரண்டு மூன்று முறை கிடைக்கும் பேறு பெற்றேன். ஒருநாள் நான் என்னுடைய காரியாலயத்திலிருந்து கடற்கரைச் சாலேவழியாக வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது மழை பெய்துகொண் டிருந்தது. எனக்கு முன்னுல் சற்று தூரத்தில் ஒரு ஏழைக் கிராமவாசி மழையில் நனேந்து போய்க்கொண்

டிருந்தார். அவர் திடீரென்று நின்று சாலையில் எதையோ பொறுக்கினார். ஏதேனும் பணம் காசு மடியிலிருந்து கீழே விழுந்து சிதறிவிட்டனவோ, இவ்வளவு சாவதானமாக இந்த மழையில் பொறுக்கிக்கொண்டிருக்கிறாரே என்று எண்ணினேன். ஆனால், அவர் பக்கத்தில் போய்ப் பார்த்தபொழுது அவர் பணங்காசு எதையும் பொறுக்கவில்லை, சாலையில் கிடந்த முள் கொம்புகளைத்தான் பொறுக்கிக்கொண்டிருந்தார் என அறிந்தேன். அவர் அந்தக் கொம்புகளை ஒன்று விடாமல் பொறுக்கி அவைகளைச் சாலைக்கு அப்புறம் யார் காலிலும் படமுடியாத இடத்தில் போட்டுவிட்டுப் போனார். இவ்வளவும் சொட்டச் சொட்ட மழையில் நனைந்துகொண்டே செய்தார். இதைக் கண்டதும் தயோஜெனீஸுக்குக் கிடையாத மனித தரிசனம் எனக்குக் கிடைத்துவிட்டதாக எண்ணினேன். அதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே என் வீடு வந்து சேர்ந்தேன்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன் அரசாங்கக் கல்லூரிக்கு முன்னாலுள்ள நடைமேடையில் நடந்து வந்துகொண்டிருந்த பொழுது பாதையின் நடுவில் ஒரு பெரிய கல் கிடந்தது. அதனால் நான் சிறிது விலகி நடந்தேன். அதே கல்லைக் கண்டு சாலையின் ஓரத்தில் நடந்துகொண்டிருந்த முஸ்லீம் கிழவர் ஒருவர் நடைமேடைக்கு வந்து அந்தக் கல்லை எடுத்துத் தூரத்தில் எறிந்துவிட்டுச் சென்றார். அதைக் கண்டு வெட்கம் அடைந்தேன். 'இத்தகைய காட்சிகள் தினந்தோறும் எண்ணிறந்தன ஏற்பட்டும் இன்னும் மனிதனாகாமலிருந்துகொண்டிருக்கிறோமே' என்று வருந்தினேன்.

இதை எண்ணியே ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்னும் விஞ்ஞான சிகாமணி "மனிதன் மனிதனாகும் அளவு எது என்றால் தன்னைத் தானறப் பெறும் அளவே" என்று வற்புறுத்துகின்றார்.

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்

என்பது தமிழ் மறை.

அண்ணலின் ஒப்புரவு.

"வங்காளத்தில் இந்து முஸ்லிம் கலகம் நடைபெற்றபோது, நவகாளிப் பகுதியில் சிறு சிறு கிராமங்களின் மூலை முடுக்குகளில் ஒரு மெல்லிய உருவம் ஓயாமல் திரிந்து தொண்டாற்றியது. எண்பது ஆண்டுகளை நெருங்கும் முதுமையில் தனியே வாழ்வது—அதிலும் கலகம் நடைபெறும் பகுதிகளில் தன்னந் தனியாகத் திரிவது—உதவிக்கும் துணைக்கும் ஒருவரும் இல்லாமல் திக்கற்றவராகத் தனியே கொம்பு ஊன்றிக்கொண்டு நடமாடுவது—மத வெறிக்கு இரையாகி அமைதி இழந்து கொதிக்கும் மக்களிடையே சமரச சன்மார்க்கத்தைப் பேசிக்கொண்டு அன்பைப் பரப்ப வேண்டுமென்று தனியே இருப்பது கூடாது கூடாது என்று பலரும் எண்ணினார்கள். ஆனால், அந்த மெல்லிய உருவம் இத்தனைத் தடைகளையும் பொருட்படுத்தாமல், எள்ளளவும் அஞ்சுதல் கொள்ளாமல், கொம்பை ஊன்றிக்கொண்டு முன்பின் நடந்தறியாத மூலை முடுக்குகளில் நடமாடியது. இது உலக வரலாற்றில் கண்டறியாத புதுமையாகவே விளங்குகின்றது... ....பிறருக்கு உதவியாகும் முறையில் வாழும் ஒப்புரவு மிக உயர்ந்த பண்பாகும். அதைப்பற்றித் திருவள்ளுவர் கூறும்போது, ஒப்புரவால் வாழ்க்கையே கெடுமானாலும் அந்தக் கேட்டை அடைவதற்காக வாழ்க்கையையே விற்றுவிடலாம் என்கிறார்."

—டாக்டர் மு. வ.

எல்லாத் தேவர்களுக்கும் சூரபன்மனைக் கண்டால் தலைநடுக்கம்தான். இது வெறும் புராணம் இல்லை என்று விஞ்ஞானிகள் இயற்கை ஆற்றல்களை வென்று அடக்கிக் காட்டுகிறார்கள்.

நவீன சூரபன்மர்

திரு. ஏ. வி. குப்புரத்தினம், B. Sc.

.........சூரபன்மன் பிரமாவை நோக்கி, "எந்நாளும் இங்கு வந்து பஞ்சாங்கம் சொல்லிப் போகுக" என்றான். சூரியனை "ஆகாயத்திற் போய் என்றும் இளங்கதிராய் எறித்துத் திரிதி" என்று பணித்தான். சந்திரன் வளர்தல் தேய்தல் சுருங்குதல் இவற்றை விடுத்துப் பூரண கலையோடு சஞ்சரிக்க வேண்டுமென்பது கட்டளை. அக்கினி, அவன் நாட்டிலுள்ளவர்கள் யாவர் நினைத்தாலும் அவர்களிடம் வந்து அவர் பணிகளைச் செய்து, யார் தீண்டினாலும் "செந்தாமரை மலர்" போலக் குளிரவேண்டுமாம்! யமன் சூரபன்மனுடைய யானை குதிரை பரிவாரங்களையும் அவுணர்களையும் கொல்வதைக் கனவிலும் கருதாது அஞ்சிக் கிடக்கவேண்டும். அந்நகரத்தார் அணிந்து நீக்கிய மாலைகள் சந்தனம் முதலான குப்பைகளை வாயு அவ்வப்போது நீக்கவும், காற்றுப் பெருக்கிய இடங்கள் தோறும் பச்சைக் கர்ப்பூரம், கஸ்தூரி சந்தனம் இவற்றை அளாவிய பனிநீரை வருணன் தெளிக்கவும் கட்டளையிடப்பட்டார்கள்.

கட்டளைப்படி இந்திரன் காளாஞ்சியை ஏந்தினான்; குபேரன் அடைப்பையைத் தாங்கினான்; வாயு சாமரை வீசினான்; சூரிய சந்திரர்கள் குடையை நிழற்றினார்கள்; வருணன் ஆலவட்டம் வீசினான்; கருட கந்தர்வரும் சித்த வித்தியாதரரும் இசை பாடினர்; யமனும் அக்கினியும் பிரம்பை ஏந்தி எவரையும் விலகும்படிக் கோபத்தோடு பார்த்து ஆரவாரித்துப் பத்தியாக நிறுத்தினர்.........

சூரனது ஆணை—தேவர்கள் தலைவன் இந்திரன், சமுத்திரத்துத் தலைவனாகிய வருணனுதவியை நாட வருணன் கடலிலுள்ள மீன்களைக் கரையிலே மலைபோல உயர்த்தினான். தேவர்கள் மீன்களைப் பாம்புகளாற் கட்டித் தலையில் சுமந்து சூரன் அரண்மனைக்குக் கொண்டுவந்தார்கள்.

படைத்தல் தொழிலையுடைய பிரமனைக் காட்டிலும் பஞ்சாங்கம் சொல்வதற்கு "லாயக்"குள்ளவர்கள் யார்? சூரியன் "இளங்கதிர்" கொண்டு இதமாய்த் திரிய வேண்டுமாம், குடை நிழற்ற வேண்டுமாம்;—சூரபன்மன் உத்தரவு அது. காதலர்கள் களிப்பெய்த என்றும் மதி முழுமையாகவே இருக்கவேண்டும். 20-ம் நூற்றாண்டில் அவன் இருந்தால் போர்க் காலங்களில் இருட்டடிப்பு

(black-out) வெற்றிகரமாக நடக்கும். எதிரி விமானங்கள் வந்தால் அவற்றைப் பிடிக்க உடனே ஒளி பாய்ச்சும் விளக்காக (Search light) சூரிய சந்திரர்கள் பயன்படவேண்டும். சூரன் இருட்டடிப்பு முறையைக் கையாண்டது 'ஞாலமுங் ககனமுற்றும் மாயிரு ளுருவங் கொண்டு' என்று பிற்பகுதியில் கூறப்படுகிறது.

அக்கினிதேவன் சமையற் கலைக்கு வெம்மை மிக்க நெருப்பாகவும், குழந்தைகள் அதன் நிறக் கவர்ச்சியில் ஈடுபட்டால் செந்தாமரைபோலக் குளிர்ந்த விளையாட்டுப் பொருளாகவும் இருப்பதால் தொல்லையே இல்லை. யமன் தன்னுயிரையே கையிற் பிடித்துத் திரியவேண்டிய காலமும் வந்தது. குப்பை களையவும் சாமரை வீசவும் வாயு; பனிநீர் தெளிக்கவும் மீன் பிடிக்கவும் வருணபகவான்; - ஏற்ற உத்தியோகம்தான். 'போலீஸ் பாரா' கொடுக்கும் தகுதி யமனையும் அக்கினியையும்விட வேறு யாருக்கு உண்டு? குற்றேவல் புரிய மற்றைத் தேவர்கள். சூரபன்மன் அடக்கு முறை யாட்சியில் 'விதியே' என்று தேவர்கள் பணிவிடை செய்தார்கள்.

நவீன சூரபன்மராகிய விஞ்ஞானிகள் அறிவியல் என்னும் அடக்கு முறையின் துணைகொண்டு இயற்கையைக் கட்டுப்படுத்தி மக்களின் தேவைகளை ஒருவாறு நிறைவேற்றித் தருகிறார்கள். புராணத்தை நினைத்து நகைப்பது இருக்கட்டும்; சூரபன்மனின் ஆதிக்க வாயிலாக ஆசிரியர் இயற்கையை விநோதமாகக் கட்டுப்படுத்த ஆசைகொண்டு—வாழ்க்கை வசதிகளை அதிகரிக்கச் செய்யும் விஞ்ஞானக் கண்ணினால் கற்பனை செய்கிறார் என்று சொல்லலாம். புராணத்தின் பெருமையையோ, ஆசிரியரின் திறமையையோ நான் இங்குக் கூறவில்லை.

* * *

கணக்கு வழக்கில்லாமல் கடலிலிருந்து மீன்பிடிக்கிறோம். அதிகமாக மீன்பிடிக்க மேலும் புதுப்புது விஞ்ஞான வழிகளைக் கண்டு பிடிக்கிறோம். கரையில் மலை மலையாக மீன் வந்து குவிந்து விடுகிறது. நம் நாட்டைப்பற்றிச் சொல்லுகிறேனென்று எண்ணவேண்டாம்; நம் நாடுதான் முன்னேற்றப் போட்டியில் கடைசியாக இருக்கிறதே! பொதுவாகச் சொல்ல வந்தேன். உடலுக்கு உரம் தரும் உணவு மீன் உணவு. உள்நாட்டு வெளிநாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை என்றே சொல்லவேண்டும். கடலிலுள்ள மீன்கள் குறைய ஆரம்பிக்கின்றன. எல்லையற்ற பெருங் கடலாயிற்றே என்றால், எண்ணற்ற 'வயிற்றுச் சாமிகள்' இருக்கும் போது அதெல்லாம் எந்த மூலைக்கு? மேலும் மேலும் கடலில் அதிக தூரம் சென்று மீன் பிடிக்கின்றனர். உதாரணமாக வலைவீசும் பிரிட்டிஷ் கப்பல்கள் (trawlers) வடகடற் பகுதியில் பிடித்த மீன்களில் ஒரு ஜாதியைக் கணக்கெடுத்தால் 1906ம் ஆண்டில் நாளொன்றுக்குச் சராசரி $7\frac{3}{4}$ அந்தர் வீதம் கிடைத்தது. 1914-ம் ஆண்டுக்குள் நாளொன்றுக்கு $4\frac{1}{2}$ அந்தர் தான் கிடைக்குமென்ற நிலைமையாகிவிட்டது. முதல் உலகயுத்தம் வந்ததால் மீன் பிடிப்பு வெகுவாகக் குறையவே மீன்கள் சற்றுப் பெருக வசதியாயிற்று. இதனால் 1919-ல் $15\frac{1}{4}$ அந்தராக அதிகரித்தது. இது 1937-க்குள் $2\frac{1}{2}$ அந்தராகக் குறைந்துவிட்டது. பெருங் கடலாக இருந்தும் என்ன, என்பது இதனால் விளங்குகிறது. ஒரேயடியாக மீன்கள் குறைந்து விடா

தபடி பார்த்துக்கொள்ளப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. இக்குறையை இன்னொரு வழியாலும் நீக்கப் பரிகாரம் தேடலாயினர்.

மீன்கள் சிறுகடற்பாசி இனங்களையும் (Plankton) பூச்சி புழுக்களையும் உண்டு வளர்கின்றன. கடற்பாசி மிகுந்தால் மீன்களும் எண்ணிக்கையிலும் வளர்ச்சியிலும் அதிகமாகின்றன. கடற்பாசிகளுக்கு நிலத்திலுள்ள செடிகளைப் போலவே நைட்ரேட் உப்புகளும் பாஸ்பேட் உப்புகளும் நல்ல உரமாகின்றன. பாசிகள் இந்த உப்புகளால் வளர்ந்து பெருகுகின்றன; இப் பாசிகளைத் தின்று மீன்கள் வளர்ந்து பெருகுகின்றன. பூச்சி புழுக்கள் பாசிகளைத் தின்றாலும் முடிவில் அவை மீன்களுக்கே இரையாகின்றன. இந்த முறையால் மீன்கள் மூன்று நான்கு மடங்கு அதிக வளர்ச்சி யடைவதைச் சாதாரணமாகக் காணலாம்.

உப்பு உரங்களைக் கடற்பாசிகளுக்கு எப்படிப் போடுவது? சமுத்திரத்திலே பெருங்காயம் கரைத்த கதையல்லவா ஆகிவிடும்! நிலைமை அவ்வளவு மோசமாகிவிடவில்லை. திறந்தகடற் பரப்பில் இவ்வாறு செய்வதில்லை. கூடுமான வரை நிலம் சூழ்ந்த வளைகுடா (bay) போன்ற இடங்களில் இவ்வாறு செய்தால் இட்ட உப்புக்கள் வீணுவதில்லை. பாசிகளும் விரைவில் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன; அலைகளாலும் அதிகம் கலக்கப்பட்டு வெளியேற்றப்படுவ தில்லை என்று தெரிகிறது.

முதலில் இச்சோதனைகளை நடத்தியவர்கள் நார்வீஜிய, டேனிய உயிர்நூல் நிபுணர்கள். ஸ்காட்லந்தின் வடகரைகளிலும் சமீப காலத்தில் சோதனைகள் நடத்தப்பட்டன. பயிர்களை வளர்க்க நிலத்தைப் பண்படுத்தி, விதைத்து, நடவு செய்து, களையெடுத்து, அறுவடை செய்வதைப்போலச் சில வகை மீன்களை அபிவிருத்தி செய்ய ஏறக்குறைய இதுபோன்ற முறைகள் கையாளப்படுகின்றன. ஏற்ற கடற் பகுதிகளைத் தயாரித்து, வளர்த்த மீன் குஞ்சுகளை நீரில் விட்டு, அவசியத்திற் கேற்றபடி அவற்றை விஸ்தாரமான இடங்களுக்குப் பிரித்துவிட்டு, கடலில் வாழும் வேறு எதிரி இனங்கள் அவற்றை அண்டாமல் அவ்வெதிரிக் கூட்டங்களை ஏற்ற வலைகளாற் பிடித்து வெளியேற்ற வேண்டியது அவசியமாகிறது. இந்த முறைகள் நிபுணர்களால் பல வழிகளிலும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

சோதனைக்காகச் சில நூறு ஏக்கர் பரப்புள்ள இடங்களாகப் பொறுக்கி எடுத்து 40 அல்லது 50 அடி ஆழத்திற்கு மேற்படாமல் பார்த்துக்கொள்ளுகிறார்கள். மாதம் ஒரு முறை உப்பு உரங்களைப் படகுகளால் தெளிப்பார்கள். இதன்படி மாதத்திற்கு ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 20 பவுண்டு வீதம் அம்மோனியம் ஸல்பேட்டும் (Ammonium Sulphate), 8 பவுண்டு வீதம் ஸூபர் பாஸ்பேட்டும் (Super phosphate) பிடிக்கும்.

காலிபோர்னியாக் கடற்கரையில் சுமார் 3000 ஏக்கருக்கு வேண்டுமென்றே பெரிய கடற் பூண்டுகளை வளர்க்கிறார்கள். ஜப்பானில் இப் பூண்டுகளி லிருந்து நாக்குக்குச் சுவையான உணவுகள் முதல் உபயோகமான பல பொருள்கள் வரை செய்கிறார்கள். கடலில் முத்து எடுப்பது ஒரு புறம். கடல் நீரிலிருந்து மெக்னீஷியம் என்னும் உலோகமும், ப்ரோமினும்

(Promine) பிரிக்கிறார்கள். ஐக்கிய அமெரிக்காவில் ஒரு பெரிய தொழிற்சாலை நாளொன்றுக்கு 15000 பவுண்டு ப்ரோமின் பிரித்தெடுக்கிறது. இன்னும் கடலில் தங்கம்கூட— ஆமாம், பத்தரை மாற்றுப் பசும்பொன்தான் — இருக்கிறது. ஒரு மைல் நீள, அகல, ஆழம் கொண்ட கடல் நீரில் 5,000,000, பவுன் பெறுமான தங்கம் வீதம் இருக்கிறது. [அதைப் பிரித்தெடுக்கச் செலவுதான் அதைப்போல் 5 மடங்கு ஆகிறதாம்.] ஆனால், இதை வழிக்குக் கொண்டுவர அதிக காலம் பிடிக்காது. காரியம் கைகூடினால், அடேயப்பா! நம் நாட்டு நாரிமணிகளுக்கு உள்ள பொன்னாசையைக்கூடச் சற்றுத் தீர்க்கமுடியும். திரைகடலில் திரவியத்திற்குக் குறைவே இல்லை.

உட்கார்ந்த இடத்தில் காலை ஆட்டும் பழக்கம் சிலருக்கு உண்டு, அவர்கள் காலுக்குச் சரியாக ஒரு தையல் மெஷினைக் கொண்டு வைத்துவிட்டாலும் சட்டை சட்டையாகத் தைத்துவிடலாம். அலைகளின் ஆற்றல் அளவில்லாதது. மோதி மோதிக் கரைகளை அரிக்கும் மலை போன்ற அலைகளின் சக்தி எதற்குமில்லாமல் வீணாகிறது. இதைக் கட்டுப்படுத்தி உபயோகிக்கச் சில நிபுணர்கள் திட்டமிட்டார்கள்.

கடல் ஏற்றத்தின்போது நீர் மட்டம் பொங்கி உயர்ந்து பிறகு தாழ்கிறது. அவ்வளவு தண்ணீரும் இறங்கும்போது அதைக் கட்டுப்படுத்தினால் எத்தனை மின்சாரம் உற்பத்தி செய்யலாம்! மேலைநாடுகளில் இதுபோன்ற சில சிறு அமைப்புகள் இருக்கின்றன. பெரிய நகரங்களுக்கு அதிக சக்தியை அளிக்கக் கூடிய அளவுக்குப் பெரிய திட்டங்களை இட்டார்கள். விஞ்ஞான நிபுணர்கள்—ஆண்டி மடம் கட்டினதுபோலத் திட்ட அளவில் அவை நிற்கின்றன. நிபுணர்கள் என்றால் சூத்திரப் பாவைகள். அரசியல் வாதிகள் ஆட்ட, ஆடும் பொம்மைகள்தானே விஞ்ஞானிகள்! இந்த அமைப்புத் திட்டங்களை முடிக்கச் சில கோடி ரூபாய் தேவைப்படுகிறது. முதலைப் போட்டுவிட்டால் அப்புறம் வசதிக்குக் குறைவில்லை. ஆனால், இதே அரசியல் வாதிகளுக்குப் போர்களில் எதிரியை நாசம் செய்ய அணுக் குண்டோ, மணுக் குண்டோ போல ஒன்றைச் செய்யத் திட்டம் வகுத்துக் கொடுத்தால் விஞ்ஞானத் திற்குத் தாசானு தாசர்களாகி அதைப் புகழ்கிறார்கள். 'பணத்தைப் பற்றிக் கவலை வேண்டாம்' என்று ஊக்க மளிக்கிறார்கள்.

மழையையும் கூடுமானவரை வசம் செய்திருக்கிறார்கள். திரண்ட கார் மேகங்கள் மழையைப் பொழியும்படித் தூண்டப் பல வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். காட்டி லெறித்த நிலவுபோலக் கடலிற் பெய்யாமல் மழையை வயல்களிலே பெய்து வளம் கொழிக்கச் செய்யலாம். 'எங்கள் நாட்டிலே பெய்ய வேண்டிய மழையை உங்கள் நாட்டிற்குத் திருப்பிவிட்டீர்கள்' என்ற சச்சரவு வராமல் சமரச முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டியது தான்.

சூரியனை நாம் நினைத்தபடி ஒருங்கே எல்லா நாடுகளுக்கும் இளங் கதிர் பரப்பச் செய்வது கடினமே. துருவப் பிரதேசங்களில் குளிரையும், பூமத்திய பாகங்களில் வெம்மையையும் தவிர்த்தல் துர்லபம். துருவப் பகுதிகளில் ஒளியும் வெப்பமும் தர, சூரியன் எவ்வாறு அணுச் சக்தியால் இயங்குகிறதோ அதுபோல விஞ்ஞானிகள் அறி

வைப் பயன்படுத்திச் சிறு அளவில் "சூரியன் குஞ்சுகளைச்" செய்து உயர்ந்த கோபுரங்களில் வைத்துப் பயன் கொள்ளலாம். பூமத்திய பாகங்களில் கதிரவன் வெம்மையைத் தடுப்பதைவிட ஏற்றவாறு அதன் ஒளியையும் வெப்பத்தையும் சக்தியாக உபயோகப்படுத்திக் கொள்வதுதான் சிறந்தது. வீட்டினுள் குளிர்ச்சி தருவதற்கு என்ன வேண்டுமானாலும் எளிதாகச் செய்துகொள்ளலாம். வெளியில் செடி, கொடி மரங்களின்மேல் படுவதைத் தவிர பெரும் பகுதி ஒளியும் வெப்பமும் வீணாகிறது. ஒவ்வொரு இலையும் ஒவ்வொரு உணவுத் தொழிற்சாலையாகக் கொள்ளலாம். நமக்கு உதவாத செடிகள் கால்நடைகளுக்கு உணவாகின்றன. நாம் எந்த 'நடை'களோ தெரியவில்லை. நமக்கு மற்றத் தாவரங்கள் வகை வகையான தானிய மணிகளையும், காய்கனி கிழங்கு கீரைகளையும் தருகின்றன. பிராணிகளுக்கு உணவு தவிர இத்தனை கோடி மக்களுக்கும் ஆண்டுதோறும் எத்தனை மலை மலையான சோறு கறிகளும் ரொட்டிகளும், குழம்பு சமுத்திரங்களும், ரசம் ஸூப் தடாகங்களும் வேண்டியிருக்கிறது! இவை யாவும் எந்தத் தொழிற்சாலையில் தயாராகின்றன? பயிர் செடிகள் என்ற தொழிற்சாலைகளில் கதிரவனிடமிருந்து வரும் ஆற்றல் இலைகளால் பிடிக்கப்பட்டுத் தயார் செய்யப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட இதே ஆற்றல் விறகை எரிக்கும்போது உஷ்ணமாகவும் வெளிப்படுகிறது. இதன்றிப் பாழ்வெளியில் பயனற்றுப்போகும் கதிரவன் ஆற்றல் எத்தனை? இவ்வாற்றலைத் தக்க கண்ணாடிகளாற் பிடித்து வெப்ப ஆற்றலாக்கவும் மின்சாரமாக மாற்றவும் பல திட்டங்கள் போடப்பட்டன. இவை யாவும் சோதனையளவில் நின்று விட்டன என்றே சொல்லவேண்டும். காரணம் முதலீடு. வீடுகளின்மேல் படும் ஆற்றலை இரவில் வெப்பமாயும் ஒளியாயும் பயன்படுத்திக் கொள்வதற்கான சோதனைகள் நடந்துகொண்டிருக்கின்றன. தண்ணீரினால் நமக்குக் கிடைக்கும் சக்திக்கும், காற்றின் சக்திக்கும் கதிரவன் சக்தியே மூல காரணம் என்பதும் எண்ணவேண்டும்.

முழு மதியைப் பொறுத்த அளவில் ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. யாரோ ஒரு பிரகஸ்பதி இருட்டடிப்புக் காலங்களில் சந்திரன் வானில் தெரியாதபடி "கறுப்பு ஒளி"யைச் சந்திரனுக்கு அடித்துச் சந்திரன் புலப்படாமல் செய்துவிட வேண்டும் என்றாராம். கறுப்பு ஒளி (Black Light) என்னும் பெயர் ஆவணி மாதத்தில் நீங்கள் படித்தீர்களே, அல்ட்ரா வயலெட் கதிர்கள், அவற்றிற்கு வழங்கப்பட்டாலும், சாதாரண ஒளியில் கறுப்பு ஒளி என்ற ஒன்று எப்படி இருக்குமோ, அதை எப்படிச் சந்திரனுக்கு இங்கிருந்து வீசுவதோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். அதற்கெல்லாம் "ஒரிஜினல்" சூரபன்மன் வந்தாகவேண்டும்.

அக்கினி தேவன் 'செந்தாமரை' போலக் குளிர்வதையும் செய்யலாம். 'தூண்டு மின் உலை' (Induction Furnace) என்ற மின்சார உலையில், காய்ச்சுவதற்காக வைக்கப்படும் உலோகத்தில் மட்டும் மின்சாரம் தூண்டப்படுவதால் (Induced) உலோகம் கண் மூடிக் கண் திறப்பதற்குள் சூடேறக் காய்ச்சப்படுகிறது. மற்றப் பாகங்கள் 'ஜில்'லென்றிருக்கும். கை வைத்தாலும் கைக்குச் சூடேறாது. இத்தகைய உலைகள் அநேக பெரிய தொழிற்சாலைகளில் உபயோகப்படுகின்றன. இவற்றில் பல வகை

களைச் செய்திருக்கிறார்கள். டப்பிகளில் அடைத்து அனுப்பும் பழங்களை டப்பிகளிலேயே வேகவைப்பதற்கு மிகவும் அனுகூலமாக இவ்வுலைகள் இருக்கின்றனவாம். சில வருஷங்களுக்கு முன் ஆஸ்ட்ரியாவில் ஒரு விஞ்ஞானி பனிக் கட்டியில் பொதிந்து வைத்த மாமிசத் துண்டம் ஒன்றை பனிக் கட்டி உருகாமலே வேகவைத்து வேடிக்கை காட்டினாராம்; தண்ணீர் சூடேறாமலே அதிலுள்ள மீன்களை மட்டும் வேகவைத்தாராம். நமது அடுப்பங்கரைகளில் இதுபோலச் செய்வதற்கேற்ற அபிவிருத்திகள் இன்னும் செய்யப்படவில்லை.

காற்றுக் கடவுளைப் பாய்மரக் கப்பலோட்டும் சாரதியாக உபயோகித்தனர். காற்றாடிகளை (Wind Mills) அமைத்து இயந்திரங்கள் செய்தனர். இவை தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கும் பம்ப்புகளை இயக்க ஏற்றவை. டைனமோக்களுக்கு இணைத்துவிட்டால், கிடைக்கும் மின்சாரத்தைப் பாட்டரிகளில் (Storage Batteries) சேமித்து வைத்துக் கொள்ளலாம். இதை உத்தேசித்து இரண்டு அமெரிக்கச் சகோதரர்கள் காற்றாடிகளை மிகவும் பண்படுத்தினார்கள். இவற்றில் சிறிய கனமற்ற காற்றாடிகளை நம் வீட்டுக் கூரைமேல் அமைத்துக்கொண்டால் இரவு நேரத்தில் தேவையான ஒளிக்கு வழி தேடிக்கொள்ளலாம்.

குற்றேவல் புரிய எத்தனையோ சாதனங்கள் உள்ளன. நிலக்கரியும் எண்ணெயும் கிடைத்துக் கொண்டே இருக்குமா? செயற்கை முறையில் எண்ணெய் ஓரளவிற்குச் செய்யப்பட்டாலும் ஏன் இயற்கைச் சக்திகளைச் சும்மா விடவேண்டும்? என்னதான் முயன்றும் திருவாளர் யமதருமன் அவர்களைத் தான் நம்மால் மடக்க முடியவில்லை. லஞ்சத்திற்கும் மசியாத அவரை வழிக்குக் கொண்டுவரவே முடியாதோ என்னவோ! உயிர் என்றாலே என்ன என்று சொல்ல முடியாத ஒரு அற்புதமாக இருக்கிறது. இது அற்புதமாகவே என்றும் இருந்துவிடுமோ!

திருக்கோ ... காப்பக நூலகம்
21174
சென்னை-600 018

விளம்பரத்தின் ஆயுள்.

ஒரே பத்திரிகையில் தொடர்ந்து அதிகமாக விளம்பரம் செய்திருக்கும் கம்பெனி எது? மெஸாசுஸட்ஸில், (Massachusetts) பிராக்டன் நகரிலுள்ள கோழிப்பண்ணைக் கம்பெனி ஒன்று நீடித்த காலம் வரை ஒரு பத்திரிகையில் விளம்பரம் செய்தது. 1881-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதிமுதல், 1938-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிவரையில் ஒரே விளம்பரத்தை 18000 தடவை விளம்பரப்படுத்தி யிருக்கிறது.

—காலியர்ஸ்.

வினாக்களும் விடைகளும்

.........விஞ்ஞான மகாநாட்டின் போது நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் மேலைநாட்டு விஞ்ஞானி ஒருவர் அங்கிருந்த மக்களுக்குச் சிறு வர்ணத் தாளைக் கொடுத்து ருசி பார்க்கச் சொன்ன போது பலர் பல விதமாக அபிப்பிராயம் தெரிவித்ததாகப் பத்திரிகைகளில் வாசித்தோம். அந்தத் தாள்களில் என்ன அடங்கியிருக்கக் கூடும்?

பினைல் தயோ கார்பமைட் (Phenyl thio-Carbamide or Phenyl-thio-Urea) என்ற பொருளைச் சார்ந்த மருந்துகளில் ஒன்று தாள்களில் சிறிது தடவப்பட்டிருக்கலாம்.

முக்கால்வாசிப் பேருக்கு இம்மருந்துகள் மிக்க கசப்பைத் தரும். மீதிப் பேருக்கு இவை ஒரு விதச் சுவையுமின்றிச் "சப்"பென்றிருக்கும். இது அவரவர்களது பரம்பரையைப் பொறுத்து வரும் குணமாகும்;—குரங்குகளில்கூட இவ்விரு வகைகள் உள்ளன.

இம் மருந்துகளால் கசப்பு உணர்ச்சி தோன்றுதவர்களைச் சுவையுணர்ச்சி யற்றவர்கள் என்று சொல்லிவிடக் கூடாது. இந்தப் பாகுபாடெல்லாம் நல்ல வேளையாக மேற்கூறிய மருந்துகளைப் பொறுத்த மட்டும்தான். சாதாரணமாக எல்லாவிதமான அறுசுவையுணவுகளையும் பூரணமாக ரசிக்கும் தன்மை இவர்களுக்கும் உண்டு.

ஒரு குழந்தைக்குரிய தந்தையைப் பற்றி ஏதேனும் ஐயமிருந்தால் இந்த எளிய முறையைச் சில சமயங்களில் உபயோகிப்பதும் உண்டு.

ஆவணி மாத வினவிடைப் பகுதியில், தவளையைக் கொன்ற பின்னும் கொஞ்சநேரம் அதன் உடம்பிலுள்ள தசையணுக்கள் பிழைத்துள்ளன என்கிறீர்கள். கொன்றபின் எவ்வாறு உயிர் உடம்பிலிருக்கும்?

தவளையைக் கொன்று அதன் உடம்பைக் கிழித்துப்பார்த்தால் அதன் இருதயம் கொஞ்சநேரம் துடித்துக் கொண்டே இருப்பது கண்கூடான விஷயம். அதிலும் ஆமையின் இருதயம் அதிக காலம் துடித்துக்கொண்டிருக்கும்.

இருதயத்தைத் தனியாக வெளியிலெடுத்து உடம்பின் வெப்ப நிலைக்குச் சரியான வெதுவெதுப்பையுடைய இரத்தமேனும், மிதமான அளவு உப்புகள் கலந்த வெதுவெதுப்பான நீரையும் பிராணவாயுவையேனும் கொடுத்தால் மாதக் கணக்காக இருதயம் துடித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

இருதயம் நீக்கப்பட்ட பிராணியின் உடலுக்குச் சிறு பம்புகளின் உதவியால் இரத்தத்தைச் செலுத்தினாலும் அந்தப் பிராணி உயிரோடு பிழைத்திருக்கிறது. செயற்கைச் சுவாசப் பை (iron lung) நோயாளிகளுக்கு உபயோகப்படுவதைப்பற்றியும் அறிந்திருக்கிறோம்.

இத்தனை எதற்கு? சில செடிகளின் குச்சிகளை வெட்டி நட்டால் குச்சிகள் செடிகளாக வளர்கின்றன. வெட்டிய குச்சிகளுக்கு உயிர் இருக்கிறதல்லவா? இதைப்போலப் பல உயிர்ப் பிராணிகளிலும் காணலாம். ஏன், மண்புழுவை இரண்டாக வெட்டினால் ஒவ்வொரு துண்டிலும் இழந்த பாகங்கள் வளர்ந்து இரண்டு மண்புழுக்களாகி விடுகின்றனவாம்!

முழுசாக இருக்கும் தசையணுக்கள் சிலவற்றிற்கு அடிக்கடி இரத்தம் அல்லது வேறு தக்க திரவங்களும் பிராண வாயுவும் கொடுத்துவந்தால் அவை வளர்ந்து பெருகி உருவற்ற தசைகளாக வளர்கின்றன. பிராணியின் ஆயுளுக்கு எல்லையுண்டு; இந்தத் தசை அழிவின்றி வாழ்கிறது.

ஒவ்வொரு விதமான தசையணுவிலும் உயிர் இருக்கிறது. இவை யாவும் உடலின் இயக்கத்திற்காக ஒத்துழைத்தால்தான் உடம்பில் உயிர் இருக்கிறது என்கிறோம். உயிர் என்றாலே என்ன என்று சொல்லமுடியாத ஒரு அற்புதமாக இருக்கிறது. இது அற்புதமாகவே என்றும் இருந்துவிடுமோ என்னவோ!

கதை, காவியங்களிலெல்லாம் அசாதாரணமான நிகழ்ச்சிகள் வருவதைப் பார்க்கிறோம். வாழ்க்கையில் அப்படி இல்லை. வாழ்க்கையில் உள்ளதை மட்டும் எழுத்தாளர்கள் தரக் கூடாதா?

தெருவிலே எத்தனையோ பேர் நடக்கிறார்கள். 'அதோ பார் ராமன் நடக்கிறான், இதோ கண்ணன் நடக்கிறான்' என்று யாரும் சொல்லிக்கொண்டிருப்பதில்லை. எவனாவது துள்ளிக் குதித்து ஓடினால் எல்லோரும் பார்க்கிறார்கள்; நொண்டியின் நடை பலருடைய கவனத்தை ஈர்க்கிறது. இதைப்போலத்தான் — சாதாரணமான நிகழ்ச்சிகளிலே நம் மனம் ஈடுபடுவதில்லை. சாதாரணமாகக் காணக்கூடியதாக இருந்தால், 'சர்க்கஸ்' பார்க்க நாம் போவோமா? இந்த மனப்பான்மை மனிதனுக்கு இருப்பதால்தான், சாதாரணமாக நடக்காதவற்றைச் சித்தரிக்கிறார்கள். இதனால் அண்டப் புளுகு கூடச் சொல்லலாம்; ஆகாசப் புளுகும் அளக்கலாம் என்பதில்லை. அது வேறு விஷயம்.

•••○○•••

மலை மறைந்தது.

தமிழ்ப் பெரும்புலவர் மறைமலை அடிகளார் மறைந்தார் என்ற செய்தி எவரும் எதிர்பார்த்திருக்க முடியாத ஒன்றாகும். அவர் நூறாண்டு வாழ்வார் என்றே எவரும் எண்ணியிருப்பர். ஆனால் எதிர்பார்ப்பது மட்டுமே நடப்பதாயிருந்தால், நமக்கு அப்பாற்பட்ட ஒரு பரம்பொருள் இருப்பதை எப்படி உணரப்போகிறோம்?

அடிகள் மறைந்துவிட்டார். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? முன்னே – பண்டொரு காலத்தில்– தமிழகத்தின் பெரும்பகுதியைக் கடல் விழுங்கிவிட்டது என்று சொல்கிறார்கள். இன்று வாழ்கிற நாம் அந்த மண்ணும் கல்லும் மறைந்து விட்டதற்காகவா வருந்துகிறோம்? இல்லை; இல்லை. பின், எதற்காக நாம் ஏங்குகின்றோம்? அந்தத் தொன்மையான காலத்தே தோன்றி நிலவிய நூல்களெல்லாம் மறைந்து ஒழிந்தனவே என்பதற்காகத்தான் கலங்குகிறோம்.

மறையவேண்டியது மறைந்தே தீரும். மறைமலை அடிகளாரின் உடல் எவ்வளவுதான் பேணப்பட்டாலும் அழியக்கூடியது தானே! இன்று இல்லையென்றால் அது என்றோ ஒருநாள் தன் முடிவைக் கண்டிருக்கும். அவர் பொய்யுடலை உதறிவிட்டதற்காக நாம் வருந்தவில்லை. அவர் செய்த திருப்பணியின் மணிவிளக்கு ஒளி மங்காமல் இருக்க வேண்டுமே என்பதே நம் கவலை.

தமிழின் சிறப்புக்கும் தலைமைக்கும் அரும்பாடுபட்டவர் நம் அடிகள். அவர் கலப்புத்தமிழ்நடையின் முதல் எதிரியாகத் தம்மை ஆக்கிக்கொண்டவர். தமிழ் மொழியின் நடை பற்றிய வரலாற்றிலே அவர் தொண்டு சிறப்பான இடம் பெறுதற்கு உரியது.

அவர்தம் சமயக் கொள்கையோ, ஆராய்ச்சி முடிபுகளோ எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கன என்று கூற இயலாது. எனினும் தமிழுக்கு அவர் செய்த சிறப்பு மறுக்கவும் மறைக்கவும் ஒண்ணாதது. அவர் போற்றிய தமிழ் சீரும் செழிப்பும் பெற்று வாழும் வரை அவரும் வாழ்வார்!

தமிழ் வளர்க! சிறக்க!

"ஒரு ஊரிலே............" என்று கனகரத்தினம் தொடங்கினான்.

"ஒரு கழுதை இருந்ததாம்........" என்று வாக்கியத்தை முடித்தாள் அவன் மனைவி கமலினி. அதோடு நிற்கவில்லை; மேலே தொடர்ந்தாள். "உங்களிடம் கதை கேட்கிற ஆசையெல்லாம் பறந்துபோய் எவ்வளவோ காலமாகிவிட்டதே. இந்தக் கழுதையும் குட்டிச்சுவரும் ஏன்தான் இப்படி என் உயிரை வாங்கவேணும்!"

"இந்தா, கமலி! என்னைக் கழுதை என்றா சொல்லுகிறாய்?"

"அப்படி'ன்னா......? நான் குட்டிச் சுவரா?............"

இப்படியாக அவர்கள் பேசிக் கொள்வது இது முதல் தடவையல்ல. இதோடு குறைந்தது ஆயிரம் முறையாவது மேற்படி உரையாடல் நடந்திருக்கும்.

கலியாணம் ஆனதிலிருந்து கதை கதையென்று நச்சரிப்பாள் கமலினி. எத்தனை பத்திரிகைகள் கதைப் புத்தகங்கள் கொண்டுவந்து போட்டாலும் அவள் பொழுதுபோக்குக்குக் கட்டிவர முடியாது. அத்தனையும் படித்துவிட்டுக் கனகரத்தினம் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு, "அத்தான், ஒரு கதை சொல்லுங்களேன்" என்று கேட்க ஆரம்பித்துவிடுவாள்.

கல்லூரி மாணவர்களின் கட்டுரை நோட்டுகளைத் திருத்துவதற்கே நேரம் எங்கேயாவது கடன் வாங்கமுடியுமா என்று பார்க்கிற கனகரத்தினத்துக்குக் கதை சொல்லப் பொறுமை எங்கே இருக்கப்போகிறது! இதிலிருந்து தப்பத்தான் பத்திரிகைகளும் கதைப் புத்தகங்களும் கொண்டுவந்து குவித்தான். கமலியின் கதைப்பசி காயசண்டிகையின் ஆனைத்தீயைவிடப் பெரிதாயிருந்தது. "அத்தான் ஒரு கதை........." என்று அவள் வந்து உட்காருவதைப் பார்த்தால், பாலுக்குக் கெஞ்சும் குழந்தைபோல இருக்கும்.

கடைசியில் அவனுக்கு வேறு வழியிராது. ஏதாவது கதை சொல்லுவான். எத்தனை நாளைக்குத்தான் சொல்லமுடியும்! பத்திரிகையில் கதை எழுதுவது என்றால் பரவாயில்லை. பத்துக் கதை தயார் பண்ணிவிட்டால், அவற்றைப் பதினாயிரம் கதைகளாகக் கூட எழுதலாம். பேரையும் ஊரையும் மாற்றிவிட்டால் போதுமல்லவா? இந்தத் தந்திரம் கமலியிடம் பலிக்கவில்லை.

"ஹூக்கும்! முந்தாநாள் சொன்ன கதைதானே இது? யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? வேறே கதை சொல்லுங்கள்" என்று பாதியிலேயே ஆரம்பித்துவிடுவாள்.

வேறு வழி தெரியாமல் கோமாளித் தனமான ஒரு முறையைக் கையாள ஆரம்பித்தான் கனகரத்தினம்.

இந்தப் புது நாடகம் ஒரு நாள் மாலை ஆரம்பித்தது. கமலி அடுக்களையில் வேலையாக இருந்தாள். கனகரத்தினம் வலியச் சென்று "கமலி, ஒரு கதை சொல்லட்டுமா" என்று கேட்டான். கமலி, "என்ன, கதையா? இருங்கள் இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லி ஓட்டமாக வெளியே போய் எதையோ பார்த்துவிட்டு வந்தாள்.

"வெளியே போய் என்ன பார்த்து வந்தாய்?"

"மழை வருகிறதோ என்று பார்த்தேன்."

"ஏன் ?"

"இல்லை, நீங்களாக வந்து கதை சொல்லுகிறேன் என்கிறீர்களே, மழை தான் வருகிறதோ என்று பார்த்தேன்......" என்று சிரித்தாள்.

கனகரத்தினம் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"சரி, இப்போ என்ன, கதை வேணுமா வேண்டாமா?" என்று முடுக்கினான்.

"அடியம்மா! கிராக்கியைப் பாரேன்......" என்று சொல்லிக்கொண்டே, கையைக் கழுவிவிட்டுக் கதை கேட்கத் தயாரானாள்.

கதை ஆரம்பித்தது:

"தஞ்சாவூரிலே நடந்தது இந்தக் கதை. அப்போது சரபோஜி மகாராஜா ஆண்டுகொண்டிருந்த காலம்..........."

"ஏது பெரிய சரித்திரப் பின்னல் போல் இருக்கிறதே..........," என்று குறுக்கே ஒரு பேச்சை வீசினாள் கமலி.

"உஷ், பேசாமல் கேட்கவேண்டும். நடுவிலே பேசினால் ஒன்றும் சரிப்படாது..........."

"சரிசரி, இனிமேல் இல்லை. கதை மேலே போகட்டும்..........."

"என்ன சொன்னேன்............... ஓகோ......... ஆமாம்........சரபோஜி மகாராஜாவின் அரண்மனைக் கிட்ட ஒரு குட்டிச்சுவர் இருந்தது. குட்டிச் சுவருக்குப் பக்கத்திலே..........."

கனகரத்தினம் தயங்கினான். "ஏன், மேலே சொல்லுங்கள். நான் தூங்கவில்லை..........." என்று அவனைத் தூண்டிவிட்டாள். வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு மேலே கதையைச் செலுத்தினான்.

"குட்டிச் சுவர் இருந்ததா? அதன் பக்கத்திலே எப்போது பார்த்தாலும் ஒரு கழுதை நின்றுகொண்டே இருக்கும். அப்புறம் ஒரு நாள் அந்தக் கழுதை செத்துப் போயிற்று........."

மேலே கதை வளரவில்லை.

"அப்புறம்?" என்றாள் கமலி.

"அவ்வளவுதான். அதுதான் கதாநாயகனை கழுதையே செத்துப் போச்சே, பிறகு எப்படிக் கதை வளரும்? அவ்வளவுதான்."

கமலிக்கு வந்த ஆத்திரம் இவ்வளவுதான் என்று சொல்லமுடியாது. மோவாய்க் கட்டையைத் தோளிலே இடித்த இடிப்பு............! இரண்டு நாளைக்காவது வலி இருந்திருக்கும்.

இதற்கப்புறம் அவள் ஏன் கதை கேட்கிறாள்? ஆனாலும், கனகரத்தினம் அடிக்கடி வலிய வந்து 'கதை' பண்ணுவான். எல்லாம் பழைய கழுதையும் குட்டிச் சுவருமாகவேதான் முடியும்.

ஒருநாள் வருவான். "கேட்டாயா கமலி, நேற்றுக் காலையிலே ...."

"என்ன" என்ன என்று கேட்டால் போதும். உடனே, ஒரு "கழுதை... ......" என்று ஆரம்பிப்பான். "குட்டிச் சுவருக்குப் பக்கத்திலே இருந்தது" என்று கமலி முடித்துவிட்டு, ஒரு வெட்டுப் போட்டுக் கழுத்தைத் திருப்பிக் கொள்வாள். இப்படி எத்தனையோ வகையான பீடிகைகள் போடுவான். பழையபடி கழுதையும் குட்டிச் சுவரும் வந்து சேரும். இதன் விளைவுதான், எந்நேரமும் அவன் கட்டுரை நோட்டுகளையே கட்டி அழுவது.

இன்றைக்கோ உண்மையாகவே ஒரு கதை அவளிடம் சொல்ல வேண்டி

யிருந்தது. ஆனால், கேட்கத் தயாரா யிருந்தால்தானே? அவன், "கமலி, ஒரு கதை கேட்கிறாயா..." என்றான்.

"போதுமே! உங்கள் கழுதையும் குட்டிச் சுவரும். எனக்கு ஒன்றும் வேண்டாம்........"

அவனும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். பயன் ஒன்றும் இல்லை. கடைசியில், கதையை எழுதி விடுவ தென்று உட்கார்ந்தான்.

●

அவனைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. ஒரு அழுக்கு வேட்டி; அதைவிட அழுக்கான துண்டு. மீசை தாடிக்கெல்லாம் ஒரு குறைவு மில்லை. என்ன தான் பரதேசிக் கோலமாக இருந்தாலும் அவன் முகத்திலே அறிவு ஒளி பிரமாதமாக இருந்தது.

கல்லூரி அலுவலகத்துக்கு வந்து, "நான் பிரின்ஸ்பாலைப் பார்க்க வேண்டும்" என்றான். 'இந்தக் கோலத்தோடு அவரிடம் இவனுக்கு என்ன வேலை' என்று தயங்கிய குமாஸ்தா, என்ன நினைத்தாரோ, "உள்ளே இருக்கிறார், போய்ப் பாருங்கள்" என்று கல்லூரித் தலைவரின் அறையைக் காட்டி விட்டார்.

"ஸாரி எக்ஸ்க்யூஸ் மீ......" என்று அப்பழுக்கற்ற ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினான் உள்ளே நுழைந்த அந்த வாலிபன்.

'இவ்வளவு அருமையாக ஆங்கிலம் பேசுகிறான் என்றால், நன்றாகப் படித்தவனாக இருக்க வேண்டுமே' என்று எண்ணிக்கொண்டே, பிரின்ஸ்பால் அவனை உட்காரச் சொன்னார். அவன் பேசப் பேச அவனைப் பற்றிய நல்ல எண்ணம் வளர்ந்துகொண்டே போயிற்று.

"எனக்கு ஏதாவது வேலை கொடுத்தால் மிகவும் கடமைப்பட்டவன் ஆவேன்" என்றான் அந்த இளைஞன்.

"உம்மால் என்ன வேலை பார்க்க முடியும்" என்று இரக்கத்தோடு கேட்டார் கல்லூரித் தலைவர் தருமநாதர்.

"நான் எம். ஏ. படித்தவன். ஆங்கில இலக்கியத்தைப் பட்டத்துக்கு உரிய பாடமாக எடுத்துப் படித்திருக்கிறேன்........"

"ஆமா...படித்துப் பட்டமெல்லாம் வாங்கியிருக்கிறீரே, உமக்கு ஏன் இந்தக் கோலம்?"

"அது பெரிய கதை சார். தங்களுக்குத் தடை இல்லையென்றால் சொல்லுகிறேன்."

"சொல்வதிலே தடையில்லை யென்றால் கேட்க நான் தயார்."

"என் பெயர் ரவீந்திரன். என் அப்பா சென்னையில் பெரிய டாக்டர். டாக்டர் மோகன் என்றால் எல்லோருக்கும் தெரியும். நல்ல வரும்படியுண்டு........"

"அப்படியிருந்தும் இந்தமாதிரி நீர் புறப்படக் காரணம் என்ன?"

"அதுதானே சொல்ல வருகிறேன். நல்லவர்கள் என்று நாம் நினைப்பவர்கள் எல்லாருமே அப்படியே இருந்துவிடுவதில்லையல்லவா? எங்கள் அப்பாவுக்கு வாமதேவராயர் என்று ஒரு நண்பர். அவர் சொன்ன சொல்லுக்கு மறு பேச்சு என்பதே எங்கள் வீட்டில் கிடையாது.

"எனக்குமட்டும் அவரைக் கண்டாலே பிடிப்பதில்லை. அவ்வளவு வயதான கிழவருக்கு என்னத்துக்கு ஜவ்வாதுப் பொட்டும், நாள் தவறாமல் முக க்ஷவரமும்! எவ்வளவுதான் தன்னை அழகு செய்து கொண்டாலும் மனிதனுடைய தன்மை கண்ணிலே தெரிந்துதானே தீரும்!"

கதையைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு ரவீந்திரன் இருமினான். "சார் கொஞ்சம் வாட்டர் கிடைக்குமோ?........ தருமநாதர் சேவகனை அழைத்துக் காப்பி, வாங்கி வரச் சொன்னார்.

கதை மேலே போயிற்று.

"அந்த ராயருடைய கண்களைப் பார்க்கும்போது ஷேக்ஸ்பியரின் ஐயாகோதான் என் மனக்கண்முன் எழுந்து நிற்பான். அந்தப் படுபாவி ராயர் இல்லையென்றால் இந்தக் கதி எனக்கு வந்திருக்குமா?........"

"காப்பி வந்துவிட்டது. குடித்த பின் சொல்லும்" என்றார் தருமநாதர். அவன் காப்பி குடிக்கும்போது, "ஆமா, அந்த ராயரால் உமக்கு என்ன வினை வந்து விட்டது?" என்று கேட்டார். காப்பி குடித்து முடிந்தது.

"அதைத்தானே சொல்ல வருகிறேன்.........காப்பி ரெம்ப நன்றாயிருந்தது. மெனி தாங்க்ஸ்.........உங்களைப் போலப் பொறுமையா இருந்து அனுதாபத்தோடே என் துயரத்திலே பங்கு கொள்கிறவர்களைப் பார்க்கும்போதுதான், வாழ்க்கையைப்பற்றியும் கொஞ்சம் நல்ல கருத்து உண்டாகிறது. அன்பில்லை என்றால், சார் இதென்ன வாழ்க்கை! நானுந்தான் ஒரு வேலை கிடைக்காதா என்று ஒரு வருஷமாக அலைகிறேன்......"

தருமநாதர் மனம் 'ஐயோ பாவம்' என்று அவர் தலையை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. "அப்புறம்......"? என்றார். ரவீந்திரன் கதை சொன்னான்

"எங்கள் விட்டுக்கு எதிரே ஒரு மாடி வீடு. அந்த வீட்டிலே ஒரு மலையாளக் குடும்பம். என்னுடைய அறையிலிருந்து பார்த்தால், அவர்கள் வீட்டு மாடியின் முன் அறை நன்றாகத் தெரியும். ஆனால், அந்த அறையின் ஜன்னல் எப்போதுமே மூடித்தான் கிடக்கும்.

"ஒரு நாள் இரவு ஏனோ எனக்குத் தூக்கம் வரவில்லை. எழுந்து உலாவிக் கொண்டிருந்தேன். நிலா பால் போலக் காய்ந்துகொண்டிருந்தது. திடீரென்று ஏனோ எதிர்வீட்டு ஜன்னலைப் பார்த்தேன். ஐயோ, அது வழக்கம் போல் மூடிக்கிடந்திருக்கக் கூடாதா? என்ன செய்வது! என் விதி!

"அந்த மாதிரியும் ஒரு பெண் அழகாய் இருக்க முடியுமா? மலையாளத்துப் பெண்கள் அழகாக இருப்பார்கள் தான். ஆனாலும், அந்த அழகு பிரமதேவனின் முழுத்திறமையையும் வேலை வாங்கியிருக்க வேண்டும்.

"அவள் தூங்கிக்கொண்டிருந்தாள். ஜன்னலை ஒட்டிக் கிடந்த கட்டிலில் அவள் தூங்கிக்கொண்டிருந்தாள். கூந்தல் அவிழ்ந்து தலையணையை அழகு செய்ய, அவளுடைய தாமரைக் கண்கள்.........மன்னிக்க வேண்டும்.........அழகியின் வர்ணனை தங்களிடம் எதற்குச் சொல்லவேண்டும்.........

"அத்தனை நாளும் எதிரெதிர் வீடுகளில் இருந்தும் நாங்கள் பழகியதில்லை. ஏன், நான் அவளைச் சரியாகப் பார்த்ததுகூட இல்லை. அன்று இரவிலே அந்த அழகுக் கொலுவைக் கண்டபிறகு என் உள்ளம் என் வசத்தில் இல்லை. எப்படியாவது அவளைப் பழக்கம் பிடிக்கவேண்டும்" என்று முடிவுசெய்தேன்.

"பழகுவதில் எனக்கு ஒன்றும் சங்கடமே ஏற்படவில்லை. அவள் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். சென்னையில் கல்லூரி மாணவ மாணவிகள் பழகுவதில் அவ்வளவு கஷ்டம் இல்லை அல்லவா?

"லில்லி—ஆமாம் அவள் பெயர் அதுதான்—லில்லியும் நானும் நெருங்கிவிட்டோம். எங்கள் வீட்டாருக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், நான் வீட்டில் இல்லையென்றால் அவளும் இருக்கமாட்டாள். அவள் இல்லையென்றால் நானும் இருக்கமாட்டேன். எங்கள் இருவரையும் பிரித்தவை இரண்டுதான், கல்லூரி ஒன்று; வீடு இன்னொன்று.

"எங்களைப் பிரித்தவை இரண்டுதான் என்றா சொன்னேன்? இல்லை. இந்தச் சமூகக் கட்டுப்பாடு என்ற அர்த்தமில்லாத என்னவோ ஒன்று இருக்கிறதை நாங்கள் மறந்துவிடவில்லை. அதனால்தான் எங்கள் காதலை வீட்டாருக்குத் தெரியாமலே வளர்த்துவந்தோம்.

"அவள் மலையாளக் கிறிஸ்தவப் பெண். நான் தமிழ் இந்து. ஜாதியைப் பற்றித் தெரியவேண்டியதே இல்லை. காதல் முற்றி வளர்ந்துவிட்டால், படித்து அறிவு முதிர்ந்த பெற்

றோர்களிடம் சம்மதம் பெற்றுவிடலாம் என்று நாங்கள் எண்ணினோம். ஆனால், அந்தப் படுபாவி ராயரின் கண் எங்கள் காதல் கோட்டையை அந்தரத்தில் தொங்கும் ஆகாயக் கோட்டையாக்கி விட்டது''

ரவீந்திரனின் முகத்தைக் கவனித்த தருமநாதர் சேவகனை அழைத்துச் சிற்றுண்டி கொண்டுவரச் சொன்னார். ரவீந்திரன் கதையை மேலே நடத்தினான்.

“ஒரு நாள் நானும் அவளும் ‘பேதிங் ப்யூட்டி’ பார்க்கப் போயிருந்தோம். படம் நடந்துகொண்டிருந்தது. திடீரென்று லில்லி, எதிர் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒருவரைக் காட்டி ‘அதோ ராயர் வந்திருக்கிறார் போல் இருக்கிறதே, நான் தனியாகப் போய் உட்கார்ந்துகொள்கிறேன்’ என்றாள். ‘சும்மா இங்கேதான் இரு. அவரெல்லாம் இங்கே ஏன் வருகிறார்? அவர் வீட்டிலே பெண்களே கிடையாதே! நீ காட்டுகிற ஆசாமி யாரோ, குடும்பத்தோடல்லவா இருக்கிறார் போல் இருக்கிறது? மேலும், அவர் இன்று யார் வீட்டிலோ அனுமார் பூஜைக்குப் போவதாகச் சொன்னாரே'' என்று அவளை என் பக்கத்திலேயே இருத்திவிட்டேன்.

“இடை வேளைக்காகப் படம் நின்றது. வெளிச்சம் வந்தது. இருட்டிலே தெளிந்திருந்த என் மனம் வெளிச்சத்தில் கலங்கிவிட்டது. ராயரேதான் அங்கே எவளோ ஒருத்தியோடு வந்திருந்தார். நாங்கள் பிரிவதற்கு முன்னால் அந்தக் கழுகுக் கண்கள் எங்களைக் குறி பார்த்துவிட்டன. புறாக்கள் இராஜாளிப் பறவைக்கு இரையாகாமல் எப்படித் தப்ப முடியும்.........

“வாமதேவ ராயர் வைத்த தீ வெகு விரைவாக வேலை செய்தது. மறுநாள் மாலையில் நான் வெளியே கிளம்பிய போது என் தந்தை ‘144’ பிறப்பித்தார். நான் புரிந்துகொண்டேன். ‘சரி, இனி என்ன? சொல்லிவிட வேண்டியதுதானே’ என்று என் கதையைச் சொல்ல ஆரம்பித்தேன். “போதுமடா உன் கதை. எதிர்வீட்டுச் சிறுக்கியோடு நீ அடிக்கிற கூத்தெல்லாம் எனக்குத் தெரியாதா?.........என்ன தான் முன்னேற்றம் முற்போக்கு என்றாலும் இப்படித் தறிதலைத் தனமாகவா சுற்றுவது.........'' என்று தாம் படித்தறிந்த பகுத்தறிவை எல்லாம் குப்பைக் கூடையிலே எறிந்துவிட்டு என்னைக் கண்டபடி ஏசினார். ‘சாவகாசமாக இன்னொரு சமயம் பேசிக்கொள்ளலாம்’ என்று பேசாமல் என் அறைக்குப் போய்விட்டேன்.

“ஆனால், அப்படிச் சாவகாசமாகப் பேசி என் காரியத்தைச் சாதித்துக் கொள்ள ஒரு அவசியமும் இல்லாமலே போய்விட்டது. ராயர் வைத்த தீ எதிர்வீட்டிலும் எப்படித்தான் பற்றியதோ, தெரியவில்லை. எதிர் வீட்டு வேலைக்காரன் மூலமாக லில்லி கொடுத்தனுப்பிய கடிதத்திலிருந்து அவளுடைய பெற்றோர்கள் படிப்பை நிறுத்திவிட்டார்கள் என்றும் அந்த மாதத்திலேயே எவனாவது ஒருவன் கழுத்திலே அவளைக் கட்டி அனுப்பிவிடுவதாக முடிவு செய்துவிட்டார்கள் என்றும் தெரிந்துகொண்டேன்.

“பிறகு ஒரு தடவைகூட நானும் லில்லியும் சந்திக்கவே இல்லை. ஒரு நாள் நள்ளிரவிலே தூக்கம் வராமல் அறையிலே குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தவன், எதிரே அவள் அறையைப் பார்த்தேன். காரியம் எங்களை மிஞ்சிவிட்டது. என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அந்தத் திருவுருவம் உத்தரத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்தது.''

ரவீந்திரன் கண்ணைத் துடைத்துக் கொண்டான். தருமநாதர் ஒரு பெருமூச்சு விட்டார்.

“அட பாவமே!'' என்று கூறிய தருமநாதர் ரவீந்திரனைப் பார்த்து, “உம்மைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாகத்தான் இருக்கிறது......... அவள் இறந்ததிலிருந்து இப்படி

மாறிவிட்டீராக்கும்?'' என்று கேட்டார்.

"பின் என்ன சார், இந்த உலகத்திலே? நான் எங்கள் அப்பாவுக்கு ஒரே பிள்ளை. செல்லமாய்த்தான் வளர்ந்தேன். ஒரே பையன் நன்றாக இருக்கவேண்டுமே என்ற கவலை பெற்றவருக்கே இல்லை. இந்த உலகமே இரக்கம் அற்றது சார். அந்த ராயர் எவளையோ கூட்டிவந்திருந்தாரே, அதை நான் சொல்லியிருந்தால்.........! அதற்கு இடம் இல்லாமல் போகவேண்டுமென்றுதான் அவர் முந்திக்கொண்டார்! நான் வீட்டை விட்டு வெளியேறி ஊர் ஊராகச் சுற்றுகிறேன்........''

தருமநாதர் முகத்திலே இரக்கம், கவலை.........எல்லாம் மாறி மாறி வந்தன. பக்கத்திலே இருந்த ஓட்டலிலிருந்து மிதந்துவந்த இசைப் பாடல், "உலகை நம்பாதே மனமே, உலகை நம்பாதே'' என்று அலறிக்கொண்டிருந்தது.

●

கனகரத்தினத்தின் கதை கமலி கண்ணிலே படாமலா போய்விடும்? படித்துப் பார்த்தாள். ஒரு நாள் மாலை தன் கணவனைக் கேட்டாள்: "ஆமா, அந்தக் கதையை ஏன் அப்படி முடித்தீர்கள்?''

"எப்படி?''

"உலகை நம்பாதே, மனமே உலகை நம்பாதே'' என்று பாட்டு வந்ததாக முடித்திருக்கிறீர்களே, ஏன்?''

"நானா அப்படி முடித்திருக்கிறேன்? இல்லை. அந்தக் கதையே அப்படித்தான் முடிந்தது.''

"சரி சரி, ஆரம்பித்துவிட்டீர்களா உங்கள் சிலம்ப வீச்சை? ரவீந்திரனைப் பார்த்தால் பரிதாபமாய் இல்லையா? அவன் கதையை அப்படியா முடிக்கிறது?''

"வா அம்மா, நீ தான் பெரிய பேர்ள் பக் ஆச்சே! நீ எப்படி முடிப்பாய்? சொல்லேன், கேட்கலாம்''.

"எப்படி முடிக்கிறதா? தருமநாதர் இரக்கப்பட்டு அவனுக்கு ஒரு வேலை கொடுத்தார். அவனும் ஒரு மாதிரியாகக் காதலியின் நினைவை வளர்த்துப் பிரமசாரியாகவே இருக்க முனைந்தான்—இப்படி முடித்துவிட்டால் என்னவாம்?''

"முடிக்கலாம், முடிக்கலாம். ஆனால், நான்தான் சொன்னேனே, முடிவு நம் கையிலே இல்லை. கதை தானாகவே அப்படி ஒரு முடிவிலே வந்து நின்றுவிட்டது.''

"நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே?''

"நான் எழுதினது என் கற்பனை இல்லை. உண்மையாகவே அப்படி ஒருவன் வந்துசேர்ந்தான். அவன் சொன்னதையே எழுதிவிட்டேன்.''

"அவனே 'உலகை நம்பாதே' என்று முடித்தானா?''

"இல்லை''

"பின்னே......?''

"அவன் சொன்ன கதையைக்கேட்டு எங்கள் பிரின்ஸ்பால், பாவம், இரக்கப்பட்டு அவனுடைய அப்பா விலாசத்தைக் கேட்டுப் 'பையன் நிலைமை மோசமாய் இருக்கிறது. உடனே வந்து அழைத்துப் போங்கள்' என்று தந்தி அடித்தார். அப்பா வந்து அழைத்துப் போகிறவரைக்கும் பையனை ஆஸ்டலிலே இருக்கச் சொல்லியிருந்தார். தந்தி திரும்பிவந்துவிட்டது. அந்த மாதிரி ஆளே கிடையாதாம். ரவீந்திரனை அழைத்துவரச் சொல்லிச் சேவகனை மாணவர் விடுதிக்கு அனுப்பினர். அவன் அங்கே இல்லை. இந்தக் கதையைத்தான் அப்படி எழுதியிருக்கிறேன்.''

"அதுதானே பார்த்தேன்! நீங்களாவது ஒரு கதை எழுதுவதாவது! கழுதையும் குட்டிச்சுவரும் தவிர உங்களுக்கு வேறே என்ன தெரியும்!''

மை இல்லா எழுத்து

"வித்யா"

'ஈர மையினுல் உலர்ந்த எழுத்துக்களை எழுதுகின்ற பேனு இது ஒன்றுதான்' என்ற விளம்பரங்களை அடிக்கடி நாம் பார்க்கிறோம். எழுதிக்கொண்டு போகும்போதே உலர்ந்து விடும் மை என்று விளம்பரம் செய்யப்படுவதும் உண்டு. விரைவில் உலர்ந்துபோகிறது என்பதுதான் உண்மையே தவிர, ஈரமில்லாமல் எழுதுவது என்றபண்பு ஒரு மைக்கும் கிடையாது. மை உலராமல் இருந்துவிட்டால், அதனுல் ஏற்படுகிற அலங்கோலம் நமக்கு நன்ருகத் தெரியும். முதலில் எழுதுவதுதான் இப்படி என்ருல், நகல் எடுப்பதிலும் இதுபோலவே தொல்லைகள் இருக்கின்றன.

ஈரம் என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல் எழுதுவதற்கோ நகல் எடுப்பதற்கோ ஒரு வழியும் கிடையாதா? இந்த வகையில் சென்ற ஆண்டில் அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சி எழுந்தது. புகைப்பட முறையில் நகல் எடுக்கலாம் என்ருல், அங்கேயும் படத்தின் மூல உருவமாகிய நெகட்டிவைக் கழுவ வேண்டும். அவ்வாறு கழுவும் போது இரசாயனப் பொருள்கள் கலந்த தண்ணீரில் அதனை நனைக்கத்தான் வேண்டும். நனைத்துவிட்டால் காயவேண்டும். அப்படியானுல் நேரமும் விணுகுமே! மையும் இல்லாமல் இரசாயனப் பொருள்கள் கலந்த தண்ணீரும் இல்லாமல் மிக விரைவில் நகல்கள் எடுக்க ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். அதற்கு உலர் எழுத்து முறை (Xerography) என்று பெயர். உலர் எழுத்து முறை எப்படி நடை முறையில் வருகிறது என்பதைப் பார்க்கலாம்.

இதற்கு முதலில் வேண்டுவது புகைப்படத்துக்கு வேண்டிய தகடு ஆகும். இத்தகடு மெல்லியதாயும் அலுமினியம் போன்ற உலோகத்தால் ஆனதாயும் இருக்கும். இதன் மீது ஒளியைக் கவரும் தன்மையுள்ள—அதாவது புகைப்படம் பிடிக்கும் இயல்புள்ள — பொருள் பூசப்பட வேண்டும். இருட்டாக உள்ள இடத்தில் மின்சாரத்தால் இத்தகட்டுப் பூச்சு பாதிக்கப்படுவதில்லை; ஆனுல், கண்ணுக்கு தெரியும் ஒளிபட்டால் உடனே அதனைப் பதிவு செய்துகொள்ளும். ஆந்த்ரசின் (anthracene) என்ற பொருள் இத்தகைய பூச்சுக்கு ஏற்றதாய் உள்ளது. வேறு கூட்டுப் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. உலர் எழுத்து முறையில் பயன் படும் தகட்டுக்கும் காமிராவில் பயன்படும் தகட்டுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. உலர் எழுத்துத் தகடு எத்தனை முறை வேண்டுமானுலும் திரும்பத் திரும்பப் பயன்படும்; புகைப்பட நெகட்டிவ் தகட்டை ஒரே முறைதான் கையாளலாம். இனி, இந்தத் தகடு கொண்டு எவ்வாறு எழுத்து வேலை நடைபெறுகிறது என்பதைப் பார்க்கலாம்.

குளிர்ச்சியும் ஒளியும் இல்லாத ஓர் இருட்டறையில் மேலே கூறிய தகட்டை ஒரு துணிகொண்டு சூடேறும்படியாக விறுவிறு என்று தேய்க்க வேண்டும். அவ்வாறு தேய்த்தால் தகடு முழுவதும் நேர் மின்சாரம் (positive) அடைகிறது. தகட்டில் நேர்மின்சாரம் அமைக்க வேறு ஒரு முறையும் கையாளலாம். ஒருதிசை ஓட்டம் (D. C.) உள்ள மின்சாரம் உண்டாக்கும் மின் ஆக்கியிேனாடு ஒரு மெல்லிய கம்பியை இணைக்க வேண்டும். அந்த மின் ஆக்கியின் மின்சாரம் மிக உயர்ந்த மின் அழுத்தம் உடையதாய் இருக்க வேண்டும். அவ்வாறு மின் அழுத்தம் மிக்க மின் ஆக்கியிலிருந்து வரும் மெல்லிய கம்பி, இருட்டிலே தானே ஒளிரும் இயல்பினை உடையதாகும். அவ்வாறு ஒளிரும் கம்பியின்கீழ்த் தகடு முழுவதையும் காட்டினால் நேர்மின்சாரம் அமைந்து விடுகிறது. (39ம் பக்கத்தில் உள்ள படம் பார்க்கவும். 1. கம்பியின் கீழ்த் தகடு செலுத்தப்படுகிறது. 2. தகடு முழுவதும் நேர்மின்சாரம் அடைந்துவிட்டது. + என்பது நேர்மின்சாரத்தைக் குறிக்கும் அடையாளம்).

நேர் மின்சாரம் அடைந்த தகட்டை மிக எச்சரிக்கையோடு வைத்திருக்க வேண்டும். புகைப் படத் தகடு போலவே, ஒளி படமுடியாதபடி பாதுகாப்பதற்கு உரியதாகும். இத்தகட்டை ஒரு சட்டம் (Frame) அல்லது காமிராவுக்குள் அமைக்க வேண்டும். பின்னர் ஒரு கண்ணாடி வில்லை (lens) மூலமாக, எந்தப் பொருளின் நகல் நமக்கு வேண்டுமோ அந்தப் பொருளின் நிழலைத் தகட்டின்மீது விழச்செய்தல் வேண்டும். புகைப் படம் பிடிப்பதுபோன்ற இந்தச் செயலை 3-வது படம் விளக்குவதை 39-ம் பக்கத்தில் காணலாம். பொருளின் உருவப் பகுதியில் மட்டும் நேர் மின்சாரம் அப்படியே நிலைத்திருக்க, மற்றப் பகுதிகளில் ஒளி பட்டதால் நேர்மின்சாரம் மறைந்துவிட்டது. இரசாயனப் பொருளின்கீழ் உள்ள தகட்டிலே அந்த நேர்மின்சாரம் கலந்துவிடும்.

இவ்வாறு பதிந்த உருவம் நம் கண்ணுக்குத் தெரியாது. தெரிய வைக்கவேண்டியதுதான் அடுத்த வேலை. எதிர் மின் (negative charge) ஊட்டப்பட்ட ஒரு தூளைத் தகட்டின்மீது தூவ வேண்டும். உருவம் பதிந்துள்ள இடங்களில் நேர்மின்சாரம் இருக்கிறதல்லவா? எதிர் மின்ஊட்டிய துகள்களை இந்தப் பகுதிகள் ஈர்த்துப் பிடித்துக்கொள்கின்றன. மற்ற இடங்களில் தூள் ஒட்டுவதில்லை. ஆக, உருவம் இப்போது தெளிவாகத் தெரிகிறது. தூள் தூவப்படுவதையும், உருவம் தெளிவாகப் புலப்படுவதையும் 4-வது படம் காட்டுகிறது;

தூவப்படும் தூளில் இரண்டு பொருள்கள் கலந்துள்ளன. சிறிது பருமையும் சொரசொரப்பும் கொண்டது ஒரு பொருள்; மிகத் தாழ்ந்த வெப்பத்திலும் உருகிவிடக்கூடிய செயற்கைப் பிசின் மற்றொரு பொருள். இந்த இரண்டு பொருள்களும் சேர்த்த பிறகே எதிர்மின் ஊட்டப்படும்.

கண்ணுக்குத் தெரிகிற உருவம் (4-ம் படத்தில்) எப்படி இருக்கிறது? இடம் வலமாகவும் வலம் இடமாகவும் மாறி உள்ளதல்லவா? இதனை நேராக்க வேண்டும். மேலும், தகட்டில் உள்ள உருவத்தை நாம் நகலாகக் கொள்ளமுடியாது. தாளில் இருந்தால்தான் வசதியாய் இருக்கும்.

காகிதத்தில் ஒழுங்கான உருவம் பதியச் செய்வதற்கு என்ன செய்வது? காகிதத்தைத் தகட்டின்மீது பொருத்திவைத்து, முன்போலவே மின் அழுத்தம் மிகுந்த கம்பியின் கீழ்ச் செலுத்த வேண்டும். (படம் 5). இதனால், காகிதத்தில் பதிந்த தூள் ஒட்டிக்கொள்கிறது. இதனை 6-ம் படம் காட்டுவதைக் காணலாம்.

உருவம் காகிதத்தில் வந்துவிட்டது. ஆனால், தூள் உதிராமல் இருக்க வேண்டுமே! காகிதத்தைச் சிவப்புக் கீழ்க் கதிர்களின் (infra-red rays) உதவியால் ஓரிரு செகண்டுகள் சூடாக்கினால் போதும். செயற்கைப் பிசின் உருகி, மற்றப் பகுதியான தூளைக் காகிதத்தோடு ஒட்டிக்கொள்ளச் செய்கிறது.

இதை எழுதத்தான் இவ்வளவு நேரம் ஆகிறதே தவிர, உலர் எழுத்து முறைப்படி நகல் எடுப்பது மிக விரைவில் முடிந்துவிடும்.

இந்த ஆராய்ச்சியின் இன்றைய நிலையில் படங்கள், சில முக்கியமான ரிகார்டுகள் போன்றவற்றை அப்படியே நகல் எடுப்பதற்குப் பயன்படுகிறது. இத் துறையில் ஆராய்ச்சி இன்னும் வளர வேண்டும். வளர்ந்தால், காமிரா முன் நகல் எடுக்க வேண்டிய உருவத்தைக் காட்டிய சில செகண்டுகளில் முழுவேலையும் முடிந்துவிடும். டைப் அடிப்பவர்கள் இனி கார்பன் தாள்களை வைத்துத் தொல்லைப்படாமல் இருக்கவும், ஒரு பொத்தானை அழுத்தியதும் நகல்கள் தாமே வந்து சேரவும் இந்த ஆராய்ச்சியின் முடிவு உதவி செய்யும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இப்படியும் ஜனநாயகம்!

ஸ்பெயின் காட்டில், சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கணவனும் மனைவியும் ஒரு கிராமத்தில் குடியேறினர். அவர்கள் இருவருக்கும் ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு விரல் அதிகமாயிருந்தது. சிறிது காலத்திற்குள் 10 விரல்களுக்குமேல் அதிகமுடைய குடும்பங்கள் ஒன்று, இரண்டு அக் கிராமத்தில் குடியேறின. நாளடைவில் 11 விரல்களுக்குக் குறைவாக உடைய எவரும் அக் கிராமத்தில் குடியேறக்கூடாது என்று சட்டமே விதிக்கப்பட்டது. விரல்கள் அதிகமுடைய குடும்பங்கள் தங்களுக்குள்ளாகவே திருமணஞ் செய்துகொண்டன. இன்று அக் கிராமத்தில் 300 பேர் வசிக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒரு கையிலாவது, இரண்டு கைகளிலாவது 6 முதல் 9 விரல்கள் காணப்படுகின்றன.

38-வது அட்சாம்சம்

திரு. எஸ். நடராஜ், B. A.

கொரியா போரினால் என்ன கெடுதி நேர்ந்திருந்தாலும் சரி, ஒரே ஒரு நன்மைமட்டும் உண்டாகியிருக்கிறது. அதுதான் நமது மக்களின் பூகோள ஞானம் திடீரென்று வளர்ந்தது.

சில நாட்களாகப் பத்திரிகைகளைப் புரட்டினால் பார்க்குமிட மெல்லாம் '38-வது அட்சாம்சம், 38-வது அட்சாம்சம்' என்று கொட்டை எழுத்துக்களில் தட்டுப்படும். '38-வது அட்சாம்சத்தைத் தாண்டாதே: நேரு எச்சரிக்கை' என்றிருக்கும் ஒரு தலைப்பு. '38-வது அட்சாம்சத்திற்கருகே ஐ. நா. திருப்புகள்' என ஓடும் மற்றொரு தலைப்பு. "38-வது அட்சாம்சத்தைக் கடக்கலாமா வேண்டாமா என்று மக்-ஆர்தர் யோசனை' என்று வரும் இன்னொரு தலைப்பு. "38-வது அட்சாம்சத்தைத் தாண்டலாம்-ஐ. நா. முடிவு" என்று முந்திரிக்கொட்டை எழுத்தில் எழு பத்திக்கு நீண்டிருக்கும் பின்னுமொரு தலைப்பு.

38-வது அட்சாம்சம் இவ்வளவு தில்லோலல கல்லோலப் படும்போது, மக்களின் பூகோள ஞானம் மட்டும் சும்மா இருக்குமா? பல்கேரியாவின் தலைநகர் சிங்கப்பூர் என்றும், விளாடிவாஸ்டாக் தென் அமெரிக்காவின் வட கோடியில் இருக்கிறதென்றும் சாதிக்கும் 'பூகோள நிபுணர்'கள்கூட, 38-வது அட்சாம்சத்தில்தான் உலகத்தின் தலைவிதி அடங்கியிருக்கிறதென்று சாதாரணமாகக் கூறுகிறார்கள்.

இந்த 38-வது அட்சாம்சம்தான் என்ன? இது எப்படிப் போரை உண்டாக்கியது? இது எவ்வாறு போரைப் பரவச் செய்யும்? பழைய கதை தான். ஆனால், ஸ்டாலின் டாங்கிகளின் இடிமுழக்கத்திலும், பஸூகாக்களின் எதிரொலியிலும் அந்தக் கதை மறந்துபோயிருக்கலாம். கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொள்வது, 'வரவு செலவு நேராகும்' இந்தக் கட்டத்தில் அவசியமென்றே தோன்றுகிறது.

முன் கதை

கொரியா யுத்தமே குல்லாய்களால் தான் வந்தது என்பது என்னுடைய எண்ணம்.

முன்னொரு காலத்தில் கொரியாவை ஆண்ட ஓர் அரசன் உள் நாட்டுக் குழப்பத்தால் மனம் வெதும்பினான். இந்தச் 'சதிகார' ஜனங்களை எப்படி ஒடுக்குவது என்றறியாமல் தவித்தான். நெடு நாட்களுக் கப்புறம் ஓர் அரிய யோசனை உதித்தது அவனுக்கு. 'இரண்டுபேர் கூடிப் பேசுவதற்கு வழியில்லாமல் செய்துவிடலாம்' என்று தீர்மானித்தான்.

அதற்காக அவன் ஒரே நாளில் ஜனங்களுடைய நாக்குகளைத் துண்டித்து, காதுகளைத் துளைத்துவிடவில்லை. 'ஒவ்வொரு கொரியனும் கட்டாயம் குல்லாய் அணியவேண்டும்' என்று அவசரச் சட்டம் பிறப்பித்தான் மன்னன். சதி அடங்கிற்று. குழப்பம் தீர்ந்தது.

குல்லாய் பக்க வாட்டில் அளவு மீறி நீண்டிருந்தால் ஒருவரையொருவர் கண்டு ரகசியம் பேசமுடியாதல்லவா? அதுதான் மன்னன் குல்லாயில் வைத்த சூட்சுமம்.

கொரியா மன்னனின் அபூர்வ யோசனையால் சதியும் குழப்பமும் தீர்ந்தன. ஆனல், கொரியர்களுக்கிடையேயிருந்த ஒற்றுமை மறைந்தது! மனிதனை மனிதன் சந்தித்து அந்தரங்கமாக அளவளாவுவதற்கு வசதி இல்லாமற் போனதால் நேசப் பான்மையும் ஒழிந்தது! கடைசியில் மன்னனை எதிர்ப்பதற்குப் பதில் அவர்களே கும்பல் கும்பலாகப் பிரிந்து பிணக்கிலும், பூசலிலும் ஈடுபட்டார்கள். வட கொரியர்களும் தென் கொரியர்களும் இப்படிப் பிரிந்து சண்டை செய்வதற்குக் காரணம் தெரிகிறதா? குல்லாய்தான்.

38-வது அட்சாம்சம்

1945-ம் வருடம் செப்-8-ந்தேதி அமெரிக்கத் துருப்புகள் முதன் முதலாகக் கொரியாவில் கரையிறங்கின. அதற்கு அடுத்த நாள் ஜப்பானிய துருப்புகள் 38-வது அட்சாம்சத்திற்குத் தெற்கே யு. எஸ். தளபதி ஜெனரல் ஹொட்ஜிடம் சரணடைந்தன.

1945-ஆகஸ்டில் சோவியத் ரஷ்யா ஜப்பான்மீது போர் தொடுத்தது. ஒரு மாத காலத்திற்குள் 38-வது அட்சாம்சத்திற்கு வடக்கேயுள்ள பிரதேசம் பூராவும் ரஷ்யா வசமாயிற்று.

பாட்ஸ்டாம் மகாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 38-வது அட்சாம்சம் சோவியத் கொரியாவுக்கும் அமெரிக்க கொரியாவுக்கும் எல்லைக் கோடாக அமைந்தது.

மாஸ்கோ ஒப்பந்தம்

வல்லரசுகளின் வெளி விவகார மந்திரிகள் மாஸ்கோவில் கூடி அகில கொரியாவுக்கு ஒரு தற்காலிக அரசாங்கத்தை நிறுவுவதென்று தீர்மானித்தார்கள். சோவியத் அமெரிக்க கமிஷன் ஒன்றை நிறுவி, கொரியாவிலுள்ள பல்வேறு கட்சியினரையும் கலந்தாலோசித்துப் புதிய அரசாங்கத்தை நிறுவுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தர்மகர்த்தா ஆட்சி

கொரியாவில் அதிக பட்சம் ஐந்து வருட காலத்திற்குத் தர்மகர்த்தா ஆட்சி முறை அமுலிலிருக்கலாமென்று மாஸ்கோவில் முடிவாகியது.

கொரியா தேசம் 40-வருடகாலம் ஜப்பானின் ஆதிக்கத்திலிருந்தது.

அரசாங்கத்திலும், தொழிலிலும், உத்தியோகங்களிலும் பங்கெடுத்துக் கொள்வதற்கு வாய்ப்போ வசதியோ இல்லாது போயிற்று கொரியர்களுக்கு. ஆகவே, கொரியாவைக் கொரியர்களே ஆளுவது அசாத்தியம் என்று கருதித் தர்மகர்த்தாப் பொறுப்புத் திட்டம் வகுக்கப்பட்டது.

ஐக்கிய கொரியா அமைக்க முயற்சி

இரண்டு வருடகாலம் அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் பேச்சுவார்த்தைகள் நடந்தும், உருவான முடிவெதுவும் உண்டாகவில்லை.

மாஸ்கோ ஒப்பந்தத்தை முழுவதாக ஏற்றுக்கொள்ளும் கட்சிகளையும், ஸ்தாபனங்களையும் மாத்திரம் கலந்து கொண்டு இடைக்கால அரசாங்கத்தை நிறுவ வேண்டுமென்று சோவியத் ரஷ்யா வாதாடியது. ஆனல், கொரியா மக்களில் பெரும்பாலோர் தர்மகர்த்தா ஆட்சி முறையை அவ்வளவாக விரும்பவில்லை. பெரும்பான்மையோரின் ஆதரவும், ஒத்துழைப்பும் இல்லாமல் ஓர் அரசாங்கம் அமைப்பதானல், அது கட்டாயம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏக ஆதிக்கத்திலேயே சென்று விடியும். இதை அமெரிக்கா ஏற்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

கொரியா விவகாரத்தில் சுமுகப் பைசல் காண்பதற்காக மேற்

கொள்ளப்பட்ட முயற்சிகளைக் கவனிப்பது அவசியம்.

(1) அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனு ஆகிய நான்கு வல்லரசுகளும் மகாநாடு கூடிக் கொரியா பிரச்னை பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்தலாம் என்று 1947-ஆகஸ்டில் அப்போது அமெரிக்க வெளிவிவகார மந்திரியாயிருந்த மார்ஷல் பிரேரித்தார். சோவியத் யூனியன் இந்த யோசனையை நிராகரித்தது.

(2) ஐ. நா. பொது சபை கொரியா விவகாரத்தைப் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அமெரிக்கா கோரியது. ரஷ்யா அமெரிக்கக் கோரிக்கையை எதிர்த்தது.

(3) 1947, நவம்பர் 14-ல் ஐ. நா. வின் கொரியா கமிஷன் நிறுவப்பட்டது. 1948 மார்ச் 31-ந் தேதிக்குள் கொரியாவில் பொதுத் தேர்தல் நடைபெறவேண்டுமென்றும் பொது சபை முடிவு செய்தது. தேர்தலில் வெற்றி பெறும் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய அரசாங்கம் அமைப்பதே ஐ. நா. கமிஷனின் குறிக்கோள் என்று முடிவாயிற்று. கொரியாவில் சுதந்திர அரசாங்கம் ஏற்பட்டவுடன், அந்நாட்டில் தங்கியுள்ள அந்நியத் துருப்புகள் வாபசாவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் பேரில் நடைபெற்ற வாக்கெடுப்பில் சோவியத் பிரதிநிதி கலந்து கொள்ளவே இல்லை.

(4) 1948 மே 10-ந்தேதி ஐ. நா. கமிஷன் ஆதரவில் தென் கொரியாவில் தேர்தல் நடைபெற்றது. தேசிய சபைக்கு 200 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வடகொரியாவுக்கென்று சபையில் 100 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டன. வடகொரியாவிலும் விரைவில் தேர்தல் நடைபெற வேண்டுமென்று தேசிய சபையின் முதல் கூட்டத்திலேயே ஒரு தீர்மானம் நிறைவேறியது. ஐ. நா. கமிஷனின் அங்கத்தினர்கள்கூட 38-வது அட்சாம்சத்தைத் தாண்டி வட கொரியாவில் பிரவேசிக்கக் கூடாது என்றது சோவியத் ரஷ்யா!

(5) கொரியா மக்களில் இரண்டிலொரு பகுதியினர் தேர்தலில் கலந்து கொண்டு, எவ்விதத் தடங்கலும் கட்டுப்பாடுமின்றித் தமது விருப்பத்திற்கேற்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறுர்களென்று ஐ நா. கமிஷன் 1948-ஜூன் 25ந் தேதி அறிவித்தது

(6) ஐ. நா. கமிஷனின் அறிவிப்புக்கு மூன்று வாரங்களுக் கப்புறம் தேசிய சபை கொரிய குடியரசுக்கான அரசியலமைப்பை வகுத்தது. அடுத்த மாதம் தென் கொரியாவின் ஜனதிபதி சிங்மன்ரீ யு. எஸ். ராணுவ சர்க்காரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். அமெரிக்கத் துருப்புகள் வெளியேறுவதற்கான வழி வகைகளைப் பற்றி ஆலோசனை துவங்கியது.

(7) 1948– ஆகஸ்டில் வடகொரியாவிலும் தேர்தல்கள் நடைபெற்றன. ஐ. நா. கமிஷன் இத் தேர்தல்களை மேற்பார்வையிட அனுமதிக்கப் படவில்லை. பின்னர் வடகொரியாவில் 'மக்களாட்சி மன்றம்' அமைக்கப் பட்டது. தேசம் பூராவுக்கும் பொறுப்பு வகிக்கும் அரசாங்கம் நிறுவப்பட்டிருக்கிறதெனப் பிரகடனம் செய்தார்கள். சோவியத் யூனியனும், அதன் சார்பு நாடுகளும் உடனே வடகொரியாவை அங்கீகரித்தன.

1948 - முடிவுக்குள்ளே சோவியத் துருப்புகள் வடகொரியாவி லிருந்து வாபசாகும் என்று ரஷ்யா அறிவித்தது. பின்னர் வடகொரியருக்கு முறையாக ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(8) ஐ. நா. பொது சபை 1948 டிச–12-ல் கொரிய தேர்தல் பற்றிக் கமிஷன் விடுத்த அறிக்கையை அங்கீகரித்தது. தென்கொரியாவில் சட்ட

பூர்வமான அரசாங்கம் அமைந்திருக்கிறதென்று பொதுசபை அறிவித்தது. கொரியாவிலுள்ள அந்நியத் துருப்புகள் எவ்வளவு விரைவில் சாத்தியமோ அவ்வளவு விரைவில் தாயகங்களுக்குத் திரும்பவேண்டும் என்று பொது சபை கோரியது. பழைய கமிஷன் கலைக்கப்பட்டு, புதிய கமிஷன் நிறுவப்பட்டது. மக்களின் விருப்பத்திற்குகந்த சுதந்திர ஐக்கிய கொரியாவை நிறுவுவதே புதிய கமிஷனின் அலுவல் என்று நிச்சயமாயிற்று.

(9) 1949–ஜன–1-ந் தேதி அமெரிக்கா தென்கொரியாவை அங்கீகரித்தது. 20-க்கு மேற்பட்ட உலக நாடுகளும் தென்கொரியாவை அங்கீகரித்தன. தென்கொரியா ஐ. நா. வில் அங்கம் வகிக்க விரும்பியது. தென்கொரியாவின் விண்ணப்பம் ஐ. நா. பாதுகாப்பு கவுன்சிலில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஆதரவாக 9 வாக்குகளும், பாதகமாக 2 வாக்குகளும் பதிவாயின. பெரும்பான்மை வாக்குகளுக் கெதிராகத் தென் கொரியாவின் அபேட்சையை எதிர்த்து, சோவியத் ரஷ்யா தனது ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்தது.

(10) புதிய கொரிய கமிஷனும் வடக்கத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ள இயலவில்லை.

(11) அமெரிக்க துருப்புகள் 1949-ஜூன் 19-ல் தென்கொரியாவிலிருந்து வெளியேறின. இதைக் கமிஷன் கண்காணித்தது. ஆனால், சோவியத் துருப்புகள் வடகொரியாவிலிருந்து வெளியேறுவதைக் கண்காணிக்கக் கமிஷனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

(12) 1950-ஜூன் 25-ந் தேதி வரை அடிக்கடி எல்லையில் கைகலப்புகள் நிகழ்ந்தன.

இதுதான் பிரிவினைக்குப் பிறகு கொரியாவின் கதை.

வடகொரியர் ஆக்கிரமிப்பு

ஜூன் 25-ந் தேதியன்று வடகொரியத் துருப்புகள் எல்லைகடந்து தென் கொரியாவில் புகுந்தன. வடகொரியா தான் ஆக்கிரமிப்பில் இறங்கிற்றென்பதில் துளிகூடச் சந்தேகம் வேண்டியதில்லை.

தென்கொரியாவின் அழுகுரல் அமெரிக்கா வாயிலாக ஐ. நா. கவுன்சிலை எட்டியது. ஆக்கிரமிப்பாளரைத் தடுத்து நிறுத்துவதென்று ஐ. நா. கவுன்சில் தீர்மானித்தது.

யு. எஸ் கடற்படையும், விமானப் படையும் தூரக் கிழக்கு நோக்கிப் புறப்பட்டன.

பிறகு தரைப்படையும் கொரியா வந்து சேர்ந்தது.

வடகொரியர் ஐ. நா. துருப்புகளைச் சிதறடித்து வெற்றி மேல் வெற்றி கொண்டனர்.

ஐ. நா. தளபதி மக்-ஆர்தர் தொடக்கத்திலேயே முழங்கினர் 'வெற்றி எமதே' என்று. ஆனால், அமெரிக்கத் துருப்புகள் வெகு வேகமாய்ப் பின் வாங்குவதையும், வடகொரியர் ஆவேசமாகப் பாய்ந்து முன்னேறுவதையும் கண்டவர்கள் மக்-ஆர்தரின் நம்பிக்கை பாழாகும் என்றே மதித்தனர்.

கடைசியில் தென்கொரியா மீண்டது. மக்-ஆர்தரின் எண்ணம் எதிர்பார்த்ததைவிட வெகு விரைவில் நிறைவேறிவிட்டது.

ஆக்கிரமிப்பாளர் முறியடிக்கப்பட்டது கண்டு மகிழவேண்டிய சமயம் தான். ஆனால், சஞ்சலம் தரும் மற்றொரு சிக்கல் புகுந்தது.

ஐ. நா. துருப்புகள் வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் எல்லைக் கோடாக விளங்கும் 38-வது வட அட்சாம்சத்தைக் கடக்கலாமா வேண்டாமா என்பதுதான் புதிதாக எழுந்த சிக்கல்.

எல்லை தாண்டுவதுபற்றிப் பெரும் கருத்து வேற்றுமை மூண்டிருக்கிறது.

சிலர் எல்லை தாண்டினால் கொரியாப் போர் உலகப் பெரும்போராக உரு வெடுக்கும் என்று அஞ்சினர்.

ஆக்கிரமிப்பில் ஈடுபட்டவர்களை மேலும் விட்டுவைப்பதால் கொரியா வுக்கு நிரந்தர ஆபத்து உண்டாகும் என்பது மற்றொரு சாரார் கருத்து. மேலும், கொரியாவின் ஐக்கியத்தை நிலைநிறுத்துவதற்கு இதுவே தக்க தருணம் என்று இந்தச் சாரார் கருது கின்றனர்.

இதில் எது சரி என்பதைச் சரித்தி ரம்தான் நிர்ணயிக்க வேண்டும்.

ஐ. நா. துருப்புகள் வடகொரியா வில் பிரவேசித்தால் கம்யூனிஸ்ட் சீனா சும்மா பார்த்துக்கொண் டிராது என்று கூறப்படுகிறது. கம்யூனிஸ்ட் சீனாவின் பிரதம மந்திரி சூ- என்-லாயும், பிரதம தளபதி ஜெனரல் சூ-டேயும் இதுபற்றித் தெளிவுபடுத்தி விட்டார்கள்.

சில தினங்களுக்கு முன் மஞ்சூரியா எல்லையி லிருந்து (நூறு மைல் நீள முள்ள) ஒரு துருப்புக் கூட்டம், ஏராள மான தளவாடங்களோடு வட கொரி யாவின் தலைநகரை நோக்கி வந்து கொண் டிருக்கிறதென்று செய்தி வெளியாயிற்று. இதனால் உலகமே பரபரப் படைந்தது. அமெரிக்காவும் சீனாவும் மோதிக்கொண்டால் அது உலக யுத்தமாக வியாபிக்க ஏதுவா குமே என்ற கவலை எங்கெங்கும் பரவியது. நல்ல வேளையாக மறு நாளே இந்த 'கான்வாய்' ப்புரளி மறு தலிக்கப்பட்டது.

சோவியத் ரஷ்யாவின் அதிபர் மார்ஷல் ஸ்டாலின் வடகொரியாவின் பிரதம மந்திரி கிம்- இர்- சென்னுக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக் கிறார். 'ரஷ்யா உங்கள் பக்கம்' என்று உறுதி கூறியிருக்கிறார் ஸ்டாலின். இதை வைத்துக்கொண்டு கொஞ்ச நாள் 'யுத்தப் பூச்சாண்டி' காட்டுவார் கள் சிலர்.

ரஷ்யாவும் சீனாவும் வடகொரி யுத்தத்தில் தலையிடமாட்டா என்று தீர்மானமாகக் கூறிவிட முடியாது. வாராதது வரக்கூடும் என்றுதான் இது போன்ற வேளைகளில் நாம் மதிப்பிடவேண்டும். இவற்றை மனத் தில் கொண்டுதான் பண்டித நேரு எல்லை தாண்டுவதை ஆட்சேபித்தார்.

ஐ. நா. துருப்புகள் எல்லை தாண்டி, வடகொரியாவின் மீது முத்திசைத் தாக்குதல் தொடுத்திருக்கின்றன.

இன்னும் சிறிது காலத்தில் ஐ. நா. கொடி பலோங்யாங் நகரில் பறந்தால் வியப்படைவதற் கில்லை.

மக்-ஆர்தர் இரு முறை சரணாகதி யடையுமாறு கோரியும் வடகொரியர் சம்மதிக்க வில்லையென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. அவர்கள் தோற்பது நிச்சயம் என்று உணர்ந் திருக்கிறார்கள். அதற்குப்பின் என்ன செய்வதென்பதற்கும் திட்டம் வகுத் திருப்பார்கள். ஆகவேதான் தள வாடங்களோடு சரணாகதியடைய அவர் கள் இணங்கவில்லை.

ஐ. நா. துருப்புகள் அதி சீக்கிரத் தில் வடகொரியாவைக் கைப்பற்றி விடலாம். ஆனால், கம்யூனிஸ்ட் துருப்புகளும் அதி சீக்கிரத்தில் கொரி யாவிலிருந்து மஞ்சூரியாவுக்குச் சென்றுவிடலாம். பிறகு கொரில்லா இயக்கத்தால் கொரியாவுக்கு ஓயாத தொல்லையும் உண்டாகலாம், உலகப் பிரசித்தி பெற்ற அரசியல் விமர்சக ரான வால்டர் விட்மன் இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

கொரில்லாக்களைச் சமாளிக்க அமெ ரிக்கத் துருப்புகள் என்றென்றும் கொரியாவிலேயே தங்கவேண்டி நேரி டும் என்று அவர் விளக்கியிருக்கிறார்.

எட்டரசுத் தீர்மானம்

கொரியாவின் எதிர்காலம் குறித்துப் பிரிட்டன் உட்பட எட்டு நாடுகள் ஒன்றுசேர்ந்து ஒரு திட்டம் வகுத்துள்ளன.

திட்டம் வருமாறு:—

சுதந்திர, ஐக்கிய ஜனநாயக கொரியாவை ஏற்படுத்துவதே ஐ. நா. வின் குறிக்கோள்.

இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டுப் புதிய கொரியா கமிஷன் அமைக்கப்பட வேண்டும்.

ஐ. நா. வின் லட்சியம் நிறைவேறுவதற்கவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐ. நா. துருப்புகள் 38-வது அட்சாம்சத்தைக் கடந்து வட கொரியாவில் பிரவேசிக்கலாம்.

கொரியாவெங்கும் ஐ. நா. வின் ஆதரவில் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும்.

இந்த எட்டரசுத் தீர்மானத்தில் எல்லைதாண்டுவது பற்றிய குறிப்பு ஒன்றுதான் கருத்து வேற்றுமைக்குரியது.

அரசியல் கமிட்டியில் இத் தீர்மானம் பிரேரிக்கப்பட்டது. ரஷ்யா எதிர்த்த போதிலும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐ. நா. பொது சபையும் திட்டத்திற்கு அங்கீகாரமளித்துவிட்டது. இதை யொட்டி மக்-ஆர்தரும் நடவடிக்கை மேற்கொண்டுவிட்டார்.

சமாதான அறிகுறி

கொரியா விவகாரம் விரைவில் பைசலாகும் என்று எதிர்பார்ப்பதற்கு இடமிருக்கிறது. சர்வதேசத் தகராறுகள் பற்றி ஆலோசனை நடத்த வல்லரசுகள் மகாநாடு நடைபெறவேண்டுமென்று விஷின்ஸ்கி பிரேரித்திருப்பது ஒரு நல்ல அறிகுறி.

பார்மோஸா

கொரியா தகராறில் புடைத்தெழுந்தது பார்மோஸா விவகாரம். தென் கொரியாவைப் பாதுகாப்பதற்காகப் படைகளை அனுப்பிய ட்ரூமன் சியாங்-கே-ஷேக்கின் பார்மோஸாவை மறந்துவிடவில்லை. அங்கு அமெரிக்காவின் 7-வது கடற்படையை அனுப்பிவைத்தார்.

பார்மோஸா யாருக்குச் சொந்தம்? பார்மோஸாவிலுள்ள சியாங் சர்க்கார் சினாவின் பிரதிநிதித்துவக்காரரா? சீனக் கம்யூனிஸ்டுகள் பார்மோஸா மீது படையெடுப்பது குற்றமாகுமா? ட்ரூமன் தமது கடற்படையை அனுப்பியது சினாவை வலுச் சண்டைக்கு அழைப்பதுபோலாகாதா? ஜூன் 27-ந்தேதி தோன்றிய இந்தக் கேள்விகள் இன்னும் உலக மக்களின் மனத்தைக் குழப்பிவருகின்றன.

நல்லவேளையாக சீன கம்யூனிஸ்டுகள் பார்மோஸாமீது இதுவரை படையெடுக்கவில்லை. படையெடுத்திருந்தால் அமெரிக்கரும் சீனரும் மோதிக்கொண்டு உலக யுத்தம் வெடித்திருக்கக் கூடும்.

ஐ. நா. பொது சபை பார்மோஸா விவகாரம்பற்றிப் பரிசிலித்துக்கொண்டிருக்கிறது. சீன மஞ்சூரியாவிலும் ரஷ்ய பூமியிலும் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதாகப் புகார்கள் தாக்கலாகியுள்ளன. இவையும் சிலர் ஆவலோடு எதிர்பார்க்கும் யுத்தத்தை உண்டாக்கவில்லை.

அட்டைப் படம்

கி. பி. 2000

"வி. ஞானி"

சஞ்சீவி அன்று ஒரு 'பெரிய மனித'ரின் வீட்டுக்குப் போயிருந்தான். அவர் வீட்டிலே இருந்த இயந்திர வசதிகளெல்லாம் அவனுக்கு வியப்பூட்டின. 'ரேடியோ ஒன்று இருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே' என்று எத்தனையோ ஆண்டுகளாக ஏங்கிக் கிடக்கிற அவனுக்கு, அந்தப் பெரிய மனிதரின் மாளிகையில் நான்கைந்து வானொலிப் பெட்டிகளைப் பார்த்தால் எப்படியிருக்கும்! தப்பித் தவறி வண்டி ஏறிப் போகிற 'யோகம்' அடித்துவிட்டால், அந்த ஜட்காவைப் பிடிக்கு முன் அவன் எவ்வளவோ நடந்து போகவேண்டும். பிறகு ஒருவாறு வண்டிக்காரனோடு மல்லுக்கு நின்று 'பேரம்' பேசினபிறகுதான் நொண்டிக் குதிரை பூட்டிய லொடலொட்டை வண்டியில் ஏற முடியும். ஆனால், அந்தப் பெரிய மனிதர் ஒரு பொத்தானை அமுத்தினார்; அடுத்த நிமிடம் ஒரு கார் வாசலில் வந்து நின்றது. பொத்தான் அமுத்தியவுடன் எங்கேயோ மணி அடிக்க, அந்த ஒலி கேட்டதும் மோட்டார்-ஓட்டி காரோடு வந்து நிற்கிறான். இவ்வளவுதானா! இன்னும் எத்தனையோ வசதிகள் அவர் மாளிகைக்குள் அவருக்குப் பணிந்த வேலையாட்களாக இருந்தன.

'இந்தப் பிறவியிலே நமக்கு இதெல்லாம் எங்கே கிடைப்பது' என்ற ஏக்கமே உருவாகி வீட்டுக்கு நடந்துவந்து சேர்ந்தான். "விஞ்ஞானம் வளர்ந்தது; ஆனால், வளர்ந்த மரம் பணம் படைத்தவரின் மாளிகைக்குள்ளேயே நிழல் தந்தது. பணம் இல்லாதவருக்கு விஞ்ஞான வசதியும் இல்லை. விஞ்ஞான வசதி என்ன, இயற்கையின் வளமே நமக்கு உண்டா?" என்றெல்லாம் எண்ணிக்கொண்டே ஆடிக்கொண்டிருந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் முன் இருந்த ஒரு பழைய மூங்கில் மேசைமீது டாக்டர் மு. வ. எழுதிய கி. பி. 2000 என்ற நூல் இருந்தது. அடிக்கடி அவன் அதைப் படிப்பதுண்டு. இன்றும் புரட்டினான். அதில் வருகிற கதைத் தலைவனைப் போலவே சஞ்சீவியும் ஞான ரதம் ஏறிக் கி. பி. 2000த்தில் உள்ள ஒரு நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

சஞ்சீவிக்கு அந்தப் புதுநகரம் வியப்புக்கு ஓர் எல்லைக்கோடாக அமைந்திருந்தது. மதுரை நகரின் சதுரம் சதுரமான வீதி அழகையே பெரிதாகக் கருதிக்கொண்டிருந்த அவனுக்குப் புது நகரின் அமைப்பே எல்லையில்லாத வியப்பை ஊட்டிற்று.

ஊருக்கு நடுவே விமான நிலையம். அதைச் சுற்றி வட்டமாகத் தொழிற்சாலைகள். அவற்றின் பின் வட்ட வட்டமாக அகலமான பெருஞ்சாலைகள் அமைந்திருந்தன.

அந்த ஊரிலே அவனுக்கு எதைப் பார்ப்பது எதை விடுப்பது என்று ஒன்றும் புரியவில்லை. யாரையாவது பழக்கம் செய்துகொண்டால் எல்லா விவரங்களையும் கேட்டுக் தெரிந்துகொள்ளலாம் என்று எண்ணினான். முன்னே தென்பட்ட ஒரு வீட்டுக்குள் நுழைந்தான்.

அந்த வீடே மகிழ்ச்சியின் நிலைக்களமாக இருந்தது. பாட்டுக்கும் ஆட்டத்துக்கும் குறைவேயில்லை. பாப்பநாயக்கன்பாளையத்தில் உள்ள இருளடைந்த தன் வீட்டையும் நினைத்துக்கொண்டான். புதுநகரத்தில் இருந்த வீட்டின் அமைப்பைக் கவனித்தான். சுவர்கள் நான்கு அங்குலத் தடிமனுக்குமேல் இல்லை. கனமற்ற ஒருவகைத் தகடுகளால் சுவர்கள் கட்டப்பட்டிருந்தன. தட்ப வெப்பச் சமநிலைப் பொறிகள் இல்லாத வீடே கிடையாது. தளவரிசையெல்லாம் பிளாஸ்டிக்கால் ஆனவை.

அந்த வீட்டுக்காரர் சஞ்சீவியை அன்போடு வரவேற்றார். இரண்டு பேரும் ஒரு பெரிய அறையில் சென்று அமர்ந்தனர். ஆசனங்களும்கூடப் பிளாஸ்டிக்கால் ஆனவை. வீடு கழுவும்போது ஆசனங்களையும் கழுவி விடுவார்களாம். புது நகர வாசியிடமிருந்து சஞ்சீவி அறிந்த செய்திகள் உண்மைதானா என்று இன்று அவனைக் கேட்டால் என்ன சொல்வானோ, தெரியாது. ஆனால், கி. பி 2000த்தில் அவன் கண்ட புதுநகரத்தில் நடைமுறையில் காணக்கூடியன என்று அவன் நம்பினான்.

நாள்தோறும் சவுக்காரமும் புருசும் போட்டு முகத்தில் தேய்த்து க்ஷவரம் செய்வது கி. பி. 2000-ல் இல்லை. ஒருவகையான ரசாயனப் பொருளை முகத்தில் தடவித் துடைத்துவிட்டால்—ஒரே நிமிஷத்தில் க்ஷவரம் முடிந்துவிடுகிறது.

புதுநகரம் பற்றிய அறிமுகம் தொடங்குமுன் உணவு கொடுத்தார்கள். உணவு பரிமாறப்பட்ட தட்டுகள் புதுமை மெருகு மாறாமல் இருந்தன. புதுமை மாறாமல் இருக்க என்ன பொருள் கொண்டு அவற்றைத் துலக்குகிறார்கள் என்று அறிய ஆசைகொண்டான் சஞ்சீவி. புதுநகரத்தார் சொன்னார்: “நாங்கள் ஒரு தட்டையும் கழுவிக்கொண்டிருப்பதில்லை. சாப்பிட்டவுடன் வெந்நீரில் போட்டுவிடுவோம்; கரைந்துவிடும்.”

“அப்படியானால் தட்டிலே சூடான உணவு வைத்தால்......?” என்று ஓர் ஐயத்தைக் கிளப்பினான் சஞ்சீவி. “சாதாரணச் சூட்டில் இந்தப் பிளாஸ்டிக் கரையாது. 250 பாரன்ஹீட் டிகிரி வெப்பமுள்ள வெந்நீரில்தான் இது கரையும். இத்தட்டுகள் எங்களுக்கு மலிவாகக் கிடைக்கின்றன.”

பருத்திக்கொட்டை, வைக்கோல், மரத்தூள் போன்ற சாதாரணமான பொருள்களிலிருந்து இத்தகைய பிளாஸ்டிக் செய்ய முடிவதாகப் புதுநகரத்தார் கூறினார்.

பரிமாறப்பட்ட உணவு சஞ்சீவிக்குப் பழக்கமில்லாத வகையில் தயார் செய்யப்பட்டிருந்தது. மரத்தூள் போன்ற பொருள்களிலிருந்துகூட உண்ணக்கூடிய இனிய பொருள்களை உண்டாக்க முடியுமென்பதைக் கி. பி. 2000-ல் சஞ்சீவி கண்டான். மக்கள் கூட்டம் பெருகவும் உணவு பெருகாததால் இடர்ப்படுவது அந்தப் புதுநகர வாழ்விலே இல்லையாம்.

சஞ்சீவி ஏதோ ஒரு அமெரிக்கப் பத்திரிகையைப் பார்த்தபோது 75 செகண்டுகளில் சமையல் வேலை முழுவதையும் செய்து முடிக்கிற

எலக்ட்ரான் அடுப்பைப் பற்றி அறிந்திருந்தான். 1950—லேயே இப்படி ஒரு அடுப்பு இருந்தது என்றதை எண்ணிய சஞ்சீவி, "நீங்கள் சமையல் எப்படிச் செய்கிறீர்கள்? என்று கேட்டான்.

"சமையலையே பெரிய கலையாக வைத்துப் பழைய காலத்தவர் திணறிக்கொண்டிருந்ததாக நாங்கள் புத்தகங்களில் படிக்கிறோம். எங்கள் ஊரில் அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது. எல்லா வீடுகளிலும் உள்ள எலக்ட்ரான் அடுப்புகள் சில செகண்டுகளில் சமையலை முடித்துவிடுகின்றன. எல்லா உணவுப் பொருள்களும் உறைந்துபோன கட்டியாகவே கிடைக்கின்றன" என்று புதுநகரத்தார் சொன்னார்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது புது நகரத்தாரின் மனைவி அந்த அறைக்குள் வந்தாள். ரேடியோப் பெட்டிபோல் இருந்த ஒன்றை முடுக்கிவிட்டாள். பாட்டுக் கேட்கும் என்று சஞ்சீவி எதிர்பார்த்தான். இல்லை. அந்தப் பெட்டியின் ஒரு பக்கத்தில் இருந்த ஒரு திரையில் ஒரு கடை தெரிந்தது. கடைக்காரன் ஒருவன் ஒரு புடைவையைப் பிடித்துக்கொண்டிருந்தான். அம்மையார் டெலிபோனை எடுத்துப் பேசினார். சஞ்சீவிக்கு ஒன்றும் புரியவில்லை. புது நகரத்தார் விளக்கினார்.

"டெலிவிஷன் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்கள் காலத்தில் இந்தியாவிலேயே அது வந்தது கிடையாது. இப்போது எங்கேயும் தொலைக் காட்சி என்ற டெலிவிஷன் உண்டு. அதுமட்டும் அன்று. தொலைக்காட்சியோடு டெலிபோனும் இணைக்கப்பட்டிருக்கும். பார்ப்பதும் பேசுவதும் ஒரே காலத்தில் நிகழும். டாக்டர் வரதராசன் என்று ஒருவர் இது போன்ற கருவியை அளவளாவி என்ற பெயரிட்டு ஒரு நூலில் எழுதியிருக்கிறாராம் ...."

"ஆமாம். நான்கூடப் படித்திருக்கிறேன்."

"இந்த அளவளாவிக் கருவியின் உதவியால் இருந்த இடத்தில் இருந்து வியாபாரம் செய்ய முடிகிறது. அதோடு, பெரிய வியாபாரிகளோ, அரசியல் தலைவர்களோ நினைத்தால் இதன் உதவியால் மகாநாடுகளே நடத்திவிடுகிறார்கள். சுற்றிலும் ஐந்தாறு அளவளாவிகள் வைத்துக்கொண்டால் மகாநாடு நடத்தலாம் அல்லவா?"

"பெட்ரோல், நிலக்கரியெல்லாம் தடையின்றி நிறையக் கிடைக்கின்றனவா?"

"அந்தக் கவலையே எங்களுக்குக் கிடையாது. அந்தப் பொருள்களின் தயவே எங்களுக்குத் தேவையில்லை. கதிரவனுடைய எல்லையற்ற ஆற்றலைச் சிறைப்படுத்தி எங்களுக்கு வேண்டிய அளவுக்கு மின்சாரத்தை உண்டாக்கிக் கொள்கிறோம்."

"ஆமாம்...............நான்கூடக் கதிரவனின் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டுமென்று செய்த முயற்சிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன் ... அணு ஆற்றல் கொண்டு தொழிற்சாலைகளை நீங்கள் நடத்தலாமே? ...."

"அப்படி நினைத்தது உங்கள் காலத்தில். அணு ஆற்றலை உண்டாக்குவதற்கு உரிய யுரேனியம் 235 இப்போது கிடைப்பதில்லை. மேலும், அணு ஆற்றலால் இயங்கும் இயந்திரங்கள் அளவிலே மிகப் பெரியனவாயும் நிரம்பச் செலவு செய்ய வேண்டியனவாயும் உள்ளன. தென் அமெரிக்கா போன்ற சில இடங்களில்தான் அணு இயந்திரங்கள் உள்ளன. மற்ற இடங்களில் சூரிய ஆற்றல் தான் பெரிதும் பயன்படுகிறது.

கதிரவன் ஆற்றலைப் பயன்படுத்த இப்போது நாங்கள் தெரிந்து கொண்டதால், நிரம்ப வெப்பமாக இருந்த சகாரா போன்ற பாலை வனங்களெல்லாம் இப்போது சோலை மயமாக உள்ளன.

"கதிரவனைப் பற்றிய ஆராய்ச்சி வளர்ந்ததால் நாங்களே 'சூரியக் குஞ்சு'கள் பல உண்டாக்கியிருக்கிறோம். சூரியனில் அணுப்பிளந்து தான் ஒளியும் வெப்பமும் உண்டாகிறது என்று அறிந்துகொண்டதால் அதே முறையில் நாங்களும் பல ஒளி பெருக்கும் விளக்குகளை நகரங்களில் அமைக்கிறோம்.

"எங்கள் வாழ்க்கை வசதி இவ்வளவுதான் என்று எண்ணவேண்டாம். பல ஆயிரக்கணக்கான மைல்களை ஒரே மணி நேரத்தில் கடந்து செல்லும் ராக்கெட்டுகளில் பிரயாணம் செய்யும் வசதியும் எங்களுக்கு உண்டு. இத்தகைய ராக்கெட்டுகளில் அட்லாண்டிக் கடலையே மூன்று மணி நேரத்தில் கடந்து விடலாம். ஆயினும் இதற்கு எரி பொருள் (fuel) நிறையச் செலவாகும்."

"இவ்வளவு விரைந்துசெல்லும் ராக்கெட்டுகள் செய்துவிட்டீர்களா! அப்படியானால், சந்திரமண்டலத்துக்கெல்லாம் போய்வந்தவர்கள் பலர் இருப்பார்கள்."

"இல்லை. இன்னும் யாரும் சந்திரமண்டலத்துக்குப் போகவில்லை. ஆனால், ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இன்னும் எத்தனை எத்தனையோ அதிசயங்களையெல்லாம் புது நகரத்தார் சொல்லச் சஞ்சீவி கேட்டுக்கொண்டே இருந்தான். கடைசியில் அவர் சொன்னார்: "இவற்றையெல்லாம் நீங்கள் சாவகாசமாக இருந்து நேரிலே பார்த்தால்தான் நல்லது. வெளியே போகலாமா?"

"அதற்கென்ன, நம்முடைய ஞானரதத்தில் ஏறிப்போகலாமே" என்று சஞ்சீவி சொன்னான். இரண்டு பேருமாக ஞானரதத்தில் ஏறிப் புறப்பட்டார்கள். நகரில் எங்கும் புகையே இல்லை. "இத்தனை தொழிற்சாலைகள் இருந்தும் புகையே இல்லையே!" என்று வியந்தான் சஞ்சீவி. "நிலக்கரியே தொழிற்சாலைப் பக்கம் போவதில்லை. சுரங்கங்களிலேயே ஆவிகள் (gas) தயார் செய்கிறோம். அங்கிருந்து நேராகத் தொழிற்சாலைகளுக்கு ஆவிகள் போகின்றன. ஆவிகளால்தான் தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன."

"எல்லாம் அதிசயம்தான். ஆமாம், முன் காலத்தில் இருந்த கோவை சென்னை............இவையெல்லாம் என்ன ஆயின?" என்று கேட்டான் சிரஞ்சீவி 1950.

அவ்வளவுதான். ஞானரதமும் காணோம்; புது நகரத்தாரையும் காணவில்லை. பழைய பிரம்பு நாற்காலியும் மூங்கில் மேசையும் தான் இருந்தன.

விரித்துக் கிடந்த செய்தித் தாளில் 'ட்ரூமென் உறுமல்' 'ஸ்டாலின் கர்ஜனை' என்றெல்லாம் தலைப்புகள் இருந்தன. சஞ்சீவி அப்போது நினைத்தது இதுதான்:

"அரசியல் வெறியும் பொருளாசையும் கொண்ட மனிதன், உறவாடுவதை விட்டுவிட்டான். உறுமலும் கர்ஜனையுமே தனக்குரியனவாக எண்ணி, விலங்கினத்தின் ஆட்சிக்கு இடம் கொடுத்துவிட்டான். இந்த விலங்கியலின் கொடிய பிடியிலிருந்து காலதேவதை தப்பினாலல்லவா கி. பி. 2000 மும் புதுநகரமும்...!"

ஒரு பெருமூச்சு விட்டுத் தன் எக்கந்துக்குத் தற்காலிகமாக ஒரு முற்றுப்புள்ளி வைத்தான் சஞ்சீவி.

சென்னை-600 008

தந்தி : "ஆண்டவர்"

பழனி ஆண்டவர் மில்ஸ்

லிமிடெட்,

உடுமலைப்பேட்டை.

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடரீஸ்

பாக்யலக்ஷ்மி & கோ.,

★

20-நெ. முதல் 60-நெ. வரை

ஒற்றை முறுக்கு நூல்கள்

தயாரிக்கிறோம்.

இந்திய மூலதனம்

இந்திய உழைப்பு

இந்திய நிர்வாகம்

★

சிங்கிள் கதிர்கள் 22000 *டப்ளிங் கதிர்கள் 624*

பாக்கெட் பிரஸ்.

பெயர், விலாசம், கடிதம், லேபிள், நிகழ்ச்சிக் குறிப்பு முதலியவைகளை வீட்டிலேயே அச்சடிக்கலாம். நெ. 1 ரூ. 2; நெ. 2 ரூ 2-12-0; ஸ்பெஷல் ரூ. 3-4-0; சிறந்தது ரூ. 4. தபால் செலவு அணு 14.

உயர்ரக கைக்கெடியாரங்கள்.

ஸ்விஸ் தயாரிப்பு 7 ஷு உத்திரவாதம் 5 ஜுவல் குரோமியம் கேஸ் வட்ட ஷேப் ரூ. 14-8-0, சிறந்தது ரூ 15, நீண்ட சதுர குரோமியம் கேஸ் 7 ஜுவல் ரூ. 24, ரோல்டு கோல்டு 15 ஷு உத்திரவாதம் 9 ஜுவல் ரூ. 27, சிறந்தது ரூ. 29, ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ 28, சென்டர் செகண்ட் ரூ. 18. பாக்கெட் வாட்ச் ரூ. 13, அலாரம் டைம்பீஸ் ரூ. 16, சிறந்தது ரூ. 18. தபால் செலவு அணு 14.

சிகார் லைட்டர் ரூ. 3.

புகை பிடிப்பவர்களுக்கு இன்றியமையாதது. நிக்கல் கேஸ். பார்ப்பதற்கு மிகவும் அழகானது. நாட்பட உழைக்கும். இது ஒன்று இருந்தால், தீக்குச்சிகளே தேவையில்லை. விலைகள் நெ. 7 ரூ. 3, நெ. 9 ரூ. 3-12-0, ஸ்பெஷல் ரூ. 5, மிக உயர்ந்தது ரூ. 7. கல் 1 டஜன் ரூ. 1. ஆயில் ரூ. 1-8-0. பாக்கிங் & போஸ்டேஜ் அணு 14.

FRENCH COMMERCIAL STORES (O. S.)

Post Box No. 12216, CALCUTTA—5.

உண்மையான

ஆயுர்வேத மருந்துகளும்

சாஸ்திர முறைப்படி

ஆயுர்வேத சிகிச்சைகளும்

தேவையா?

இவைகளை

ஆர்ய வைத்திய பார்மசி

(கோவை) லிமிடெட்டில்

பெறலாம்.

தலைமை ஆபீஸ் :	கிளை ஆபீஸ் :
கோயமுத்தூர்	**இராயப்பேட்டை**
(டெலிபோன் நெ. 108)	(டெலிபோன் நெ. 84110)

பி. கு.

கோயமுத்தூர் டிஸ்டிரிக்டைச் சேர்ந்த சிங்காநல்லூரில் 40 ஏக்கரா நிலம் கவர்மெண்ட் மூலம் வாங்கியிருக்கிறோம். இங்குச் சீக்கிரத்தில் 'நர்சிங் ஹோம்' ஒன்று ஆரம்பிக்கப் போகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தந்தி: "சுப்ரமணியா"

டெலிபோன் { ஆபீஸ் 176 / பங்களா 146

ஸ்ரீ பாலசுப்பிரமணிய மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

(ஸ்தாபிதம் 1934)

- பிரக்யாதி பெற்ற மில்களில் உத்தமமானது இதுவும் ஒன்று
- இந்த மில்லில் குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே நிர்வாகஸ்தர்களது நோக்கம் - -
- இந்த மில்லில் கைத்தறிகளுக்கும் பவர் தறிகளுக்கும் உகந்த 36-நெ. முதல் 80-நெ. வரை ஒற்றை முறுக்கு நூல் தயாரிக்கப்பட்டு வருகின்றன - -

12,512 கதிர்கள் தொழில் செய்கின்றன.

தேசீய மூலதனம்
தேசீய தொழிலாளர்
தேசீய மேனேஜ்மெண்டு

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசீய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் பங்குதாரர்கட்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

Sri Balasubramania Mills Limited,

Singanallur, Coimbatore.

Managing Agents & Secretaries:

K. Krishnaswamy Naidu & Brother.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
311716
சென்னை-600 008

சேவையே எமது லக்ஷியம்

பயனீர் பயர் & ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து முதலிய எல்லா
விதமான இன்ஷ்யூரன்ஸ்களும் ஏற்று வருகிறோம்.

செல்வாக்கும், திறமையும் வாய்ந்த ஏஜெண்டுகளும் ஆர்கனைசர்களும்
தாராளமான நிபந்தனைகளின் பேரில் தேவை.

விபரங்களுக்கு:— தலைமை ஆபீசுக்கு எழுதுக.

Phone: 209 Gram: "NAIDUBROS"

L. P. KRISHNASWAMY NAIDU & BROS.,
MERCHANTS & CONTRACTORS.
FRASER SQUARE, COIMBATORE.

Agents for:
Messrs. HARRISONS & CROSFIELD, LTD., COCHIN & QUILON. for

FABRICATED STEEL WORKS
Such as TRUSSES, PURLINS etc, etc.

ASBESTOS CEMENT LTD'S
Roofing Materials & Rain water Goods, etc.

S. V. O. C.
Industrial Lubricants, Petrol, Mobiloils, Crude oil, High Speed Diesel Oil, Power Kerosene etc.

GOODLASS WALL LTD'S
Paints, Enamels, Varnishes Distempers Etc.

Dealers in:
ELECTROLUX Refrigerators, Motor Tyres, Tubes, A. D. V. & Trolley Equipments Etc.

Agents for Messrs:
GREAVES COTTON & CO., LTD., for Textiles, Mill Stores and Machinery Parts.

Edited & Published by G. R. Damodaran, B. Sc., Elec., B. Sc., Mech. (Durham) A.M.I.E.E. (London) and Printed at the P. S. G. Industrial Institute Press, Peelamedu. P. O., Coimbatore.

டெலிபோன் நெ. 17

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜி

அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1922-ல்)

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

மூலதனம், ரூ. 16,00,000 வெளியிடப்பட்டு வசூலானது ரூ. 15,02,500.

வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000

2-ம் நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு — கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்

Telephone : 160

PIONEER MILLS, LIMITED,

COIMBATORE, SOUTH INDIA.

SPINDLES — 19280. SPINNERS OF HIGH QUALITY YARN — 40s TO 100s.

Managing Director : G. R. GOVINDARAJULU NAIDU.